
KALKI 23-12-79
90 காசு
கல்கி

ஒரு முழுமையான சுவை அனுபவத்தை எங்களைத் தவிர வேறு யாரால் தர இயலும்

ஆம், சுவையான ட்ரு பிஸ்கட்களைச் சுவைப்பதே தனி இன்பம், பல்சுவையும், மொரமொரப்பும் கொண்ட ட்ரு பிஸ்கட் வகைகளை அடிக்கடி சுவைக்கும் ஆசையை யாராலும் அடக்க முடியாது. முழுமையான இயற்கை உட்பொருளான தேன், குளுகோஸ், பால்-பவுடர், ஏலக்காய் சத்து, புத்தம் புதிய முற்றிய தேங்காய் முதலியவற்றைக் கொண்டு, நீண்ட பல பரிசோதனைக்குப்பின் தயாரிக்கப்படுவதால்தான் சீரிய பலவகைகளில் உங்களுக்கு கிடைக்கிறது ட்ரு பிஸ்கட்கள்.

தேன்-குளுகோஸ்

புஷ்டியான தித்திப்புச்சுவைதரும் தேன்-குளுகோஸ் பிஸ்கட் போதுமான அளவு தேனும் திரவ குளுகோசும் கலந்தது. ஒவ்வொரு பாக்கட்டும் 350 கலோரி சக்தியை அளிக்கிறது.

நீஸ்

சுவையான தேங்காய் பிஸ்கட் நீஸ். தேங்காயின் இயற்கைச் சுவையை உங்களுக்கு அளிப்பதற்கென்றே தாராளமாக புத்தம் புதிய முற்றிய தேங்காய் சேர்க்கப்படுகிறது.

ஏலக்காய் 'கஸ்டார்ட்' க்ரீம்

நினைத்தாலே நாவூறும், இயற்கையான ஏலக்காய் கலந்த, சுவையான கிரீம் பிஸ்கட், எந்த வகையில் பார்த்தாலும் சிறந்த கிரீம் பிஸ்கட் இதுதான்.

மாரி

காபி, டீ வேளைகளில் சேர்த்துச் சாப்பிடும் மிதமான தித்திப்புக் கொண்டது இது. எந்தவகை பானத்துடனும் சேர்த்துச் சாப்பிட மிகச் சிறந்தது.

மேலும் பல வகைகளும் உண்டு

மேற்சொன்ன எல்லாவகை பிஸ்கட்களுமே உயர்தர பாக்கிங் பொருட்களைக் கொண்டு பாக் செய்யப்படுகிறது.

பிஸ்கட்டின் மணம், மொரமொரப்பு, புத்தம் புதுத் தன்மை கெடாமல் இருக்கும் பொருட்டு மிக அதிக விலையுள்ள செலஃப்பேன் (Cellophane) பேப்பரை பிஸ்கட்கள் மீது படும்படியாக பாக்கிங் செய்வதில் அதிக அளவு உபயோகப்படுத்தும் ஒரே தயாரிப்பாளர் நாங்கள்தான்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் முழுமையான சுவையூட்டும் ட்ரு பிஸ்கட் வகைகளைச் சுவைத்து அதன் சீரிய நல்ல தன்மைகளை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.



ட்ரு பிஸ்கட்கள்



நான்கு அகில உலக "மாண்டே" மெடல்களைப்பெற்றது.

AUROFOOD

தயாரிப்பாளர்:
அரோஃபுட்
இந்தியாவின் மிகநவீனமான மாவு மில்லும்,
பிஸ்கட் பாக்டரியும்
இணைந்ததொழிற்கூடம்

Headstart/ATM/104


Kalki Shopping Page



2 பேண்டு
தாபி
டீலக்ஸ்
பேட்டரி/மெயின்ஸ்
நெல்கோ
டாடா தயாரிப்பு

AUTHORISED DEALER :

ELITE RADIOS
17, Ranganathan Strreet,
Madras-600 017 Ph: 445649



2 பேண்டு
புல்லெட்
நெல்கோ
டாடா தயாரிப்பு

AUTHORISED DEALER:


VAUHINI RADIO & ELECTRICALS
19, Woods Road, Express Estate,
Madras-600 002 Ph: 88029

பண்டிகைக்
காலங்களில்
நாகரீகத்தின்
சிகரம்...

பிரிண்டட் சில்க்,
காஞ்சீபுரம், பனாரஸ்,
கத்ஜிஸ், மணிபுரி
மற்றும் தான்சேயி

எம்பிராய்டெர்ட்
செய்யப்பட்ட புடவைகள்,
பட்டு ஆர்கன்ஸாஸ்,
சிஃபான்ஸ், மற்றும்
சாட்டின்-சிஃபான்ஸ்.

அமெரிக்கன்-ஜார்
ஜெட்டுகள்,
ஜாரி-கோட்டாஸ்
மற்றும் பற்பல திணுசுகள்.



கலா மந்திர்
பண்டிகைக் கால புடவைகளுக்கு

அந்நிய நாட்டு
காசோலைகள்
ஏற்றுக்
கொள்ளப்படும்

827, அண்ணாசாலை, சென்னை 600 002 போன்: 89983

national 796

Kalki Shopping Page

Kalki Shopping Page

FREE DEMONSTRATION

NEW
Sumeet
Kitchen Machine
400 Watts 30 Mins.Rating
230 V AC/DC



between
5-00 & 7-30 p.m.
on Friday & Saturday

at VIVEK AGENCIES
133, Royapettah High
Road Mylapore
Ph: 76661, 76923.
20/, Purasawalkam
High Road, Madras
Ph; 662462, 663545

1195

Nambisan's
Pure Ghee

FOR ABISHEKAM
AND POOJA OF
SRI LORD AYYAPPAN.



NAMBISAN'S DAIRY PRIVATE LTD
MADRAS-600 028.
Plant: Uttukuli R.S.,
Coimbatore Dist.

பண்டிகை மற்றும் திருமண விழாக்காலங்களுக்கு

காஞ்சி சில்க் பாலஸ்

அளிக்கும்

காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம்

கண்கவர் **அசல் பட்டுச் சேலைகள்**

நவீன ரகங்கள் • கவர்ச்சி மிகு வண்ணங்கள் உயர்ந்த தரம் • நீடித்த உழைப்பு
விலையோ நியாயமானது.

அனைத்து விழாக்கால பரிசளிப்பிற்கு உகந்தது.

எல்லா பிரபல மில்துணி வகைகள், கைத்தறி துணி ரகங்கள் நிறைந்த இடம்.



VSB

காஞ்சி சில்க் பாலஸ்


6/53, பாண்டி பஜார், தி.நகர், சென்னை-600017.

எல்லா சேலைக்கும் ஏற்ற ரவிக்கை வகை கிடைக்கும்

Kalki Shopping Page



கிறிஸ்துமஸ் கதம்பம்



மிகச் சிறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து

உலகிலேயே மிகச் சிறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை 1929ம் ஆண்டு 8ம் எட்வர்டு மன்னருக்கு அளிக்கப்பட்ட வாழ்த்து அட்டைதான். ஓர் அரிசியின் மீது இந்த வாழ்த்து எழுதப்பட்டிருந்தது! பூதக் கண்ணாடி கொண்டுதான் இந்த வாழ்த்தைப் படிக்க வேண்டும்!

கிறிஸ்துமஸ்

ஏசு கிறிஸ்து பிறந்த நாள் தொடக்க காலத்தில் 'ஒளி விருந்து' என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. அதற்குக் 'கிறிஸ்துமஸ்' என்று பெயர் கொடுத்தவர் 'டே' என்ற பெண்மணி. இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

கிறிஸ்துமஸ் வாழ்த்து

கிறிஸ்துமஸ் பண்டிகையை யொட்டி நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் நாம் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை அனுப்புகிறோம். முதன் முதலில் 1843ல்தான் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் தோன்றின.

தொடக்கத்தில் இந்த வாழ்த்து அட்டைகளில் வெறும் வாக்கியங்கள் மட்டும்தான் இருந்தன. பின் 1862ல்தான் படங்களோடு சேர்ந்த வாழ்த்து அட்டைகள் வெளிவந்தன.

மிகவும் உயர்ந்த வாழ்த்து

24–12–1968ல் சந்திர மண்டலத்தில், அப்பல்லோ-8 விண்வெளிக் கப்பலிலிருந்து போர்மன், ஆண்டேர்ஸ், லவல் ஆகிய மூவரும் பூமியில் உள்ளவர்களுக்குக் கூறிய கிறிஸ்துமஸ் வாழ்த்துத்தான் மனிதர்கள் மிகவும் உயரத்திலிருந்து கூறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து!


கிறிஸ்துமஸ் தாத்தா

கிறிஸ்துமஸ் பண்டிகை என்றால் கூடவே கிறிஸ்துமஸ் தாத்தாவின் நினைவும் வந்து விடும்!

கற்பனையில் இருந்த கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு உருக் கொடுத்தவர் கிளமெண்ட் கிளார்க்மூர் என்ற அமெரிக்கர்.







அடுத்த வாரம்



BLOW UP: புரூஸ்லீ

1822ல் இவர் கிறிஸ்துமஸ் தாத்தாவின் உருவத்தை வரைந்தார்.

அமெரிக்காவில் உள்ள 'இன்டியானு' என்ற இடத்தில் மட்டும்தான் கிறிஸ்துமஸ் தாத்தாவின் உருவச் சிலை இருக்கிறது.

இது 1875ல் அமைக்கப்பட்டது. உயரம் 22 அடி. எடை 40 டன்!

கிறிஸ்துமஸ் மரம்

வீட்டுக்குள் கிறிஸ்துமஸ் மரத்தை நட்டு, விளக்கு அலங்காரம் செய்யும் வழக்கத்தை முதல் முதல் உண்டுபண்ணினவர் மார்ட்டின் லூதர்.

இங்கிலாந்தில் இந்த வழக்கத்தைப் பரப்பினவர் ஆல்பர்ட் இளவரசர். இவர்தான் குழந்தைகளுக்காக 1841ல் அரண்மனையில் ஒரு கிறிஸ்துமஸ் மரத்தை நாட்டி, அதில் பரிசுப் பொருள்களைத் தொங்க விட்டார். மரத்தைச் சுற்றிலும் மெழுகுவர்த்திகள் ஏற்றி அலங்கரித்தார். ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இவ்வாறு செய்து வந்தார்.

இன்று இந்த வழக்கம் இங்கிலாந்து முழுவதும் பரவியதோடல்லாமல், உலகம் முழுவதுமே பரவிவிட்டது!

கிறிஸ்துமஸ் பரிசு

கிறிஸ்துமஸ் அன்று நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கிறிஸ்துமஸ் பரிசுகள் கொடுப்பது வழக்கம். முதலாம் எட்வர்ட் மன்னருக்குப் பிரெஞ்சு நாட்டு மன்னர் ஒருவர் கிறிஸ்துமஸ் பரிசாக ஒரு யானையைப் பரிசாக அனுப்பி வைத்தார்!

கிறிஸ்துமஸ் கீதம்

'கிறிஸ்துமஸ் கீதம்' என்பது உலகப் புகழ் பெற்ற ஒரு நூல். இதை எழுதியவர் சார்லஸ் டிக்கன்ஸ்.

இந்நூல் வெளிவந்த அன்றே இதன் முதல் பதிப்பு முழுவதும் விற்பனையாயிற்று!

இதன் கையெழுத்துப் பிரதி இப்போது நியூயார்க் நகரத்தில் கலைக் கூடத்தில் இருக்கிறது.

கிறிஸ்துமஸ் தபால் தலை

இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஹாலந்து, சுவிட்ஜர்லாந்து, ஹங்கேரி, கியூபா, பின்லாந்து முதலிய நாடுகள் ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் தபால் தலைகள் வெளியிடுகின்றன.

கிறிஸ்துமஸ் இரகசியம்

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து ஏசு உலகத்தில் வந்தார். (1 தீமோத்தேயு 1: 15)

தொகுப்பு : **என். எஸ். நாதன்**

விபுலாநந்தர் தபால்தலை



இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்தவர் சுவாமி விபுலானந்தர். தமிழ் மொழியில் அங்கு ஆழ்ந்த புலமை பெற்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றவர். ராஜாஜி தமிழக முதலமைச்சராக இருந்தபோது கலைச் சொல் ஆக்கக் குழு தலைவராகவும் பிற்பாடு கல்கத்தாவில் பிரபுத்வ பாரதம் என்னும் ஏட்டின் ஆசிரியராகவும் திகழ்ந்தவர். விஞ்ஞானத் துறையில் ஆழ்ந்த தேர்ச்சி பெற்றவர். மயில்வாகனம் எனும் இயற் பெயர் கொண்ட இவர் சென்னை மயிலாப்பூரில் உள்ள ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து, தமது 30வது வயதில் துறவியாக மாறியதும் சுவாமி விபுலானந்தரானார். 'ராமகிருஷ்ண விஜயம்' 'வேதாந்த கேசரி' என்ற இரு சஞ்சிகைகளைப் பதிப்பித்த பெருமையும் விபுலானந்தருக்கு உண்டு.

இவரது சாதனைகளிலே மிகச் சிறந்தது இசைத் தமிழுக்கு 'யாழ் நூல்' எனும் பொக்கிஷத்தை எழுதி அளித்தது ஆகும்.

இலங்கை அரசின் தபால் தந்தி இலாகாவினர் இம்மகானுக்கு அஞ்சலி செய்யும் விதமாகத் தபால் தலை வெளியிட்டது ஒரு சிறப்பான செயலாகும். இலங்கையில் பிறந்து, தமிழகத்தில் வாழ்ந்து பெருமைகள் பெற்று, மறுபடியும் இலங்கை திரும்பி, பல துறைகளில் சிறப்புற்று வாழ்ந்த ஒரு மேதையை இம்மாதிரி கௌரவிப்பது இந்தியா இலங்கை நல்லுறவுக்கு மேலும் சிறப்பைச் சேர்க்கிறது.

—ரங்கா

● ராஜாஜி மலர் கண்டேன். பரவசமானேன். பக்கத்துக்குப் பக்கம் மாமேதை மணிமொழிகள் தொகுத்த எஸ். வி. எஸ். மிகவும் பாராட்டுக்குரியவர். பிரதமரிடமிருந்து பெற்றுப் பிரசுரித்துள்ள விசேஷக் கட்டுரை சிறப்பு வாய்ந்தது. தங்களின் விசால மனப்பான்மையையும் காட்டுகிறது. மீ. ப. சோமு கட்டுரை உள்பட எல்லாமே நன்றாக உள்ளன.
இராசை த. இராமமூர்த்தி

● ராஜாஜி பற்றிய 'என்று காண்போம் இனி' தலையங்கம் ஒவ்வொரு வரியும் அருமை! புதுமைப் பாணியில் அமைந்துவிட்ட தலையங்கத்தை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை! இந்த இதழின் இன்னொரு சிறப்பு அம்சம் அருமையான மூன்று கார்ட்டூன்கள்! அதிலும் கருணாநிதி பற்றிய கப்பல் கார்ட்டூன் அற்புதம்!
சென்னை—4 இராம நிலாசேகர்

● ஓரம்போ போன்ற திரைப் பாட்டை ரசிக்கும் இளைய தலைமுறையினரிடையே ''மூதறிஞர் ராஜாஜி'' அவர்களை ஆறு கோணங்களில் விமரிசிக்கும் ஆற்றலும் உண்டு எனக் கண்டு ஆனந்தம் கொண்டேன்.
மன்னார்குடி ரெ. துரைராஜ்

● இராஜாஜி அவர்களைப் பற்றி சரண்சிங் மதிப்பீடுகளைப் படித்தேன். காந்திஜியைப் பற்றி ராஜ்நாராயணனின் மதிப்பீடுகளை எதிர்பார்க்கிறேன். — நல்ல தமாஷ்!
நெல்லை சுப. அரங்கநாதன்

● முரசொலியில் மு. க. தங்களைத் தாக்கி எழுதிய கடிதத்தைக் கல்கியில் அவரது போட்டோவுடன் வெளியிட்டது உயர் பண்பு. ரா.கி.யின் பின்னே கி.ரா.தான் என்று நன்கு நிரூபித்துவிட்டீர்கள். உங்களுக்குப் போய், இன்றைய அம்மையாரின் தாசர், கல்கி கிருஷ்ணமூர்த்தியின் நல்ல மரபுகளைப் பற்றி உபதேசிப்பதைக் காணச் சிரிப்புத்தான் வருகிறது.
சென்னை—4 வெ. முத்துகிருஷ்ணன்

● கலைஞர் கருணாநிதியின் வாசகங்களைக் கண்டு அதிர்ச்சியுற்றோம். என்றைக்குமே கட்சி சாரா நடுநிலைமையிலிருந்து வழுவாத பண்பட்ட இலக்கிய ஏடான 'கல்கி' எம்.ஜி. ஆருக்கு துதி பாடுவதாக அவர் கூறியிருப்பது முற்றிலும் வருந்தத் தக்கது. இதே 'கல்கி' பலமுறை எம். ஜி. ஆர். அரசைக் கண்டித்தும் இருக்கிறது. பாவம் கருணாநிதி! மற்ற ஏடுகள் போல் அவருக்கு 'ஜால்ரா' போட கல்கி இல்லையென ஏங்குகிறார் போலும்.
சென்னை—11 எம். ஜே. சேதுராமன் மற்றும் நண்பர்கள்

● 'கப்பல் பேர ஊழலைக் கூறினால் கண்ணப்பன், மாதவனைப் பற்றி நாயுடு கமிஷன் கூறியது என்ன?' என்று கல்கி கூறுவதாகக் கலைஞர் புலம்புகிறார். ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதும் விசாரணைக்கு முன்வந்த இன்னாள் முதல்வர் எங்கே? தம் ஊழலை மறைக்க மற்றவர்கள் மீதும் (கல்கியையும் விட்டுவைக்கவில்லை) ஊழல் கூறும் முன்னாள் முதல்வர் எங்கே? இருவரையும் உள்ளபடியே தரம் பிரித்துக் காட்டிய கல்கியிடம் என்ன குறை காண முடியும்?

மேலும் கண்ணப்பன், கமிஷனின் தீர்ப்பை மறுத்ததன் மூலம் 'கல்கி'யின் மீது கரி பூசப் பட்டுவிட்டதாகக் கலைஞர் நினைத்துக்கொள்கிறார். விசாரணை மூலம் ஆதாரங்களுடன் கூறப்படும் கமிஷனின் தீர்ப்புக்குத் தனி மனிதரின் (கண்ணப்பன்) மறுப்பு வெறும் சப்பைக்கட்டுதான். தைரியமிருந்தால் கமிஷன் முன் வந்து சாட்சி கூறியிருக்க வேண்டும். ''கண்ணப்பன் குறுக்கு விசாரணையைத் தவிர்த்தார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருந்தால் சதித் திட்டம் முழுதும் அம்பலமாகியிருக்கும்'' என்றும் கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது. ஆதலால் கல்கியைச் சாடுவதன் மூலம் தம் முகத்தில்தான் கரி பூசிக்கொள்கிறார் கலைஞர்.
தஞ்சாவூர் எஸ். சாந்திபூஷன்



சிரிப்புக் கலைஞர்!

● செல்வமணி எழுதிய போட்டிக் கதைக்குப் படம் வரைந்த ஓவியர் ஜமாலுக்கு டென்னிஸ் ஆட்டம் தெரியாதா? டென்னிஸ் வீரரிடம் பாட்மிண்டன் மட்டையைக் கொடுத்திருக்கிறாரே!
ஆழ்வார் திருநகர் ச. கண்ணன்

● அமைதிப் பள்ளத்தாக்கில் வாழும் சிங்க வால் குரங்கின் படம் அற்புதமாக இருந்தது. கை சூப்பும் அதன் அழகில் மயங்கிப் போனேன்.

இன்னும் கை சூப்பும் பழக்கத்தை விடாமல் இருக்கின்ற என் குழந்தைகள் சங்கரும் விஜியும் அதைப் பார்த்து இனிமேல் கை சூப்பமாட்டோம் என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள்!
கோழிக்கோடு அழகணர்





எனது வோட்டு இந்திரா காங்கிரஸ்—தி.மு.க. கூட்டணிக்கே!

பத்மா கோபாலன்

அரசியலில் அண்மையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நியூ டெல்லி எண் 12 வெலிங்டன் கிரஸெண்ட் இல்லத்துக்குள் அதிவேகமாக நுழைந்தார் கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள். இந்திரா காந்தி அம்மையார் திகைப்புடன், 'என்ன கலைஞரா? என்ன அதிசயம், என்ன வேண்டும்?' என்றார்கள். கலைஞர் புன்னகைத்த வண்ணம், ''தேர்தல் வந்திருக்க. ஆசையில் ஓடிவந்தேன்'' என்றார். தலைவி இந்திரா காந்தி அவர்களும் ஒரு நொடியில் தம்மைச் சுதாரித்துக்கொண்டு ''நானே நானா? யாரோதானா? மெல்ல மெல்ல மாறினேனா?'' என்று பாடலாரம்பித்தார். முடிவு அனைவருக்கும் தெரிந்ததே. தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் — தி.மு.க. கூட்டணி பூர்வாங்கமாக உருவெடுத்தது. இதன் பின்னரே தமிழக அரசியலில் பல சலசலப்புகள் ஏற்பட்டன. பொருந்தாத கூட்டு என்று பலர் சாடினர். அரசியலில் நிரந்தரப் பகையுமில்லை நட்புமில்லை என்பது கூற்று. எனவே இதனை ஓர் ஆக்கபூர்வமான, ஆணித்தரமான பலமிக்க கூட்டணி என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதைக் காலம் கட்டாயம் தேர்தல் முடிவுகளின்மூலம் தெரிவிக்கும் என்பது திண்ணம்.

• • •

எமர்ஜென்சி அரசை முடிவுக்குக் கொண்டு வந்த பாரத மாதாவின் தவப் புதல்வர்கள் ராஜ்காட்டில் காந்தி சமாதியில் சூளுரைத்துக் கொண்ட பின்னர் ஜனதா அரசை நிறுவினார்கள். 'சர்வாதிகாரி இந்திரா தொலைந்தாள். இனி மக்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. விலைவாசிகள் மளமளவென்று இறங்கப் போகின்றன' என்று அன்று மக்கள் கண்ட கனவு 'தேய்ந்த கனவாகி'விட்டது. பதவியிலிருந்த காலமெல்லாம் இந்திரா மீது அவதூறு கறுப்புப் பூனையை இருட்டறையில் தேடிய படலங்கள், ஓயாத கமிஷன்கள், ஒழியாத சச்சரவுகள், இல்லுமுல்லுகள், திருகுதாளங்கள், செப்பிடு வித்தைகள், அரசியல் மேடையில் நகைச்சுவை நடிகரின் (ராஜ்நாராயண்) நவரச நடிப்புக்கள், தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில் ஒரு தறுதலை நிர்வாகம் தலைவிரித்தாடியது. முடிவில் ஜனதாவின் பீஷ்மர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் துயரத்துடன் வெளியேற வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. அமரரான லோகநாயகரும் அன்று கண்ணீர் வடித்தார்.

ஜனதா ஒரு 'நெல்லிக்காய் மூட்டை' என்று அன்றே இந்திரா கூறிவிட்டார். கடந்த பல மாதங்களாக இம்மூட்டை, இந்திரா காந்தி நினைவாலும், அவர் கை ஓங்கிவிடுமோ என்ற பீதியாலும் பிணைத்துக் கட்டப்பட்டிருந்ததுபோலும்! அஸ்திவாரமற்ற அமைப்பு எத்தனை காலம் இயங்க முடியும்? திரு சவானின் (நம்பிக்கையற்ற) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் மூட்டை அவிழ்ந்து நெல்லிக்காய்கள் உருண்டோடிவிட்டன.



நாற்காலி நப்பாசை கொண்ட சரண் சிங் கட்சி மாறி முடிவில் காபந்து பிரதம மந்திரியாகப் பணியாற்றும் கேலிக்கிடமான அரசியலை நமது நாட்டில்தான் காண இயலும்! 'இளைஞன்' ப்ரைமினிஸ்டருக்கு 'குர்சி'யில் அவ்வளவு ஆசை!

• • •

இத்தனை கால ஜனதாவின் குழாய்ச் சண்டை அரசியலும், மத்திய சர்க்காரின் ஸ்திரமற்ற தன்மையும், கட்சி மாறிகளின் கன்னா பின்னா அரசியலும் (முதலில் திரு கன்னா ராஜினாமா செய்தார். பின்னால் எல்லாம் சிதறுண்டு போயிற்று.) மக்களை மீண்டும் சிந்திக்கத் தூண்டியது. இந்திராவின் அலை வீசி வருவதை யாரும் மறுக்க முடியாது. பதவியில் இல்லாத சீரழிந்த நிலையிலும் அவரைத்தான் 'கன்னா பின்னா' அரசியல்வாதிகள் பலமுறை தங்களுக்கு

யாருக்கு வோட்டு?

ஒவ்வொன்றும் ரூ100/- பரிசு பெறும் கட்டுரைகள்

ஆதரவு தருமாறு நாட வேண்டியதாயிற்று. நாட்டில் ஒரு ஸ்திரமான அரசை நிறுவி மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல இந்திரா ஒருவரால்தான் முடியும். அவர் அன்னை தெரஸாவாக இல்லாமல் இருக்கலாம். அனுபவமிக்க, ஆற்றல் மிக்க தேசியத் தலைவி என்பதை யாரும் மறுக்க முடியாது. அரசியல் சதுரங்கத்தில் 'ராணியாக' அமர்ந்து அரசியலை நன்கு நடத்தத் தெரிந்தவர் அவர் ஒருவரே. இதனை நன்குணர்ந்த கலைஞர் இந்திராவின் கூட்டை வலியச் சென்று ஏற்றார். அரசியல் இலாப—நட்டக் கணக்கைப் பார்த்தால் ஒருகால் கலைஞருக்குத்தான் ஏற்றமாக இருக்கலாம் ஆனால் மத்தியில் ஸ்திரமான, பொறுப்பான அரசு அமைக்க இந்திராவின் தலைமையே பெரிதும் தேவை என்பதை நன்கு உணர்ந்த கலைஞர் செயல்பட்ட விதம் ராஜ தந்திரத்தில் (Political strategy) அவருக்கு நிகர் எவருமில்லை என்பதைத் தெள்ளென விளக்கும். தமிழகத்தில் அடுத்தபடியாக அ-இ-அ-தி.மு.க.வை எடுத்துக் கொள்வோம். காபந்து சர்க்காரில் தனது கட்சி அங்கத்தினர்கள் பொம்மை மந்திரிகள். இதே சமயம் ஜனதாவுடன் கூட்டு. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எண்ணும் வலது சாரி, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினரிடமும் கடைக்கண் பார்வை. (Promising every thing to every body) கலைஞரிடம் இத்தகைய விளக்கெண்ணெய் படிந்த குழப்ப அரசியல் இல்லை. தீவிரமாகச் சிந்தித்தார். செயல்பட்டார். நினைத்ததைச் சாதித்தார். இந்திராவின் கரங்களை வலுப்படுத்தி வருகிறார். பழைய 'கெட்ட கனவை' மறந்தார். மத்திய அரசியலில் பௌர்ணமி நிலவை எதிர்பார்க்கிறார். இதனைத் தமிழக மக்கள் வரவேற்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் விமோசனம் ஏது? ஒன்று நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்திரா வெற்றி பெற்றால் நாடு உய்யும். எல்லா மட்டத்திலும் மக்கள் ஓரளவு நன்மை பெறுவார்கள். நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவும். அவருடைய பழைய எமர்ஜென்சி அரசு கட்டாயம் அவராலேயே குழி தோண்டிப் புதைக்கப்படும். எமர்ஜென்ஸி காலத்தில் கைகேயியாகக் கற்பனை செய்யப்பட்டவர் இன்று கோசலையாகவும் மாறக் கூடும். தமது அவப் பெயரை நீக்கி, அரும்பாடுபட்டு நல்ல தார்மீக அரசியலை மத்தியில் அவர் நடத்துவார் என்பது எதிர்பார்ப்பு. (Phoenix from fire) அவ்விதமே கலைஞரும் சந்தர்ப்பம் கிட்டினால் தமிழக அரசை செவ்வனே நடத்த முடியும்!



தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல. இந்திரா காங்கிரஸ் — தி.மு.க. கூட்டணிக்கே தங்கள் பொன்னான வாக்குகளை ஏராளமாக அளிக்கப் போகின்றார்கள்.

லோக் தளத்துக்கே!

பி. ஆர். எஸ்.

தேர்தலில் போட்டியிடும் மூன்று அணிகளின் முன்னணிக் கட்சிகளை மட்டும் எடுத்துக்கொண்டால் முதலில் இந்திரா காங்கிரசை நிராகரிப்பது சுலபம்; அவசியமும் கூட. இதற்கு நீளமான வாதங்கள் தேவையில்லை. இந்திரா அண்ட் கம்பெனிகளின் மோசடிகளைப் பற்றி நீதிபதிகள் ஷா, ஜகன்மோகன் ரெட்டி, குப்தா ஆகியோர் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து கூறியிருப்பவை இந்திரா காந்தியின் கொடுங்கோல் ஆட்சியைப் பற்றி ஒரு கோடி காட்டுகின்றன. இதற்கும் மேல் சஞ்சய் காந்தியின் மீது திருட்டுக் குற்றம் கோர்ட்டில் நிரூபணமாகித் தண்டனையும் வழங்கப் பட்டிருக்கிறது. வெளியே தலை காட்டத் தயங்கிய சஞ்சய், பன்சிலால், சுக்லா ஆகியோரை முன்நிறுத்தித் தமது அரசியல் போக்கு எப்படி இருக்கும் என்பதை இந்திரா தெளிவாக்கி வருகிறார். இதற்குப் பிறகும் இவர் கட்சிக்கு ஓட்டளிப்பது என்பது விக்ரகக் கடத்தல் செய்பவரைக் கோயில் பூசாரியாக நியமிப்பது போலத்தான்.

எனவே விவரம் தெரிந்தவர்கள் தீர்மானிக்க வேண்டியது ஜனதாவா, லோக்தளமா என்பதுதான்.

ஜனதா பிளவுக்கான உண்மையான காரணங்கள் மூன்று. 1. ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றத் திட்டமிட்ட ஜனசங்கத்தின் முயற்சிகள்; 2. ஜனதாவில் ஊடுருவிய ஜகஜீவன்ராம், சந்திரசேகர் போன்ற காங்கிரஸ்காரர்களின் பேராசை; 3. மொரார்ஜி தேசாய், சந்திரசேகர் இவர்களின் சர்வாதிகாரப் போக்கு.

இந்த மூன்றும் துவக்கத்திலிருந்தே ஜனதாவின் மீது கருநிழலாகப் படிந்து வந்தன. துவக்கத்திலிருந்தே சரண்சிங்கைக் கட்சியிலிருந்து வெளியேற்ற சந்





திரசேகர், ஜகஜீவன்ராம் போன்ற காங்கிரஸ் காரர்கள் சதி செய்தனர். இதற்கு ஆதாரம் இன்றைய ஜனதாவின் தீவிர ஆதரவாளரான 'சோ'வின் துக்ளக், பிக்விக் பத்திரிகைகளே! அத்துடன் எல்லாக் கட்சிகளிலுமிருந்த காங்கிரஸ் காரர்களுடன் சந்திரசேகர் ஆரம்பத்திலிருந்தே தொடர்பு வைத்துப் பேசிக்கொண்டிருந்தார். ஜனதாவைக் காங்கிரசாக மாற்றித் தாங்கள் ஆதிக்கம் செலுத்துவது இவர்களின் திட்டம்.

ஜனதாவில் தன்னை எதிர்க்கக் கூடிய ஒரு பலமான அமைப்பான பி. எல். டி. பிரிவை முறியடிக்க ஜனசங்கம் முயன்றது. உ. பி. பீகார், ஹரியானா, ஒரிஸ்ஸா அரசுகளைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதை தேசாய், சந்திரசேகர், ஜகஜீவன்ராம் மூவரும் பலமாக ஆதரித்தனர். பீகாரில் அதிருப்தியாளர்கள் நடத்திய நரோரா முகாமில் சந்திரசேகர் கலந்து கொண்டார். உ.பி.யில் ராம் நரேஷ் யாதவ் அரசு முந்தைய காங்கிரஸ் அரசை விட மோசமாகச் செயல்படுவதாக ஜகஜீவன்ராம் பகிரங்கமாகக் கூறினார். ஹிமாசல் பிரதேச முதல்வரைக் குறை கூறியதற்காக ராஜ்நாராயணை டிஸ்மிஸ் செய்த தேசாய்க்கு ஜகஜீவன்ராமின் இந்தப் பேச்சு தவறாகப் படவில்லை. கர்னல், அஜம்கார், வக்னோ, உபதேர்தல்களில் சரண்சிங் சார்பு வேட்பாளர்களுக்கு எதிராக ஜனதா கட்சியினரே வேலை செய்தார்கள்.

ஜனதா பார்லிமெண்டரி போர்டு உ.பி., பீகார், ஹரியானா, ஒரிஸ்ஸா முதல்வர்களை நம்பிக்கை வோட்டுக் கோரும்படி திரும்பத் திரும்பப் பணித்தது. ஆனால் ராஜஸ்தான், ம. பி., அஸ்ஸாம் மாநில அதிருப்தியாளர்களை அலட்சியம் செய்து அந்த முதல்வர்களை ஆதரித்து நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக ஹரியானா சட்ட சபை ஜனதா கூட்டத்தை டில்லியில் கூடச் செய்து சர்வாதிகாரப் போக்கில் இந்திராவை மிஞ்சி நின்றது ஜனதா தலைமை.

கடைசியாக, தி. மு. க. கப்பல் ஓட்டையானதும் அதைக் கைவிட்டு ஓடிவந்த செழியனின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக் கமிட்டி ஜனதாவை உருவாக்கியவர்களில் ஒருவரான ராஜ்நாராயணைத் தேசிய நிர்வாகக் குழுவிலிருந்து விலக்கியது. ஆனால், உ. பி.யில் இந்திரா காங்கிரசுடன் சேர்ந்து ஜனதா அரசுக்கு எதிராக ஓட்டளித்த ஜனசங்க, ஜகஜீவன், மொரார்ஜி ஆதரவு எம். எல். ஏக்கள், மற்றும் கட்டுப்பாடு மீறியதாக சரண்சிங் ஆதரவாளர்களால் சுட்டிக்காட்டப்பட்ட பலர் மீது ஒரு கண்டனம்கூட இல்லை. ராஜ்நாராயணைத் தண்டிப்பதில் காட்டிய அக்கறையில் பத்தில் ஒரு பங்கு கூட இந்திராவைத் தண்டிப்பதில் இவர்கள் காட்டவில்லை.

ராஜ்நாராயண் கட்சியிலிருந்து ராஜினாமா செய்ததும், கட்சித் தலைவரோ, காரியக் கமிட்டியோ முடிவு செய்வதற்குக் காத்திராமல் ராஜ்நாராயணின் ராஜினாமா ஏற்கப்பட்டதாகப் பிரதமர் தேசாய் அறிவித்தார். அத்துடன் ''பி. எல். டி.யைச் சேர்ந்தவர்கள் கட்சியை விட்டு வெளியேற விரும்பினால் வெளியேறலாம்'' என்று திருவாய்மலர்ந்தார்.

இவ்வளவையும் செய்துவிட்டு சரண்சிங் மீது பழி போடுவது என்ன நியாயம்? அ.இ. அ.தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் பேரம் பேசித் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள நேரம் கொடுக்காமல் அதுவும் எதிர்பாராத அளவு எம். பி.க்களுடன் சரண்சிங் வெளியேறியதுதான் இவர்கள் கோபத்துக்குக் காரணம்.

சரண்சிங் குழு செய்த குற்றமெல்லாம் கட்சியிலிருந்து நேர்மையாக விலகியதுதான்: காங்கிரஸ் வழக்கப்படி, ராஜ்நாராயண் ஒரு கூட்டத்தைக் கூட்டித் தன்னைத் தானே தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, மொரார்ஜி, சந்திரசேகரை டிஸ்மிஸ் செய்து தாங்கள்தான் உண்மையான ஜனதா என்று அறிவித்திருந்தால், நடந்தது 'பிளவு'தான் 'கட்சி மாறல்' அல்ல என்று மொரார்ஜி ஜகஜீவன்ராம், சந்திரசேகர் மூவரும் ஒப்புக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்குத் தெரிந்தது, இவர்கள் பின்பற்றியது இந்த வழி தானே?

பேரும் கட்சி மாறலை எதிர்ப்பதாகச் சொல்லும், ஜனதா, மகாராஷ்டிரத்தில் காங்கிரசிலிருந்து விலகித் தனிக் கட்சி அமைத்த சரத் பவாருடன் எப்படிக் கூட்டுச் சேர்ந்தது? சரத் பவாரும், சரண் சிங்கும் ஒரே மாதிரி தானே நடந்து கொண்டார்கள்? ஆனால் சரத் பவார் தீரர், சரண்சிங் துரோகி!

எல்லாவற்றுக்கும் மேலாக ஆர். எஸ். எஸ். ஜனதா ஆகிய இரண்டு கட்சிகளிலும் எப்படி ஒருவர் உறுப்பினராக இருக்க முடியும்? என்ற அடிப்படையான கேள்விக்கு இதுவரை ஜனதாவிடமிருந்து பதில் வரவில்லை. 'ஆர். எஸ். எஸ். கலாசார இயக்கம் அல்ல; அர

வெள்ளம் + ரயில் = ரயிலாயி

ராமனுதபுர மாவட்டம் பரமக்குடி அருகே பாண்டிக் கண்மாய் என்ற ஊரில் ரயில்வே பாயிண்ட்ஸ் மேனாக ராமன் என்பவர் வேலை பார்த்து வருகிறார். இவரது மகள் முனியம்மாளுக்குத் தலைப்பிரசவம். தாய் வீட்டிற்கு முனியம்மாள் வந்திருந்த சமயத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ரயில்வே காலனியிலும் புகுந்தது. ராமன் உடனடியாகக் குடும்பத்துடன் பாண்டிக் கண்மாய் ரயில் நிலையத்தில் இருந்த ரயில் பெட்டி ஒன்றில் வெள்ளத்திற்காகத் தஞ்சம் புகுந்தார்.

வெள்ளம் தணிவதற்குள்ளாக முனியம்மாளுக்குப் பிரசவலி ஏற்பட்டு, ரயில் பெட்டிக்குள்ளேயே அழகான பெண் குழந்தை பிறந்தது. ரயில் பெட்டியில் பிறந்த குழந்தை ஆதலால் அதற்கு, ''ரயிலாயி'' என்ற புதுமைப் பெயரை ரயில் நிலைய அதிகாரி திரு குருசாமி சூட்டி குழந்தையை வாழ்த்தினார். நன்றி: தினமலர்

— கமுதி திராவிடமணி



சியல் நோக்கம் கொண்ட இயக்கம்' என்று நாக்பூர் நீதிமன்றத்தில் ஆர். எஸ். எஸ். தலைவர் வாக்குமூலம் கொடுத்த பின் ஜனதா கட்சி என்ன சொல்ல இருக்கிறது?

'எங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டசபை, பார்லிமெண்ட் உறுப்பினர்களை உங்கள் வகுப்புக்களில் அனுமதிக்காதீர்கள்' என்று ஆர். எஸ். எஸ்.ஸைக் கெஞ்ச வேண்டிய பரிதாப நிலையில் ஜனதா இருக்கிறது. அத்தகைய கட்டளையைத் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்குப் பிறப்பிக்கும் துணிவு கட்சித் தலைமைக்கு இல்லை. கட்சிக்குள் இன்னும் தீராது இப்போதைக்கு அமுக்கி வைக்கப் பட்டிருக்கும் இரட்டை உறுப்பினர் பிரச்னை தேர்தலுக்குப் பிறகு மீண்டும் கிளம்பி ஜனதா மேலும் பிளவுபடப் போவது நிச்சயம்.

ஜனதாவை நடத்தி வரும் முன்னாள் காங்கிரஸ்காரர்களுக்கு இந்திராவின் பொருளாதாரக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை. இவர்கள் சொந்த விரோதத்தினால் இந்திராவிடமிருந்து பிரிந்தவர்கள்தான். எனவே பி.எல்.டி. கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த ஜனதாவின் கிராமியப் பொருளாதார அமைப்பில் இவர்களுக்கு அக்கறையோ, நம்பிக்கையோ இல்லை. இன்று அந்தக் கொள்கைகளைப் பற்றி நிற்பவர் சரண்சிங்தான். ஜகஜீவன்ராம் போன்றவர்கள் காங்கிரஸ்காரர்களாக மாறி நேருவின் திட்டங்களுக்குப் புகழ் பாடி வருகிறார்கள். காங்கிரஸ் கொள்கை, திட்டங்களுக்கு மாற்றான ஓர் அரசை இவர்களால் எப்படி அமைக்க முடியும்? கொள்கை வேறுபாடு இல்லாமல், சொந்த விருப்பு வெறுப்புகளுக்காகச் செயல்படும் கட்சி நமக்குத் தேவையில்லை.

ஜனதாத் தலைவர்கள் எப்படி? சாதாரணமாக ஓர் அரசாங்க டெண்டரில் பங்கேற்பவர்கள்கூட வருமான வரி செலுத்திச் சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் ஜனதாவின் தலைவர் பத்தாண்டுகள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யாததுடன் தாம் அதை மறந்துவிட்டதாகக் கூசாமல் கூறியவர். கடைசிவரை இந்திராவுக்குத் துணை நின்று, நெருக்கடி நிலையை நியாயப்படுத்தி 20+5 திட்டங்களின் புகழ் பாடிப் பரிசில்கள் பெற்றுவிட்டு, இறுதியில் (இவரே ஒப்புக்கொள்கிறபடி) ஜனதாவின் வெற்றியைக் கணித்துக் கடைசி நிமிடத்தில் கட்சி மாறிய ஜனநாயகவாதி. 30 எம். பிக்களை வைத்துக் கொண்டு மிரட்டிப் பார்த்தும் பிரதமராக முடியாமல் வேறு வழியின்றி ஜனதாவில் தமது கட்சியை இணைத்த கொள்கை வீரர். இன்று பலருடன் பலவித பேரங்கள் செய்துவரும் தடுப்புக்காவல் சட்ட எதிர்ப்பு வியாபாரி!

ஜகஜீவன்ராம் எப்படியும் கட்சி மாறிவிடுவார் என்ற நம்பிக்கையில் மீண்டும் தலைமைப் பதவிக்குக் காத்திருக்கிறார் அரசியலைத் துறந்த காந்தியவாதி தேசாய். சொந்த மாநிலத்தில் கோர வெள்ளம் வந்தபோதுகூட, அங்கு போகக்கூட நேரமில்லாமல், டில்லியில் அரசியல் சதுரங்கத்தில் தீவிரமாக ஈடுபட்டவர் இவர். (இதற்கு முன்பே அரசியலைத் துறந்தும்கூட.) தாம் பிரதமர்



இவ்வாண்டு கிருஷ்ணகான சபாவில் நிருத்திய சூடாமணி விருது பெறும் சுதாராணி ரகுபதி அவர்களை இவ்விதழ் மேலட்டையில் காண்கிறீர்கள். வண்ணப்படம் எடுத்தவர் : உத்ரா

பதவியை விரும்பவேயில்லை என்றும், எல்லோரும் சேர்ந்து ஏகமனதாகத் தம்மைப் பிரதமராக்கிவிட்டதாகவும் இவர் சமீபத்தில் கூறியது இந்த ஆண்டின் தலைசிறந்த காந்திய ஜோக். ''பிரதமர் பதவியை நான் அடைய விரும்பினேன்'' என்று சரண் சிங்கைப் போல் ஒப்புக்கொள்கிற நேர்மை கூட இவரிடம் இல்லை.

மந்திரி சபைக் கூட்டுப் பொறுப்பை மீறிவிட்டார் என்ற குற்றம் சாட்டி சரண் சிங்கை விலக்கியவர் இன்று தமது மந்திரி சபையின் பட்ஜெட்டுக்கான எல்லாப் பொறுப்பையும் சரண்சிங் தலையில் போடுகிறார். இதுதான் இவரது கூட்டுப் பொறுப்பு! இத்தனைக்கும் சரண்சிங்கை நிதி மந்திரியாக்குவதற்குமுன்பே ஏற்கெனவே போடப்பட்டுவிட்ட பட்ஜெட்டில் அதிக மாறுதல் செய்யக் கூடாதென்றும், அவ்வாறு செய்யப்படும் மாறுதல்களுக்குத் தம்மிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்றும் இவர் கூறியது இவருக்கே மறந்துவிட்டது போலும்! சகவாச தோஷம்!

சரண் சிங்கை மீண்டும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளு முன் அவர் கூட்டுப் பொறுப்பை மீறியதற்காக அவரிடம் மன்னிப்போ அல்லது மீண்டும் அவ்வாறு மீற மாட்டார் என்பதற்கான உறுதியோ பெறுவதில் அக்கறை காட்டாமல், தம் மகன் மீதான ஊழல் புகார்களை வாபஸ் வாங்க வேண்டும் என்றே திரும்பத் திரும்ப வலியுறுத்தியதன் மூலம், சரண்சிங்கை நீக்கியதற்கான உண்மைக் காரணத்தை இவ்வளவு பட்டவர்த்தனமாக இந்தக் காந்தியவாதியைத் தவிர வேறு யாரால் ஒப்புக்கொள்ள முடியும்!

மாறாக, லோக் தளத்தைப் பாருங்கள். காங்கிரஸின் கொள்கைகளைக் கண்டித்து அதற்கு மாற்றாக, காந்திஜி, ராஜாஜி ஆகியோர் வலியுறுத்திய கிராமியப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளது இக்கட்சி. எனவே இது கொள்கை அளவிலும் இந்திரா காங்கிரசுக்கு ஒரு மாற்றுக் கட்சி.

எட்டு எம். எல். ஏ.க்களின் வோட்டுக்களுக்காக ஹரியானாவில் பன்சிலால் மீதான வழக்குகளை வாபஸ் பெற்ற ஜனதாவின் சந்தர்ப்பவாத அரசியல் மோசடியுடன், மிக நெருக்கடியான கட்டத்திலும் 'இஸ்லாகுர்னிகா' வழக்கை விசேஷ நீதிமன்றப் பார்வையிலிருந்து அகற்றி, சாதாரண நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற இந்திராவின் சிறிய கோரிக்கையைக் கூட ஏற்க

மறுத்துப் பதவியை இழக்கத் துணிந்த லோக் தளத்தின் நேர்மையை ஒப்பிடுங்கள்:

பல ஆண்டுகள் பொது வாழ்வில் இருந்தும், தம்மீது தூசு படாமல் நடந்து கொண்டிருப்பவர் சரண்சிங். ராஜாஜிக்குப் பிறகு நிர்வாகத்தில் நேர்மை இந்த அளவுக்கு வேறு எந்தத் தலைவரிடமும் இருந்ததில்லை. தமது மகனின் ஊழல்களை மறைப்பதிலேயே நேரத்தைச் செலவிட்ட தேசாயை நேர்மையாளர் என்று கொண்டாடுபவர்கள், சரண் சிங்கைப் பற்றி என்ன கூற முடியும்?

எனவே, ஜனநாயகம், நேர்மையான நிர்வாகம், காங்கிரசின் சோஷலிஸ சேற்றுப் பாதையிலிருந்து ஓர் ஆரோக்கியமான மாற்றம், நம்பிக்கை தரக் கூடிய எதிர்காலம் இவற்றை விரும்புகிறவர்கள் லோக் தளத்துக்கும், அதை ஆதரிக்கும் கட்சிகளுக்கும் ஓட்டளிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஜனதாவுக்கே வோட்டு!

கே. ஜெகநாதன்

நியாயமற்ற முறையில் திணிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற இடைத் தேர்தலில், இன்றுள்ள மூன்று அணிகளையும் சீர்தூக்கிப் பார்ப்போமானால் 77 தேர்தலில் எடுத்த முடிவில் மாற்றம் செய்ய அவசியமே யில்லை என்கிற நிலை சரியே எனப் புரியும்.

இந்திரா என்றாலே நமது நினைவுக்கு வருவது 18 மாத கால இருண்ட கொடுங்கோலாட்சியாகும். தியாகத் தலைவர்களைத் தனிமைச் சிறையில் அடைத்த கொடுமைகள். லட்சக் கணக்கான அப்பாவி மக்கள் பட்ட சித்திரவதைகள். சிட்டி பாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன், கேரள இளம் மாணவன் இராஜன், சிநேகலதா ரெட்டி போன்ற எண்ணற்றவர்களின் உயிர்ப் பலிகள். முடமாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான சகோதர சகோதரிகள். இந்திரா ஆதரவாளர்களின் தர்பார் நடவடிக்கைகள், அதிகார துஷ்பிரயோகங்கள். ஜும்மா மசூதி பகுதியில் குடியிருப்புக்கள் இடிப்பு, கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட எண்ணற்ற இளைஞர்கள், தொழிலாளர்கள் போனஸ் ரத்து, கட்டாய டெபாசிட் திட்டம் போன்ற தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், இந்திராவின் உடந்தையுடன் நடந்த சஞ்சயின் அட்டூழியங்கள். மாருதி ஊழல், நகர்வாலா ஊழல், பாண்டிச்சேரி லைசென்ஸ் ஊழல் போன்ற நீண்ட ஊழல் மலிந்த பதினொரு ஆண்டு கால நிர்வாகம்.

பாரம்பரியம் மிக்க "இந்திய தேசிய காங்கிரஸ்" இயக்கத்தைச் சுயநலத்துக்காக, பதவிக்காக மூன்று முறைகள் பிளவுபடுத்திய சிறுமை. இந்திரா சிறிதும் மாறவில்லை என்பதற்கு அவரது பேச்சும் செயலும் உதாரணம். சஞ்சய் இந்திராவுக்குமிடையேயான நெருக்கமான அரசியல் உறவுகள். நீதிமன்றங்களையும், சட்டங்களையும் மதிக்காத செயல்கள், தன்னையும், சஞ்சயையும் தட்டிக் கேட்பவர்களைக் கட்சியை விட்டே நீக்கும் இழிநிலை. நீடித்த பதவி சுகத்துக்காக ஆட்சியில் இருக்கும்போது அரசியல் சட்டங்களைத் திருத்தியதுடன் கட்சியிலும் அவர் செய்யும் சர்வாதிகார மாற்றங்கள். (பாராளு மன்றத் தேர்தலில் கட்சியில் உயர் பதவி வகிப்பவர்கள் எவரும் போட்டியிடக் கூடாது. ஆனால் தான் மட்டும் தலைவராகவும் இருக்கலாம். தேர்தலிலும் போட்டியிடலாம்.) என்னே ஜனநாயகப் பண்பு! இப்படி ஊழலின் மொத்த உருவமாக, சர்வாதிகாரத்தின் சின்னமாக இருப்பவரையா மீண்டும் தேர்ந்தெடுப்பது?

சரண் சிங் அணியைப் பற்றிப் பெரிதான விமர்சனமே தேவையில்லை. காரணம் 77ல் எந்த எண்ணத்தில் மக்கள் வோட்டளித்தார்களோ அதையெல்லாம் பிரதமராக வேண்டும் என்ற ஒரே பிறவி ஆசைக்காக, நிரந்தரமான தர்மங்களை அழித்து மக்களுக்கும் தனது கட்சிக்கும் துரோகம் செய்தவர். சுய அரசியல் லாபங்களுக்காக 11 முறை ராஜிநாமா செய்த நிலையற்ற கட்சி மாறிகளின் தலைவர். இவரையா ஆதரிப்பது?

இவ்விரண்டும் போக, மூன்றாவதாக எஞ்சியிருப்பது, மோசமான ஆசாமிகள் எல்லாம் வெளியேறிவிடக் கட்டுப்பாடும் கடமைஉணர்வும் மிகுந்துள்ள ஜனதா. நாட்டை நேர்மையாக, காந்திய வழியில் ஆட்சி செய்தால் மட்டும் போதாது. அதை மக்கள் மத்தியில் விளம்பரம் செய்துகொள்ளவும் வேண்டும் என்பதை அறியாமல் போன ஜனதா. அதன் இரண்டரை ஆண்டு கால சாதனைகள் சொற்பமல்ல. பதவி ஏற்றபோது நாடு இருந்த நிலையில் ஒரு திறமையான அரசு என்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் சாதித்தது. இழந்த பேச்சுரிமை, எழுத்துரிமை, நீதிமன்ற பத்திரிகை சுதந்திரங்களை மீட்டுத் தந்தது. ஜனநாயகத்தை நிலைநாட்டியது. எதிர்க் கட்சித் தலைவருக்கும் மந்திரியின் அந்தஸ்தைக் கொடுத்தது. ஏறுமுகமாகவே இருந்த விலைவாசிகள் குறைக்கப்பட்டன அல்லது ஸ்திரப்படுத்தப்பட்டன.

தொழிலாளர்களுக்கு 8.33 சதவித போனஸ், அவசர நிலையில் பிடிக்கப்பட்ட கட்டாய டெபாசிட்டுகளைத் திருப்பித் தருதல் இவைகளின் மூலம் தொழிலாளர் நலனில் அக்

முன்பக்கம் ஏறும் பிரயாணிகளை வாங்கு வந்தபடி கண்டக்டர் இட்டாமல் இருக்க, கண்டக்டருக்கு நீண்டு மடக்கக் கூடிய ஒரு எக்ஸ்டிரா கை வழங்கலாம். அதன் மூலம் முன்பக்கம் ஏறுபவருக்கு இலகுவில் டிக்கட் கொடுக்க முடிவதால் கண்டக்டர் மகிழ்வார்.





அன்றே சொன்னார் ராஜாஜி

களை. முப்பது ஆண்டு கால சரித்திரத்தையே மாற்றிய இரண்டு உபரி ரயில்வே பட்ஜெட்டுகள். இந்திராவின் அதிக்கிரம ஆட்சியில் வேலை இழந்த ஆயிரக் கணக்கான ரயில்வேத் தொழிலாளர்களுக்கு சர்விசுடன் கூடிய வேலை.

26 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு ஒரே ஆண்டில் பாசன வசதி செய்து தரப்பட்டதன் மூலம் விவசாயத் துறைக்கு முன்னுரிமை. அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு தானியக் கையிருப்பில் நிறைவு. மின்சார உற்பத்தியில் மிகப் பெரிய முன்னேற்றம். கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்கு உணவுத் திட்டம். 40 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துக் கிராம மக்களின் வருமானத்தை உயர்த்திட கால்நடை மற்றும் பால் பண்ணைத் திட்டங்கள். கிராமக் குடிநீர் வசதிக்காக 77-79ல் 284 கோடி செலவு செய்தது. கிராமப்புற சிறுதொழில் வளர்ச்சிக்காக மாவட்டக் கேந்திரங்கள் அமைத்தது.

இந்தியா எந்நாட்டுக்கும் அடிமை அல்ல பகைவனுமல்லஎன்று எடுத்துக்காட்டிய வெளி நாட்டுறவு. மாநிலங்களுக்கிடையேயான சுமுகமான மத்திய மாநில உறவுகள். காந்தியக் கனவை நனவாக்கும் வகையில் ஒரு ஹரிஜனை பீகார் முதல்வராக்கியது. சிறுபான்மையோர் நலன்காத்திடச் சிறுபான்மையோர் நலக் கமிஷன். மதச் சார்பற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாக முஸ்லீம் ஒருவரை ஆகாயப் படையின் தலைமை தளபதியாக்கியது. மத்திய சர்விஸ் கமிஷனராக ஒரு ஹரிஜன் நியமனம். நேரு பல்கலைக் கழக துணைவேந்தராக ஓர் ஆதிவாசிப் பெண் நியமனம். ஆட்ஸ்ிருவந்தபோது சுமார் 3000 கோடியாக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பு இரண்டு ஆண்டில் 6000 கோடியாக அதிகரித்தது. 77-79ல் எப்போதும் இருந்திராத அளவில் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 5.5 சதவீதமாக உயர்ந்தது.

நாட்டின் நிலைமைகள் இவ்வளவு தூரம் சரியான முறையில் சமாளிக்கப்பட்டாலும், நம்முடைய ஏழைமையும், குறைகளும் மிகப் பெரியவையாகும். எனவே குறைகள் நீடிப்பதை மட்டும் வைத்துக் கொண்டு சாதனைகளைச் சிறுமைப்படுத்திட முடியாது. கட்சிக்குள் சில குறைபாடுகள் இருந்தாலும் ஆட்சியைப் பொறுத்தமட்டில் குறுகிய காலத்தில் பல சாதனைகளையும், சிறந்த நிர்வாகத்தையும் செய்தது ஜனதா கட்சி.

தர்ம நியாய அரசியல் நிர்ணயச் சட்ட முறைகளுக்கு விரோதமாக நடந்த, இந்திய ஜனநாயக கட்டமைப்பையே தகர்த்திட முற்பட்ட செயல்களை எதிர்த்திடவும், எதேச்சாதிகார, கட்சி மாறி அரசியல் சக்திகளை அறவே அகற்றிடவும் ஒரு ஹரிஜன் இந்தியப் பிரதமராக வேண்டும் என்ற காந்தியக் கனவு நிறைவேறிடவும் தியாகத் தலைவர்களாலும், மக்களாலும் மீட்கப்பட்டு மீண்டும் நிலை நாட்டப்பட்ட ஜனநாயகம், சுதந்திரம் பறி போகாமல் காப்பாற்றப்படவும் மீண்டும் ஜனதா அணியே பதவிக்கு வரவேண்டும்.

டி. பி. நோய் வராமல் தடுக்க பி.ஸி.ஜி. மருந்தைத் தடுப்பு ஊசியாய்ப் போடும் முறையை ராஜாஜி கடுமையாக எதிர்த்தார். பி.ஸி.ஜி., டி. பி. நோயைக் குணப்படுத்தாதது மட்டுமின்றி இவ்வியாதி தோன்றுவதற்கே ஒரு காரணமாக அமையும். ஆகையால் பி.ஸி.ஜியைத் தடுப்பு ஊசியாய் உபயோகப்படுத்துவது மக்களுக்குத் தீங்கு என்று ராஜாஜி தீவிரமாக வாதிட்டார்.

ராஜாஜியின் கணிப்பு சரிதான் என்பது இந்தியன் கௌன்சில் ஆஃப் மெடிகல் ரிசர்ச் நிறுவனம் சமீபத்தில் செங்கல்பட்டில் நடத்திய ஓர் ஆராய்ச்சியின் மூலம் தெளிவாக்கியுள்ளது.

இந்தநிறுவனம் உலக சுகாதார நிறுவனத்துடன் சேர்ந்து நிகழ்த்திய ஓர் ஆராய்ச்சிப்படி 1968—71 வரை செங்கல்பட்டு மாவட்டத்தின் சில கிராமங்களில் இரண்டு லட்சம் பேருக்கு பி.ஸி.ஜி. ஊசியும், சுமார் ஒரு லட்சம் பேருக்குச் சர்க்கரைத் தண்ணீரும் ஊசி மூலம் செலுத்தப்பட்டு, எவருக்கு பி.ஸி.ஜி., எவருக்குச் சர்க்கரைத் தண்ணீர் செலுத்தப்பட்டது என்பது ரகசியமாக வைக்கப்பட்டது.

ஏழரை ஆண்டுகளுக்குப் பின்னர், சமீபத்தில் இந்த ஆராய்ச்சியின் முடிவைக் காண முற்பட்டுப் பரிசோதித்தபோது, சர்க்கரைத் தண்ணீர் செலுத்தப்பட்டவர்களைவிட, பி.ஸி.ஜி. செலுத்தப் பட்டவர்களிடம் அதிக சதவிகித அளவில் டி. பி. பரவியுள்ளதை அறிய முடிந்தது!

ராஜாஜியின் தீர்க்கதரிசனத்துக்கு நிரூபணம் கிடைத்ததோடு இந்த ஆராய்ச்சியின் முடிவு உலக மருத்துவ அரங்கில் ஓர் அதிர்ச்சியையும் தோற்றுவித்துள்ளது.

- ஜாயகன்


அர்ஸ்
சவான்
அம்மா,
பெரிய கைக்காரியா
இருக்காங்களே!
புஸ்..ஸ்
புஸ்..ஸ்
அரசியல்
ப.சிதம்பரம்



கல்கி

1979 டிசம்பர் 23

சித்தார்த்தி மார்கழி 8

மலர்: 38 இதழ்: 21

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வாக்காளர்களே!

வாக்காளர்களே! நீங்கள் இந்திராவை மன்னித்து விட விரும்பலாம். ஆனால் அதற்காக அவருக்கே வோட்டு அளிக்க வேண்டுமா? யோசியுங்கள். உங்கள் வீட்டில் கள்ளன் புகுந்து விட அவன் கையும் களவுமாகப் பிடிபடுகிறான். மன்னிப்பும் கோருகிறான். நீங்கள் மன்னிக்கலாம். ஆனால் அவன் களவாடிய பொருளைக் கூடவா அவனிடமே கொடுத்து விடுவீர்கள்? ஏழைபடும்பாடு கதையில் விக்டர் ஹியூகோ அப்படி எழுதலாம். ஆனால் அதிலேயும் ஹியூகோ ஒரு ஜாவரை சிருஷ்டித்திருக்கிறார், மறவாதீர்கள்! மக்களுக்குச் சொந்தமான இந்தத் தேசத்தைத் தம்முடையதாக்கிக் கொள்ளப் பார்த்தார் சர்வாதிகாரி இந்திரா. அவரை மன்னிக்கலாம். அதற்காக அவர் அபகரித்து விட நினைத்த நாட்டை அவரிடமே ஒப்படைத்து விட வேண்டுமா? சிந்தியுங்கள்.

அமெரிக்காவில் நிக்ஸனை மக்கள் சார்பில் மன்னித்து விட்டார் அடுத்து வந்த ஜனாதிபதி ஃபோர்டு. ஆனால் நிக்ஸனுக்கு ஜனாதிபதி பதவியை அமெரிக்க மக்கள் திருப்பித் தந்து விடவில்லை. நினைவிருக்கட்டும்! இந்தத் தேசத்து வாக்காளர்கள் அறிவு முதிர்ச்சி அடையாதவர்கள் என்ற அவப்பெயர் உலக அரங்கில் நமக்கு ஏற்பட்டால் பாதகமில்லை எனில் நீங்கள் தாராளமாக இந்திரா காங்கிரஸுக்கே வோட்டளியுங்கள்!

மன்னிப்பது என்பது உயர்ந்த குணம்தான் சந்தேகமில்லை. ஆனால் மன்னிக்கப் படுகிறவர் மன்னிப்புப் பெறத் தகுதி உடையவரா என்றும் பார்க்க வேண்டும். அதைக் கவனியுங்கள். இந்திரா காங்கிரஸின் தேர்தல் அறிக்கையே அவர் மன்னிப்புப் பெறத் தகுதியற்றவர் என நிரூபிக்கிறது. அது என்ன சொல்கிறது? ''ஒரே கட்சி இந்திரா காங்கிரஸ்; ஒரே தலைவி இந்திராகாந்தி'' என்கிறது. இது அவரது சர்வாதிகார மனப்பான்மையைப் பிரதிபலிப்பது அன்றி வேறு என்ன? முன்பு ''இந்திரா தான் இந்தியா இந்தியா தான் இந்திரா'' என்று கூறியதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? அது மட்டுமா? இந்திரா நாக் கூசாமல் பொய் பேசுகிறவர் என்பதையும் நிகழ்ச்சிகள் நிரூபித்துள்ளன. சஞ்சய் பற்றி அவர் என்ன சொன்னார்? ''சஞ்சய் அரசியலில் இனி ஈடுபட மாட்டார்'' என்று இந்திரா சொன்னாரா இல்லையா? அழுத்தம் திருத்தமாகத் திரும்பத் திரும்பக் கூறினாரா இல்லையா? இன்று அதே சஞ்சய் தேர்தலில் நிற்கிறார். ஹிட்லருடன் கெபல்ஸ் போல சஞ்சய்யுடன் வி. ஸி. சுக்லாவும் தேர்தலுக்கு நிற்கிறார். எனவே அலகாபாத் நீதிமன்றத்தில் பேசிய பொய் இன்னும் தொடர்கிறது எனலாம். கஜப்புளுகருக்கு நீங்கள் வோட்டுப் போட நினைத்தால் இந்திரா திமுக கூட்டணிக்கு வோட்டுப் போடுங்கள்.

இந்திரா சிநேகிதத் துரோகமும் பண்ணத் தயங்காதவர் என்று நிரூபணமாகியுள்ளது. அவர் திடுமென்று திமுகவுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டது எம். ஜி. ஆருக்கு எப்பேர்ப்பட்ட அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. இத்தகைய ஒரு சிநேகிதத் துரோகிக்கு வோட்டுப் போடலாம் என நீங்கள் எண்ணினால் அவசியம் இந்திரா திமுக கூட்டணிக்கு வோட்டு செய்யுங்கள்!

தி.மு.கவுடன் சேர்ந்து கொண்டாரே அப்புறமாவது இந்திரா ஸ்திர புத்தியுடன் நடந்து கொண்டாரா? அதுவும் இல்லை. ''பிராந்தியக் கட்சிகளை வளர விடக் கூடாது அதில் ஆபத்து உண்டு'' என்று தேர்தல் பிரசாரமே செய்கிறார். ஆக இக்கூட்டணி ஷா கமிஷனால் குற்றவாளி என்று தீர்ப்புப் பெற்றவரும் சர்க்காரியா கமிஷனால் குற்றவாளி என்று தீர்ப்புப் பெற்றவரும் ஒன்றுசேர்ந்து கொண்ட ஒரு சந்தர்ப்பவாத அரசியலேயன்றி வேறில்லை. இத்தகைய சந்தர்ப்பவாதிகளுக்கு வோட்டளிக்க நீங்கள் ஆசைப்பட்டால் திமுக—இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கே கண்டிப்பாக வோட்டளியுங்கள்!

ஜகஜீவன்ராம் ஒரு திறமையான நிர்வாகஸ்தர். ஜகஜீவன் பாபு வகித்த ஒவ்வொரு மந்திரிப் பதவியிலும், தொழில். ரயில்வே, விவசாயம், மற்றும் பாதுகாப்பு—இவை யாவற்றிலும் அவர் மகத்தான வெற்றி கண்டிருக்கிறார்.



பிரதம மந்திரியாக பதவி வகிப்பின். அவருடைய நீண்ட நாளைய அனுபவத்தினால்,ஜனதா கட்சி திறமையான நிருவாகத்துக்கும் நலிந்துபோன மக்களுக்கு வளமான வாழ்க்கைக்கும் வாக்குறுதி அளிக்கிறது.

ஜனதா வுக்கே வாக்களியுங்கள்!

ஜனதா கட்சி வென்றிடும் ஜனதா அரசு அமைத்திடும்

PVU(P)I-TAM

கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 21

அக்னிப் பரீட்சை

வாழ்க்கையை ஊன்றிப் பார்க்கும் பட்சத்தில் மனிதனுடைய சின்னஞ் சிறு செய்கைகள் பெரிய விபரீதத்தில் கொண்டுபோய் விடுகின்றன. அதற்கு ஏதாவது உதாரணம் தேவையென்றால் காஸண்ட்ரா கப்பலில் காப்டன் இங்கலண்டின் அறையிலிருந்த வில்வரைச் சுட்டிக் காட்டலாம். வில்வர் செய்த முதல் தவறு அவன் தனது கிளியின் மீது வைத்த அத்துமீறிய ஆசை. இரண்டாவது தவறு ராணியின் மேஜைக்கருகே சென்றது. மூன்றாவது தவறு கிளியை ராணி கைப்பற்றும்படி விட்டது. நான்காவது தவறு மேஜையின் குறுக்கே சாய்ந்து ராணியின் கையை முறிக்கத் தீர்மானித்து அவள் கையை இறுக்கப் பிடித்தது. இந்த நான்கும் சிறிய தவறுகள் தான். யாரும் செய்யக் கூடியதுதான். ஆனால் அந்தச் சிறிய தவறுகள் வில்வரை எத்தனை ஆபத்தில் கொண்டு போய் விட்டன? மரணத்தின் வாயிலுக்கல்லவா அழைத்துச் சென்று விட்டன?

வில்வர் தனக்கெதிரே மேஜை மீது சாய்ந்ததும் அவனுடன் சித்தப்பா உறவை அளவுக்கு மீறிக் கொண்டாடிய ராணி அவன் சற்று அசரட்டும் என்பதற்காகவே 'அங்கிள் அங்கிள்' என்று பேச்சுக் கொடுத்தாள். முகத்தில் பாசத்தைக் காட்டினாள், உதடுகளில் புன்சிரிப்பைத் தவழ விட்டாள், உள்ளுக்குள்ளே விஷத்தை வளர்த்துக் கொண்டாள். வில்வர் அவள் சொற்களில் மயங்கி, தனது சக்தியைப் பெரிதாக மதித்து மேஜை மீது நன்றாகச் சாய்ந்தவரை பொறுத்துக்கொண்டு அன்பு நாடகமாடிய ராணி மேஜைக்குக் கீழிருந்த தனது வலது கையில் தன் இடை முகப்பில் செருகியிருந்த சிறு கைத் துப்பாக்கியை எடுத்துக் கைக்கு எதிரேயிருந்த வில்வரின் குடல் பகுதியில் அதன் வாயைச் சற்றே அழுத்தினாள். முதலில் அதை என்னவென்று உணராத வில்வர் அது தனது வயிற்றுக்குக் கீழே குடல் இருந்த இடத்தில் அதிகமாக அழுந்தியவுடன் மிகத் தந்திரமாகத் தன்னை ராணி மடக்கி விட்டதையும், எந்த நிமிடத்திலும் அவள் இஷ்டப்படும் பட்சத்தில் தனது உயிர் ஆகாயத்தில் சிட்டுக் குருவி போல் பறந்து விடும் என்பதையும் உணர்ந்ததால் 'வேண்டாம் ராணி வேண்டாம்' என்று கூவினான்.

அவள் கிளியை முத்தமிட்டு அது மரண முத்தமாகவும் இருக்கக் கூடும் என்று கூறியதும் மரணம் கிளிக்கு மாத்திரமில்லாமல் தனக்கும் ஏற்படக் கூடும் என்ற கிலியால் இங்கலண்ட் அழைத்த அழைப்புக்கு அவன் இணங்கவில்லை. மேஜையின் குறுக்கே சாய்ந்தது சாய்ந்தபடி நின்றான். அந்தச் சமயத்தில் ''ஹூ இஸ் அங்கிள்?'' என்று காப்டன் இங்கலண்ட் கேட்டதும் ''ஹூ எல்ஸ் பட் மை வில்வர்? (என் வில்வரைத் தவிர வேறு யார் இருக்க முடியும்?)'' என்று கூறினாள் ராணி.

இங்கலண்டுக்கு வில்வர் ஏதோ ஆபத்தில் சிக்கிவிட்டான் என்பது தெரிந்ததே யொழிய அது திட்டமாக என்னவென்பது தெரியாததால், ''அப்படியானால் அங்கிளை இங்கு அனுப்பு'' என்றான் வாயிற்படிக்கு அருகில் நின்ற வண்ணம்.

''அங்கிள் என்னை விட்டுப் பிரிய மறுக்கிறார்'' என்றாள் ராணி குழைந்த குரலில்.

அந்தக் குரலில் ஏளனமும் ஒலிப்பதைக் கவனித்தான் இங்கலண்ட். ஆகவே சிறிது சினத்தின் வசப்பட்டுச் சொன்னான்: ''எங்



களுடன் விளையாடுவது ஆபத்து ராணி'' என்று.

''அப்படியானல் வில்வர் என்னுடன் விளை யாடுவது ஆபத்து அல்லவா?'' என்று பதி லுக்கு வினவினுள் ராணி.

''வில்வர் என்ன விளையாடினுன்?'' என்று இங்கலண்ட் கேட்டான்.

''கிளியைப் பிடுங்க வருகிருர். என் கையை முறிப்பதாகக் கூறி கையைப்பிடித்து நெரிக் கிருர்'' என்று புகார் செய்தாள் ராணி.

ராணி தன்னைப் பார்த்து நகைக்கிருள் என்பதைப் புரிந்துகொண்டான் இங்கலண்ட். ஆகவே வில்வர் மீது எரிந்து விழுந்தான். ''உனக்கு எதற்காக அந்தக் கிளி?'' என்று.

''ப்ளிண்ட்? காப்டன் ப்ளிண்ட்? இட் ஈஸ் மை லைப் (ப்ளிண்டா? காப்டன் ப்ளிண்டா? அது என் உயிர்)'' என்றுன் வில்வர்.

இந்த இ—த்தில் ராணி புகுந்து ''உண்மை தான் காப்டன். அதற்காகத் தனது உயிரை யும் கொடுக்கத் தயாராக இருக்கிருர்''என்று கூறி ராணி ''ஈஸ் இட் நாட் ஸோ அங்கிள்? (அப்படித்தானே சித்தப்பா?)'' என்று வில் வரையும் கேட்டாள்.

வில்வர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''இந்த விளையாட்டை நிறுத்து வோம்'' என்ற வில்வர் ''சரி ராணி! என் உயிர் உன் கையில் இருக்கிறது. என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வின விஞன்.

வில்வரின் இந்தப் பேச்சுக்குக் காரணம் புரியாததால் ''உன் உயிர் அவளிடமிருக்கிறதா?'' என்று வின விஞன் இங்கலண்ட் வியப்புடன்.

''ஆம். அவள் கைத் துப்பாக்கி என் குடல்பகுதியில் அழுத்தப்பட்டி ருக்கிறது. குதிரையை இழுத்தால் அடுத்த விநாடி மரணம் நிச்சயம்'' என்றுன் வில்வர்.

அப்பொழுது தான் இங்கலண்டுக்கு உண்மை நிலை புரிந்தது. அனந்துக்கு அது முன்பே புரிந்து விட்டதால் அவன் உரை யாடலில் கலந்து கொள்ளாமல் பேசாமல் நின்றிருந்தான். வில்வர் ராணியின் மேஜை மீது குனிந்தபோதே கீழேயிருந்த அவள் கை அசைந்ததை அவன் அழகிய தோளின் அசைவிலிருந்து புரிந்துகொண்டான் அனந்த். அடுத்து வில்வர் அலறியபோது மீதி விஷய மும் புரிந்து விட்டதால் அவன் ஏதும் செய்ய முடியாமல் சிலையென நின்றுவிட் டான். வில்வர் அகப்பட்டுக் கொண்டதோ ஆபத்தில் சிக்கி அலறியதோ அனந்துக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இந்த ஒரு நிகழ்ச்சி பல சங்கடங்களை விளைவிக்கலாம் என்பதை அவன் உணர்ந்திருந்தான். பதினேந்து மாலுமி களுடன் துலாஜி வந்திருந்தாலும் காப்டன் இங்க லண்டும் டெய் லரும்வைத்திருந்த பெரிய கொள்ளைக் கூட்டம் சிறி எழு மாளுல் ஆபத்து மிகப் பெரியது என்பதை உணர்ந் திருந்தான் அனந்த். பெரிய சாதனைகளை முன் னிட்டுத் தானும் துலாஜியும் ஏதேதோ திட் டங்களை வகுத்தி





ருக்கக் குறுக்கே ராணி புகுந்து நிலைமை யைக் குழப்புகிறளே என்று மனத்துக்குள் அலுத்துக் கொண்டான் அவன்.


இத்தகைய நினைப்புகளால் மெள்ள அந்த அறையில் நிலவிய விபரீத நிலையின் உஷ் ணத்தைச் சிறிது தணிக்க முயன்று ''வில்வர்!

உன்னை அறிவாளி என்று நம்பினேன். இங்கு எதற்காக வந்தாய்? இங்க்லண்ட் என்னிடம் ஏதோசொல்லச்சொன்னதாகச் சொன்னாயே, அது என்ன?'' என்று வினவினான்.

''இங்க்லண்ட் உன் அடுத்த திட்டம் என்ன என்று கேட்டு வரச்சொன்னான். இப்பொழுது இங்க்லண்டே வந்து விட்டதால் நீங்கள் நேரடியாகவே பேசிக் கொள்ளலாம்'' என்றான் வில்வர்.

அனந்த் இங்க்லண்டை நோக்கினான். இங்க்லண்ட் பதில் ஏதும் சொல்லவில்லை. ராணியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ''ராணி! நீ வில்வரைக் கொல்லலாம். அதற்குப் பிறகு உன் கதி என்ன ஆகும் என்று யோசித்தாயா?'' என்று வினவினான் சில விநாடிகளுக்குப் பிறகு.

ராணி இங்க்லண்டை நோக்கி நகைத்தாள். ''கொள்ளைக்காரர்கள் என்ன செய்வார்கள் என்பதைக் கொள்ளைக்காரி அறிய



மாட்டாளா? பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா?'' என்று வினவினாள் அலட்சியமாக, நிர்ப்பயமாக.

''மரணத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அதற்குத் தயாராகவே இந்தத் தொழிலுக்கு வருகிறோம். ஆண்கள் நிலைமை வேறு. பெண்களுக்கு மரணத்தை விட அபாயமானது இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் இங்க்லண்ட்.

அவன் சொற்களின் பொருள் மிக நன்றாகப் புரிந்தது ராணிக்கு. அதற்காக அவள் சிறிதும் நாணப்படவில்லை. ''பெண்களைக் கெடுக்க முடியும் என்று சொல்கிறாய்'' என்றாள் சர்வ சாதாரணமாக. ''ஆனால் இங்க்லண்ட், ராணி மீது யாராவது கையை வைக்க முடியும் என்று நீ கருதினால் அதை விட முட்டாள்தனம் இருக்க முடியாது. கிட்ட நெருங்கும் யாரையும் சித்திரவதை செய்து கொல்ல என்னிடம் மருந்து இருக்கிறது. தவிர நான் இஷ்டப்பட்டால் இந்தக் கப்பலை எப்பொழுது வேண்டுமானாலும் கொளுத்தி விடுவேன். இங்குள்ள விளக்கும் அதில் இப்பொழுதுள்ள மண்ணெண்ணெயும் அதற்குப் போதும்'' என்று சொன்ன ராணி, ''டோண்ட் த்ரெடன் மீ இங்க்லண்ட், அண்ட் டோண்ட் பிளே வித் மீ. தட் ஹோல்ட்ஸ் குட் டு எவ்வரி ஒன் ஆப் யூ ஆன் போர்ட் திஸ் ஷிப் (என்னை அச்சுறுத்தாதே இங்க்லண்ட். என்னுடன் விளையாடவும் வேண்டாம். நான் சொல்வது இந்தக் கப்பலிலுள்ள உங்கள் அனைவருக்கும் பொருந்தும்)'' என்று ராணி ஆத்திரம் ஏதுமில்லாமல் சொன்னாள். ஆனால் அவள் குரலில் உறுதி இருந்தது. சொன்னதைச் செய்யக் கூடியவள் என்ற நிர்ணயமும் இருந்தது.

அந்தச் சமயத்தில் அனந்தும் குறுக்கிட்டு ''இங்க்லண்ட்! ராணியை விரோதித்துக் கொள்வதால் லாபமில்லை. மிரட்டுவதால் பயனில்லை. அவளது நட்பும் உதவியும் நமக்கு அவசியம். நமக்கு என்பதை விட உனக்கும் டெய்லருக்கும் என்பது பொருந்தும்'' என்று கூறினான். ''உன்னையும் டெய்லரையும் நம்பி, உங்களைக் காப்பாற்றி, உங்களை வழியில் கட்டுவிட இருந்த ராணியையும் எதிர்த்து காஸண்ட்ராவுக்கு அழைத்து வந்திருக்கிறேன். சிந்துதுர்க்கத்தில் காஸண்ட்ரா

கடல் ராணி - ஒரு திருத்தம்: '9-12-79 கல்கி இதழ்' 45ம் பக்கத்தில் ''புதுப்புயல்'' என்ற 19ம் அத்தியாயத்தில் 1918 என்று வருவதும் தவறாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதை 1718 என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

தங்கவும் ராணியிடம் அனுமதி பெற்றிருக்கிறேன். அவள் இசையும் சமயத்தில் வில்வர் தோன்றினான். ராணியின் மனத்தைக் கெடுத்தான்'' என்ற அனந்த் ''ஆமாம், நீ எதற்காக இங்கு வந்தாய்?'' என்றும் வினவினான்.

''வில்வர் உடனடியாகத் திரும்பாததால் வந்தேன். அது கிடக்கட்டும். நாம் அடுத்த படி செய்ய வேண்டியதென்ன? நீ ஏதோ திட்டமிட்டிருப்பதாகச் சொன்னாயே, அது என்ன?'' என்று இங்கிலண்ட் கேட்டான்.

அனந்தின் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. ''பெரிய திட்டங்கள் இஷ்டப்படி விவாதிக்கப்படுவதில்லை. பகல் நன்றாகப் புலர்ந்ததும் டெய்லரையும் அழைத்து வா. துலாஜி, டெய்லர், வில்வர், ராணி எல்லோருமாகச் சேர்ந்து அதைப்பற்றி விவாதிப்போம்'' என்று கூறிய அனந்த் ராணியை நோக்கி, ''ராணி, வில்வரை விட்டுவிடு. அந்தக் கிளியையும் கொடுத்துவிடு. அடுத்த முறை வில்வர் விளையாடினால் அவனையும் கிளியையும் சேர்த்து நானே சுட்டுவிடுகிறேன்'' என்றான்.

ராணி தனது துப்பாக்கியைப் பின்னுக்கு இழுத்து இடையில் செருகிக் கொண்டாள். கிளி மீதிருந்த பிடியையும் தளர்த்தினாள். ''அங்கிள் நீ போ. சிறிது நேரத்தில் சந்திப்போம். அனந்துக்குச் சொல்ல வேண்டியது பல இருக்கும். விளக்க வேண்டியதும் அதிகமிருக்கும்'' என்றாள் ராணி. வில்வர் பின்னடைந்தான். கிளி தாவி அவன் தோளில் மீண்டும் அமர்ந்தது. ராணியை உற்றுப் பார்த்தது. வில்வரின் கொடிய பார்வை அந்தக் கிளிக்கும் இருந்ததாகத் தோன்றியது ராணிக்கு.

அவளால் விடுவிக்கப்பட்ட வில்வர் அகன்றதும் இங்கிலண்டும் அந்த அறையை விட்டு வெளியேறினான். அவர்கள் சென்ற பின்பு அனந்த் ராணியை நோக்கி வந்து அவள் தோள்களின் மீது கையை வைத்தான். ராணி வெருளவில்லை. அவன் கையை எடுத்துத் தள்ளவும் இல்லை. வில்வரின் மித்ரபேதம் பலிக்கவில்லை என்பதை அனந்த் உணர்ந்ததால் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான்.

''ராணி! இனிமேல்தான் நமது ஆபத்து உண்மையில் துவங்குகிறது'' என்று சொன்னான். அனந்தின் ஒரு கை அவள் கழுத்தைச் சுற்றி வளைத்தது.

''என்ன ஆபத்து?'' என்று வினவினாள் ராணி.

''துலாஜி ஒரு திட்டம் வைத்திருக்கிறான். அதை அவர்கள் ஒப்புக்கொண்டால் ஆபத்தில்லை. அதன் உண்மையை ஊகித்துவிட்டால் நான், நீ, துலாஜி, உன் தகப்பனார் அனைவரும் கண்ட துண்டமாக இவர்களால் வெட்டப்படுவோம்'' என்றான் அனந்த் சர்வ சாதாரணமான குரலில்.

''திட்டம் இதுதானா?'' என்று தன்னிடமிருந்த கசங்கிய காகிதத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் ராணி.

''ஆம்.''

''நீங்கள் சிந்து நூர்க்கம் வந்ததற்கும் இந்தக் காகிதத்துக்கும் சம்பந்தம் உண்டா?''

''முழு சம்பந்தம் உண்டு.''


''அதை விவரித்தால் கேட்பேன்.''

''பிறகு சொல்கிறேன். இன்றைய அக்னிப் பரீட்சை முடியட்டும்'' என்றான் அனந்த்.

சரியாக விடிந்து கதிரவன் எழுந்த ஐந்தாவது நாழிகையில் அந்தப் பரீட்சை துவங்கியது. ''இப்படி உட்கார் அனந்த்'' என்று ஒரு நாற்காலியைக் காட்டினான் தனத்திலிருந்த டெய்லர்.

அந்த நாற்காலியை இமை கொட்டாமல் பார்த்தான் அனந்த். அதற்குச் சரித்திரம் இருந்தது. அது நாச சரித்திரம்.

(தொடரும்)





தேவிபாலா A·C
(தினசரி 1·4·7·10 pm)
அகஸ்தியா 70mm
கமலா
(தினசரி 3 காட்சிகள்)
ஈகா A·C
(பகல் 12 மணி காட்சி)
மற்றும்
தென்னகமெங்கும்...
தேவி பிலிம்ஸ் (பி) லிமிடெட் அளிக்கும்
அழியாத கோலங்கள்
-கலர்-
திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, டைரக்ஷன்
பாலுமகேந்திரா
இசை
சலீல் சவுத்திரி
பாடல்கள்
கங்கை அமரன்
RAJATHI

இன்றைக்கு நடந்ததென்னவோ நிஜம்... இந்த நிஜம் ரொம்ப காலத்துக்கு முன்னேயே நான் கனவில் பார்த்த நிழல்தான்.

'ரயில் நிற்கப் போகிறது. இளமைத் துறுதுறுப்பில், வண்டி நிற்பதற்கு முன்னுலேயே கீழே குதிக்கிறேன். வண்டி போகிற திசையிலேயே சில மீட்டர்கள் ஓடுகிறேன். கையில் பிடித்து மார்போடு சேர்த்து அணைத்திருந்த புத்தகங்கள் சிதறி விழுகின்றன. அவற்றைப் பொறுக்கக் குனியும்போது கால் இடறி....' — இது கனவு.

ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் மாம்பலத்தில் நிற்கப் போகிறது என்ற நேரத்தில் இயர் அவசரம். ஆடிக்கொண்டே வந்த காலை உறக்கத்தின் பொறுப்பில்லாத விழிப்பு. உறங்கியும் உறங்காமலும், வண்டி நிற்பதற்கும் முன்னுல் கீழே குதிக்கிறேன். ஆனல் வண்டி போகிற போக்கில் ஓடாமல் எதிர்த்திசையில் — மடத்தனம்தான்.

தரதரவென்று இழுபடுகிறேன். கம்பார்ட்மெண்டின் கைப்பிடி நல்ல காலமாய் இன்னும் கையை விட்டு விலகவில்லை. யார் யாரோ ஓடி வந்து மின்சாரத்தால் ஈர்க்கப்பட்டவனைக் காப்பாற்றுகிற மாதிரி — என் கையில் ஓங்கி அடித்து வெளியே இழுத்துப் போடுகிறுர்கள். இல்லாவிட்டால் தண்டவாளத்துக்கும் சக்கரங்களுக்கும் காலை உணவு கிடைத்திருக்கும்.

யார் யாரோ திட்டுகிறுர்கள். 'சோமாறி' முதல் 'சாவு கிராக்கி' வரை எல்லாத் தேசிய மொழிகளிலும் அர்ச்சனை கிடைக்கிறது.

''என்ன சார்! அப்படித் தலைபோற அவசரம்.... வண்டி நின்ன அப்புறம் இறங்கப்படாதா...? படிச்சவாளே இப்படிப் பண்ணினு மத்தவாளை என்ன சொல்றது போங்கோ....' — ஒற்றை அனுதாபக் குரல் தேனய் ஒலிக்கிறது. மெல்ல நிமிர்ந்து பார்க்கிறேன்.

இன்னமும் 'வி.ஐ.பி.' கையிலேயே இருக்கிறது. வலது உள்ளங்கையில், கீழே விழுந்ததில் சரியான சிராய்ப்பு... டிஞ்சர் பட்ட காயம் போல் நெருப்பாய் எரிகிறது.

மெல்ல எழுந்திருந்து நடக்கிறேன். ஸ்டேஷனில், 'ராமேசுவரத்திலிருந்து இறங்கிய நூற்றுக் கணக்கான பேர்களும் என்னைப் பற்றியே பேசுவதாக, என்னையே திட்டித் தீர்ப்பதாக, கேலி பேசுவதாக ஒரு பிரமை.

ஆட்டோவில் ஏறி அமர்ந்து முகவரியைச் சொல்லி, நிதானமாய், அவசரப்படாமல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு நிகழ்ந்தவற்றை அசை போடுகிறேன்.

கனவுக்கும் நடப்புக்கும் அதிக வித்தியாசமில்லை. ஓடிய திசையில்தான் வித்தியாசம்.

23ம் நம்பர் வீட்டு வாசலில் ஆட்டோவை நிறுத்துகிறுர் ஆட்டோ ஓட்டி. வாசலில் பெரிய பூக்கோலத்துக்கு நடுவே சாணி உருண்டையைப் போட்டுப் பறங்கிப் பூவைப் பதித்துவிட்டு நிமிர்கிற உமா — அவள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சிப் பெருக்கு?

''உமாக் கண்ணு.... ஒன்னேட சிரிப்பை அநியாயமாய்ப் பறிச்சுப் போட இருந்தேனே'' என்று அவளிடம் கதறலாமா? சே! என்ன ஆண்பிள்ளைத்தனம் வேண்டிக் கிடக்கிறது?

காப்பியைக் குடித்துவிட்டுத் தினசரிப் பத்திரிகையில் கொஞ்ச நேரம் மேய்கிற கண்களுக்கு இடம் கொடுத்துவிட்டு மேஜை டிராயரைத் துழாவி அந்தப் பழசாய்ப் போன 70ம் வருஷத்து டயரியை எடுத்துப் புரட்டுகிறேன். டிசம்பர் மாதம் 26ந் தேதி...

கனவுக் குறிப்பு. சரி பார்த்துக் கொள்கிறேன். நல்ல காலம். இன்று டிசம்பர் மாதம் முப்பது தேதியாகி விட்டது. இருந்தாலும் உள்ளே என்னமோ குடைகிறது.

என்னவோ நடக்கப் போகிறது என்று மண்டைக்குள் யாரோ புகுந்து கொண்டு மிரட்டுகிற மாதிரி ஒரு மயக்கம். எங்கேயோ கண் காணுத லோகத்தில், சித்திரபுத்திரன் தன்னுடைய பேரேட்டிலிருந்து ஒரு லெட்ஜர் ஃபோலியோ'வைக் கிழித்து எடுக்கிற மாதிரி ஓர் அசட்டுக் கற்பனை. அந்தத் தாளில் என் பெயர் இருக்கிறதா என்று பிடுங்கிப் பார்க்க வேண்டும் போல் கூட ஓர் உந்துதல்.

இதமான வெப்பத்தில் உடலை நனைத்துக் குளித்துவிட்டு உணவு கொள்கிறேன். பகல் தூக்கம் பழக்கமில்லை. இருந்தாலும் காலை அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காகச் சற்றேனும் தலையைச் சாய்க்க வேண்டும்; சாய்க்கிறேன்.

பழைய நெட்டைக் கனவின் புதிய நினைவுகள் நெஞ்சை அழுத்துகின்றன. ஒரு சின்ன மயக்கம். நெஞ்சை அடைக்கிற மாதிரி பிரமை. அடைக்கவில்லை. எழுந்து நின்று கையை நன்றாய் விரித்து உதறி மூச்சை நிதானமாய் இழுத்து விடுகிறேன். உடம்பை ஒரு முறை கிள்ளிப் பார்க்கிறேன். உணர்வு நிச்சயமாய்த் தெரிகிறது.

கனவு இல்லை. பக்கத்து அறையில் குட்டிப்பிசாசு எதையோ போட்டு உடைப்பதும், உமா அதைப் போட்டு அடிப்பதும் தெரிகிறது.



ஒன்றும் நடக்கவில்லை. நான் நானாகத் தான் இருக்கிறேன். இனிமேல் கொஞ்சம் தைரியம் வருகிறது. உமாவிடம் சொல்லி விடவேண்டும். இன்று மயிரிழையில் உயிர் தப்பிய செய்தியைச் சொல்லலாமா?

தேவையில்லை. ஏற்கனவே பயந்து நடுங்கு கிற பிறவி. இதையும் சொல்லிவிட்டால் அனுவசியமாய்க் கிடந்து குழம்புவாள். அலுவலகம் சென்றால் திரும்பி வருகிற வரை யில் ஏற்கெனவே நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதாய்ப் புலம்புகிறவள்.

உடை மாற்றிக் கொண்டு, கைப்பை யைத் திறந்து கம்பெனி வரும் பணத்தைச் சரிபார்த்து எடுத்துக் கொண்டு பாங்க் கணக்கில் செலுத்திவிட்டு—

ரயில் நிலையத்து டெலிபோன் வாயில் ஒரு ஐம்பது காசை விழுங்கக் கொடுத்து ஏமாந்து போய்—

அடுத்த ஐம்பது காசில் விரல்களைச் சுற்றி எண்களோடு விளையாடி... ஆபரேடரின் தேன் மழையில் கொஞ்ச நேரம் நனைந்து, அடுத்த தாகவே மானேஜர் கடுவனின் உறுமல் களுக்கு அடக்கமாய்ப் பதில் சொல்லி ரிசீ வரைத் 'தொட்டிலில்' தூங்க வைத்ததுடன் இன்றையப் பணி முடிந்தது.

மணி 4—30. அடுத்து என்ன செய்யலாம்? எங்கே போகலாம்? என்ற கேள்விக் குறி களைப் பின்னிப் போட்டுவிட்டு, ஸ்டேஷனின் மேல் பாலம் வழியாக ரங்கநாதன் தெரு வுக்கு நடையைக் கட்டுகிறேன்.

என்னையும் அறியாமலே இடப்புற பிளாட்பாரம் பக்கம் பார்வை படர்கிறது. காலையில் கனபளிக்குத் தப்பிய இடம்—

அங்கே ஒரு சின்னக் கூட்டம். நாலைந்து பேராகக் கூடி ஓர் உடம்பை வெளியே எடுத்து வண்டியைப் பிடித்து மருத்துவ மனைக்கு அனுப்புகின்றனர்.

அருகில் விரைந்து அடிபட்டவர் யார் என்று பார்க்க வேண்டும் போல் ஓர் ஆவல். சாதாரணமாய் இதற்கெல்லாம் போய் நிற் கத் தைரியம் இல்லாதவன். இருந்தாலும் இன் றைக்குக் காலையில் சாவோடு 'கை குலுக்கிப் பேசிவிட்டு' வந்த பெருமிதம்.

யாரோ! பலத்த அடி. ''நல்ல வேளை உயிர் இருக்கிறது'' என்று சிலரும், ''ஆள் அம்பேல்தான்'' என்று சிலரும் சொல்வதை யெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் அந்த உடம்புக்குரியவன் நினைவிழந்து கிடக் கிறான்.

அந்தக் கண நேரத்தில் நான் அடிபட இருந்ததும், தப்பிப் பிழைத்ததும், அது தொடர்பான கனவுக் குழப்பங்களும் என்னி லிருந்து விடைபெறுகின்றன.

வெறும் மனிதாபிமான உணர்வு மேலிடப் பிரார்த்தனையில் மனம் லயிக்கிறது.

அடிபட்டு மருத்துவ மனையின் வெள்ளைப் படுக்கையில் வீற்றிருக்க விரைகிற அந்த 'யாரோ'வுக்காக, அவனுடைய மனைவி மக் களுக்காக—


திருவாசகப் பகுதியையும், சஹஸ்ரநாம வரிகளையும் நிதானமாக, குழப்பமில்லாமல் மனத்துக்குள் சொல்லியவாறு—

வந்த வழியில் திரும்பி வீட்டுக்கு நடக் கிறேன். இனிமேல் கனவு மிரட்டல்—நிழல், நிஜம் எல்லாவற்றையும் உமாவிடம் சொல்ல லாம். அவளிடம் எதையும் மறைக்கக் கூடாதே!



கனவு நிழல்கள்

சுப்ர பாலன்



⌘ பி. தரணிகுமார், திருவொற்றியூர்
கே: பரிசு யாருக்குக் கொடுப்பது என்று திணறுவது உண்டா?

ப: உண்டு. ஆனால் அந்தத் தொந்தரவு உங்கள் கேள்விகளால் ஏற்படுவதில்லை.

⌘ என். குணசீலன், பட்டுக்கோட்டை
கே: ஒரு மனிதன் எப்போது தவறு செய்ய முயலுகிறான்?

ப: தெரியாமல் செய்துவிட்ட தவற்றை மறைக்க முயலும்போது!

⌘ ஆர். டி. பாரதமணி, இராசிபுரம்
கே: நீர் சைவமா, அசைவமா?

ப: மீன்கள் வாழும் இடமாக இருந்தாலும் நீர், சைவம்தான்.

⌘ பாபுராஜேந்திரபிரசாத், பள்ளத்தூர்
கே: நகைச்சுவை ததும்பப் பேசும் பேச்சாளர்களில் தங்களைக் கவர்ந்தவர் யார்?

ப: சின்ன அண்ணாமலை. இயல்பான நகைச்சுவை. இவரது குட்டிக் கதைகள் பிரமாதமாக இருக்கும். 'சிந்திக்க வைக்கும் சிரிப்புக் கதைகள்' என்று ஒரு புத்தகம் இவர் எழுதியிருக்கிறார். கதைகள் அவருடையவைதான். ஆனால் எழுதியது வேறு ஒருவர் மாதிரி உள்ளது. காரணம், அவற்றில் சின்ன அண்ணாமலையின் முத்திரைகள் இல்லை.

⌘ சபாபதி, முசிறி
கே: தங்கள் கேள்வி-பதில் பகுதியில் கமலஹாசனைப் பற்றி அடிக்கடி எழுதுவதன் மர்மம் என்ன?

ப: மர்மம் ஒன்றுமில்லை. நப்பாசைதான். அவர் எழுதும் கட்டுரையில் நம்மைப் பற்றியும் எழுதுவார் என்கிற அல்ப ஆசைதான், ஸ்வாமி.

⌘ விஜயராம், உளுந்தூர்ப்பேட்டை
கே. புதுக் கவிதைகள் ரசிப்பது உண்டா?

ப: நல்ல புதுக் கவிதைகளை ரசிப்பதுண்டு. ஆங்கிலத்தில் நிறைய வந்துள்ளன. தமிழில் புதுக் கவிதைகளில் சொல் சாகஸங்கள்தான் அதிகம் உள்ளன. கருத்துடன் கூடியவை குறைவு. சமீபத்தில் படித்து ரசித்த ஒரு புதுக் கவிதை:

சாதனை
வேதனைவண்ணான் இன்னொரு
சாதனை செய்தான்
வெளுத்து வாங்கிவிட்டான்
கறுத்த மயிரை.

(சி. மணி எழுதியது)

⌘ காமாட்சி சுவாமிநாதன், நங்கநல்லூர்
கே. காதலுக்குக் கண் இல்லை என்கிறார்களே ஏன்?

ப: காதல் தெய்வத்துக்குக் கண்கள் இடையாது என்று பொருள் இல்லை. காதலனுக்குக் காதலியின் குறைகள் கண்ணில் படாது. அதே மாதிரி காதலனின் சிறு குறைகளைக் காதலி கண்டுகொள்ள மாட்டாள். ''இவனைப் போய் எப்படிக் காதலித்தாள்?'' என்று பல சமயம் நீங்கள் வியப்படையக் கூடும். 'இவனி'டம் உள்ள குறைகள் உங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. காதலினால் 'கண்' இழந்துள்ள அவளுக்குத் தெரிவதில்லை.

⌘ இ. எல். வீரமணி, வேலூர்
கே. நேற்றுவரை நான் யாரோ. இன்று (கேள்வி கேட்கும்) ஆயிரத்தில் ஒருவன். கோடியில் ஒருவனாக ஆவதற்கு வழி?

ப: சரியான அறுவையான திரைப் படத்துக்குச் சென்றால் தியேட்டர் கிட்டத்தட்டக் காலியாக இருக்கும். ஏதாவது ஒரு கோடியில் போய் உட்கார்ந்துகொள்ளுங்கள். அப்போது உங்களை 'கோடியில் ஒருவன்' என்பார்கள்!

⌘ சுந்தரமூர்த்தி, பேரையூர்
கே. தமிழ்த் திரை உலகில் புதிய திருப்பங்களுக்கு பாலசந்தர்தான் பொறுப்பாளியா?

ப: ஸ்ரீதரை மறக்கலாமோ? டெக்னீஷியனுக்கு அந்தஸ்து தேடித் தந்தவர். புது முகங்களுக்கு ஆதரவு கொடுத்தவர். இயல்பான வசனத்தைப் புகுத்தியவர். திறமையான டைரக்ஷன் உத்திகளைக் காட்டியவர். ஒரே செட்டில் படம் எடுத்தவர்.

ஸ்ரீதர் உயர்த்திய கொடியை மேலும் உயர்த்தியவர் பாலசந்தர்.

⌘ கே. எஸ். ராஜு
கே: உலக மகா போர் யார்?

ப: விடாமல் பேசிக் கொண்டே இருப்பது மட்டுமின்றி, நாம் கவனிக்காமல் இருக்கவும் விடமாட்டான். அவனே உலக மகா போர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன!

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

ரூ. 5 பரிசு பெறுபவர்:

இ. எல். வீரமணி
8/1, சோலை மாணிக்க முதலி தெரு,
வேலப்பாடி, வேலூர்–632001

கார்னெகீ அரங்கில் எம்.எஸ்



இந்த ஆண்டு இசை விழாவில் எம்.எஸ். அவர்களின் கச்சேரி எங்குமே இடம் பெறவில்லையே என்ற ரசிகர்களின் ஆதங்கத்தைத் தீர்ப்பதற்காகவே கருணையுடன் செயல்பட்டதுபோல் கிராமஃபோன் கம்பெனியார் எம். எஸ். அவர்களின் கார்னெகீ அரங்கக் கச்சேரியை மூன்று எல். பி. ரிகார்டுகளில் பதிவு செய்து தந்துள்ளனர்.

அமெரிக்கா சென்றிருந்தபோது எம். எஸ். அவர்கள் கார்னெகீ அரங்கில் பாடுமாறு கோரப்பட்டார். இந்த அரங்கில் பாடுவது என்பதே மிகப் பெரிய கௌரவம் என்று இசை வல்லுனர்கள் கருதுவார்கள். இங்கு பாடியதன் மூலம் ஸ்ரீமதி எம். எஸ். கர்நாடக இசைக்கு மட்டுமின்றி அந்த அரங்குக்கே புதிய பெருமை சேர்த்திருக்கிறார் என்பதை இசைத்தட்டுக்களில் பதிவாகியுள்ள அவையோரின் நீண்ட, பலத்த கரவொலிகள் மெய்ப்பிக்கின்றன.

எல்லாருமே சிரமப்பட்டுத்தான் பாடுகிறார்கள். சங்கீதத்தில் சோபிக்க வேண்டும் என்று உழைத்துப் பாடுபடத்தான் செய்கிறார்கள். ஆனால் எம். எஸ். அவர்கள் பாடும்போது பாட்டு எப்படியோ ஒரு மாய மந்திர சக்தி பெற்றுவிடுகிறது. கர்நாடக இசைப் பிரியர்கள், அதில் அதிகமாகப் பரிச்சயம் இல்லாதவர்கள், அதுபற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் என்று யாராயிருந்தாலும் சரி, அவர்களை அப்படியே அந்த இசை வசீகரித்துத் தன்வயப் படுத்திக் கொண்டு விடுகிறது. விநாடி நேரம் இப்பாலோ அப்பாலோ கவனத்தை, சிந்தனையைத் திசை திருப்ப முடியாதபடிக்கு அப்படியே நூற்றுக்கு நூறு சதவீதம் அடிமைப்படுத்திக் கொண்டு விடுகிறது. இது எப்படிச் சாத்தியமாகிறது என்றால் நமக்குச் சொல்லத் தெரியவில்லை. அவரது ஆற்றல், முதிர்ந்த ஞானம், உழைப்பு, பக்தி, அசாதாரணமான சாரீர வசதி இவையெல்லாம் காரணம்தான். இதற்கும் மேலாக ஏதோ ஒன்று இருக்கிறது. அந்த ஏதோ ஒன்றுதான் தரணியில் தன்னிகரற்றதும் தனித் தன்மையானதுமான எம். எஸ்.ஸின் பாடலாகவும் நம்முடைய பாக்கியமாகவும் திகழ்கிறது. இதற்காக ஆண்டவனுக்கு நன்றி சொல்வதன்றி நாம் வேறு என்ன செய்ய முடியும்?

• • •

காஷ்மீரப் பூங்காவைச் சிருஷ்டித்த மன்னர்களும், அழகான அரண்மனைகளையும் அலங்காரமான அந்தப்புரங்களையும் உருவாக்கிய மன்னர்களும், 'பூவுலகில் ஒரு சொர்க்கம் உண்டெனில் அது இதுதான்' எனப் பொறித்தார்கள். தியாகையரோ அரங்கன் சந்நிதானத்தில் நின்று 'பூவுலகில் ஒரு வைகுண்டம் உண்டானால் அது இதுதான்' என்பதாக ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தைக் குறிப்பிட்டார். காம்போதி ராகக் கீர்த்தனையில் இந்த இடத்தை ஸ்ரீமதி எம். எஸ். நிரவல் பண்ணும்போதோ நமக்கு என்ன தோன்றுகிறது? 'இந்தப் பாடலை இவர் பாடக் கேட்பதே நமக்கு சொர்க்க பதவி கிடைத்தது போல் தானே' என்றுதான் தோன்றுகிறது.! பூவுலகிலேயே சொர்க்கானுபவத்தைப் பெற்றுவிட்டோம் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. 'இது போதாது. அசல் சொர்க்கத்துக்கே அழைத்துப் போகிறேன், வாருங்கள்!' என்று சொல்வது போல் ஸ்ரீமதி எம். எஸ். அடுத்ததாக 'இகலோக' பாடலிலும் நிரவல் செய்கிறார். மேலே மேலே, இன்னும் மேலே, அதற்கும் மேலே, ஜிவ்வென்று புஷ்பலதிகா ராகம் என்னும் புஷ்பக விமானத்தில் ஏற்றிச் செல்கிறார். நாம் பரவசத்தில் மெய் சிலிர்க்க, கண்கள் பனிக்க, நெஞ்சை ஏதோ வந்து அடைக்க, மூச்சு விடவும் மறந்து திக்குமுக்காடிப் போகிறோம்.

சொர்க்க லோகத்தை எட்டிப் பார்க்கச் செய்துவிட்டு, 'உனக்கு இன்னும் கடமைகள் நிறைய உள்ளன' என்று உணர்த்துவது போல் திரும்பவும் இங்கே அழைத்து வந்துவிடுகிறார் எம். எஸ். கூடவே பிறவிக் கடலைக் கடந்து, மோட்ச சாம்ராஜ்யத்தை அடைய எளிய உபாயத்தையும் சொல்லித் தருவார் போல, சிறிய சிறிய இனிய பக்திப் பாடல்களை, பஜன்களை வழங்குகிறார். இசை என்ற இரு எழுத்துக்களுக்குள் இத்தனை சக்தி அடங்கிக் கிடக்கிறதா என்று பிரமிப்புடன் சுமார் இரண்டு மணி நேரம் போனது தெரியாமல் நாம் உட்கார்ந்திருக்கிறோம்.

இந்தியா — அமெரிக்கா நட்புறவை வளர்க்க வெளிவரும் ''ஸ்பான்'' பத்திரிகையில் இடம்பெற்ற எம். எஸ்.ஸின் அற்புதமான வண்ணப் படம் ஒன்று இந்த இசைத் தட்டின் மேலுறையை அலங்கரிக்கிறது. அதில்தான் எத்தனை ஞான—ஒளி, பக்தி, கருணை பாவம்! புகைப்படக்காரர் அவினாஷ் பஸ்ரிச்சா எம். எஸ்ஸின் அக அழகை அப்படியே வெளிக் கொணர்ந்திருக்கும் ஆற்றலுக்காகப் பாராட்டுக்குரியவராகிறார்.

கௌள ராகத்தில் 'ஸ்ரீ மகா கணபதி'யில் (தீக்ஷிதர்) தொடங்கி காஞ்சி முனிவரின்

அருள் பாடல் வரை பல சிறந்த வாக்கேயக் காரர்களின் பல மொழிகளில் அமைந்த பல ராகப் பாடல்கள், நிகழ்ச்சி நிரலின் தயாரிப்பிலேயே எவ்வளவு கவனம் செலுத்தப் பட்டிருக்கிறது என்பதை உணர்த்துகின்றன. ஸ்ரீமதி ராதா விசுவநாதன் தமது தாயாருக்குப் பக்க பலமாக இருப்பதுடன் பாலோடு தேன் கலந்தாற்போல இழைந்தும் விடுகிறார். குருவாயூர் துரையும் கண்டதேவி அழகர்சாமியும் முறையே மிருதங்கமும் வயலினும் வாசித்துக் கச்சேரிகளை கட்டப் பூரண ஒத்துழைப்பை நல்கிப் பிரமாதப்படுத்தியிருக்கிறார்கள்.

ஸ்ரீமதி எம். எஸ். அமெரிக்கா சென்று கச்சேரிகள் செய்தது அமெரிக்காவில் உள்ள இந்து கோயில்களின் நிதிக்காக. அக்கோயில்களில் நாயகர்களாக விளங்கும் விநாயகர் பெருமானுக்கும் வேங்கடாசலபதிக்கும் இந்த இசைத்தட்டுகளைவிடச் சிறந்த காணிக்கை வேறென்ன இருக்க முடியும்?

— குட்டி கிருஷ்ணன்

FOCUS

பூவண்ணன்

குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு சிறு கதைப் போட்டி நடத்தியது. 'ஆலமரத்துக் கிளி' என்னும் கதையை நடுவர்கள் மூவரும் முதல் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்தார்கள். நடுவர்களுள் ஒருவரான திரு வை. தன்னு அவர்கள், அக்கதைக்கு 100க்கு 100 மதிப்பெண் கொடுத்தார். கதையை எழுதியவர் யார் என்று பார்த்தார்கள். அக்கதையை எழுதியவர் சங்கத்தின் செயலாளர்! சங்கச் செயலாளரே பரிசு பெற்றால், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று தலைவர் திரு வள்ளியப்பா அவர்கள் தயங்கினார். அதை அறிந்த செயலாளர் தம் கதையைப் போட்டியிலிருந்து விலக்கித் திருப்பிப் பெற்றுக் கொண்டார். அவர் தான் பூவண்ணன்.

1971ம் ஆண்டு. தமிழக அரசின் சிறுவர் இலக்கியப் பரிசுக்காக ஐந்து நூல்களைத் தேர்ந்தெடுத்தனர். ஒவ்வொரு நூலுக்கும் பரிசு ரூ. 500. நடுவர்களின் முடிவை வெளியிட அரசு தயங்கியது! காரணம் ஐந்து நூல்களில் இரண்டு நூல்கள் ஒரே ஆசிரியர் எழுதியவை. ஒரே ஆண்டில் ஒருவருக்கே இரண்டு பரிசுகளைத் தருவதா என்று தயக்கம் காட்டியது அரசு! அதனால் மீண்டும் பரிசிலனை செய்யுமாறு நடுவர்களைக் கேட்டது. அதனால் 'புள்ளிமான்' என்ற நூலுக்குப் பரிசளித்து, 'ஆலம் விழுது' நூலுக்கு அளித்த பரிசை விலக்கிக்கொண்டனர்.

ஒரே போட்டியில் இரு பரிசுக்கான நூல்களைப் படைத்த ஆசிரியரும் அதே பூவண்ணன் தான்!


✠ வே. தில்லைநாயகம்


பூவண்ணன்

மாணவப் பருவத்திலிருந்தே எழுதி வருகிறார். அவர் தம் கல்லூரிப் படிப்பை முடிக்கும்போது 18 நூல்கள் வெளிவந்திருந்தன!

தற்போது வைணவக் கல்லூரியின் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் இவரது இயற்பெயர் வே. தா. கோபால கிருஷ்ணன்.

ஆலம் விழுது என்ற கதையை 'நம்ம குழந்தைகள்' என்ற தலைப்பில் தமிழ்ப் படமாக்கினர். அப்படத்துக்காக 1971 ஆம் ஆண்டு சிறந்த திரைப்படக் கதாசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இவருக்குத் தமிழக அரசினர் ரூ. 5000 பரிசு வழங்கினர்.

அதேபோல் இவரது 'அன்பின் அலைகள்' என்ற திரைப்படத்துக்குத் தமிழக அரசினர் 1979ல் தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டியுள்ளனர்.

—சௌந்தர்

திரு வே. தில்லைநாயகம்

புத்தகத்துறை வளர்ச்சியைப் பற்றியும், தமிழ்நாடு நூலகங்கள் முன்னேற்றத்தைப் பற்றியும் பொது நூலக இயக்குனர் தில்லை நாயகம் பேசிலிருந்து:

1974ம் ஆண்டு முதல் அரசாங்கமே மொத்தமாக மாவட்ட நூலகங்களுக்கு நூல்களை வாங்கிக் கொடுப்பதை ஆரம்பித்தது. இம்முறையில் ஆறாயிரம் தலைப்புகளில் பதினேழு லட்சம் பிரதி நூல்களைத் தொண்ணூற்றி எட்டு லட்ச ரூபாய் கொடுத்து அரசு வாங்கி விநியோகித்துள்ளது.

ஆயிரக்கணக்கான நூல்கள் வெளி வந்தாலும், பெரும்பகுதி ஏறத்தாழ 50 சதவிகிதம் வரை நாவல்களாக உள்ளன. இது சற்று வருத்தமான விஷயம் தான். இந்நிலை மாறி, விவசாய முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம் முதலியவை பற்றியும் நூல்கள் வெளி வரவேண்டும். அறிவியல் நூல்களும் கதை உருவிலே வரலாம்.

அச்சடிக்கும் பிரதிகளில் பெரும் பகுதி நூலகங்களுக்குத்தான் போகிறது. இந்நிலை மாறிப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் நூல்கள் போக வேண்டும். இதற்கு ஒரே வழி, கல்வி நிலையங்களில் வாரத்துக்கு ஒரு வகுப்பாவது நூலக வகுப்பாக இருக்க வேண்டும். இதற்கு மார்க்குகள் தனியாகக் கொடுக்க வேண்டும். இப்படி சிறு வயதில் படிக்கும் பழக்கம் ஏற்பட்டால்தான் பிற்காலத்தில் அது வளரும். பதிக்கப்பெறும் நூல்களின் எண்ணிக்கையும் பெருகும்.

—''சித்ரா''

நீங்காத நினைவு

ஆண்டவன் கொடுத்த பாடல்...

மீ.ப.சோமு



திருநெல்வேலியில் ''ஆண்டவன்'' என்று எல்லாரும் அச்சத்தோடு அழைத்து வந்த பெரியவர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் ஆண்டியப்ப பிள்ளை. இலக்கியமும் சமய நூல்களும் நன்றாகக் கற்றவர். பழைய முறையில் இவற்றைப் பயின்று பாண்டித்தியம் பெற்றவர். என் ஆசிரியர்களுள் ஒருவராகவே நான் மதித்துப் போற்றி வந்தேன்.

பண்டித ஆண்டியப்ப பிள்ளை அவர்களுக்கு ஓரளவு வட நூல் பயிற்சியும் உண்டு. சங்கீதம் நன்றாகத் தெரியும். அத்தனை முதிய வயதிலும் கீச்சுக் குரலில் சுத்தமாகப் பாடுவார். பழைய நூல்களில் உள்ள மதிப்பு புதிய நூல்களிலும் அவருக்கு இருந்தது என்பது முக்கியம்! கல்கியின் எழுத்தையும் புதுமைப் பித்தன் எழுத்தையும் மனமாரப் பாராட்டிப் பேசுவார். ராஜாஜியின் சிந்தனைகளை வெகுவாக மெச்சிப் போற்றுவார். காந்திய நெறி முறையிலே கடைசி நாள் வரை ஒரு சுதந்திர புருஷராகவே வாழ்ந்த பெரியவர் அவர்! யாராவது தம்மைப் புகைப்படம் எடுக்க வந்தால் அப்படியே ''மறைந்து'' விடுவார்!

தமது மூத்த புதல்வர் கேரள அரசில் ஒரு பெரிய பதவியில் இருந்த போதிலும், தாமிரவருணி நதியையும், நெல்லை மண்ணையும் விட்டுப் போக விரும்பாமல் அங்கேயே தங்கிவிட்டார்! மகனோடு செல்லவில்லை!

தூய்மையான வெள்ளைக் கதர் வேட்டி. வெள்ளைக் கதர் ஜிப்பா. கொஞ்சம் அழுக்குப் பட்டாலும் உடனே சலவைக்கு அனுப்பிவிடுவார்! காலையில் ஆறு மணிக்கு அவர் தாமிரவருணி நதியில் மூழ்கிக் குளிப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சி! அந்த வெள்ளை வேட்டியைத் தண்ணீரிலே கும்முவார். ஆழம் இல்லாத ஒரு பகுதியில் ஒரு பெரிய பள்ளம் தோண்டி ஆனை குளிப்பது போல் தண்ணீரை வாரி வாரி இறைத்துக் கொண்டே குளிப்பார். அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்தனை ரசமாக இருக்கும். 'ஸோப்' உபயோகிக்க மாட்டார். ''குறுவமண்'' என்று ஒரு வகையான மண் நதிக் கரையில் உண்டு. அதை எடுத்துத் தமது கரிய மேனியில் தேய்த்துக் கொள்வார். குளித்து முடித்ததும் அந்த வேட்டியைக் காற்றிலே உலரும்படியாகத் தலைக்கு மேலே பிடித்துக் கொண்டே நடந்து வீடு திரும்புவார். வீடு என்றால் எங்கே? நெல்லை மீனாட்சிபுரத்தில் ஆற்றின் கரையிலே ''குட்டக் கரைவீடு'' என்ற எங்கள் பரம்பரை வீட்டின் முகப்பிலே ஒரு கொட்டகை உண்டு. அதில் ஒரு பகுதியை அவருக்கு என்று கொடுத்திருந்தோம். அங்கே இருந்து அவர் நண்பர்களுடன் உரையாடுவது ஒரு பெரிய இலக்கிய அனுபவமாகவே இருக்கும். பேராசிரியர் சீநிவாச ராகவன், வையாபுரிப் பிள்ளை, புதுமைப் பித்தன், நீபன் முதலான அறிஞர்களும் எழுத்தாளர்களும் அங்கு வந்து மணிக்கணக்காக அவருடைய பேச்சைக் கேட்டு ஆனந்தித்ததுண்டு. ஒரு சமயம் டி. ஜே. ர. இவரை எங்கள் வீட்டிலே சந்தித்துவிட்டு அப்படியே வியப்பில் ஆழ்ந்தவராகச் சொன்னார்: ''தமிழ்க் கல்சர் என்றால் என்ன என்று என்னைக் கேட்டால் உடனே இவரைக் காட்டுவேன்!''

ஒரு நாள் பண்டித ஆண்டியப்ப பிள்ளை அவர்கள் ஒரு பழைய வெண்பாவை டி.கே.சி.யிடம் கொண்டு வந்து கொடுத்தார். ''பாடலின் கருத்து நன்றாயிருக்கிறது. ஆனால் பின் பகுதியில் ஏதோ குறைபாடு இருக்கிறது. இந்த வெண்பாவைத் தாங்கள் ரசப்பம் செய்தால் நேர்த்தியாக இருக்கும்!'' என்று ரசிகமணியிடம் கூறினார் ஆண்டவன்.

ஞாயிற்றுக் கிழமை வழக்கம்போல் வட்டத் தொட்டி டி. கே. சி.யின் வீட்டிலே



நடிகை தன் தோழியிடம்: ''புது முகமாக நான் சினிமா உலகில் நுழைந்தபோது எனக்கு மாதம் 10 லவ் லெட்டர் வரும். எனக்குக் கல்யாணம் ஆன பிறகு வாரம் 100 லெட்டர் வந்தது. நாலு கணவரை மாற்றிய பிறகு டெய்லி 1000 காதல் கடிதாசி வந்திட்டிருக்கு.'' கோ. நீரா

கூடியது. ஒரு கரும் பலகையிலே அந்த வெண் பாவைச் சாக்பீஸினால் எழுதினார் டி.கே.சி.

எய்யவந்த காமாந்
 இங்குவர வேண்டாம்காண்
உய்யவந் தாரோடு
 உறவானேன் — பையவே
தேரைவிடு பூவைமுடி
 நின்றுவிடு வெண்கரும்பை
பின்னொரு காசாக
 வில்!

காதலனுடைய பிரிவால் மன்மத பாணங்களின் வேதனைக்கு இதுவரை ஆளாகியிருந்த காதலி, இப்போது தனது காதலன் வந்ததும் அந்தக் களிப்பிலே மன்மதனைப் பார்த்துச் சொல்கிறாள்:

''இன்னுமா மலர் அம்புகள் எய்வதற்கு வந்து நிற்கிறாய்? இனி உனக்கு இங்கே என்ன வேலை? காதலனோடு உறவானேன். தேரை விடு! கரும்பை (வில்லை) நின்றுவிட்டு உனது போராட்டத்தை நிறுத்தி, உன் அம்பாகிய மலரைத் தலையிலே சூடிக் கொண்டு போய் விடு!'' என்கிறாள் காதலி! மீன் கொடி அல்லவா மன்மதனுக்கு. மீனை ஒரு காசுக்கு விற்றுவிடு என்பதாக அந்தப் பழைய பாடல் சொல்லி முடிக்கிறது. இதுதான் திருத்தத்துக்கு ஆண்டவன் கொடுத்த பாடலின் பழைய வடிவம்.

கரும்பலகையின் மறு பக்கத்தில் டி.கே.சி. தாம் செய்த திருத்தங்களுடன் அதே வெண் பாவை எழுதினார். வேண்டாத பகுதியை நீக்கியதோடு, பாடலின் 'ரிதும்' என்கிற தாள பாவம் மிடுக்கோடு நடக்கும்படி அந்த வெண்பாவைத் திருத்தியிருந்தார் ரசிகமணி.

வட்டத் தொட்டியில் அன்று கூடிய அறிஞர் பெருமக்களும் ரசிகர்களும் பாடலின் புதிய வடிவத்தை மிக மிக அனுபவித்தார்கள். ஆண்டியப்ப பிள்ளையைப் பாராட்டத் தொடங்கினார்கள். அப்போது அவர் சொன்னார்:

''என்னைப் பாராட்டுவது பொருளற்ற பாராட்டு! பாடலை முதன் முதல் எழுதிய புலவர் யாரோ! பெயரே தெரியாது. பாராட்டுக்குரிய முறையில் அதைத் திருத்தியவரோ ரசிகமணி. எனக்கு இதில் என்ன பங்கு இருக்கிறது!''

வட்டத் தொட்டியிலே அரங்கேறிய அந்தப் பாடலின் புதிய வடிவம்:

எய்யவந்த காமா
 இனிஉனக்கு வேலைஇங்கேன்?
உய்யவந்தான் தன்னோடு
 உறவானேன் — பையவே
தேரைவிட்டு மென்கரும்பைத்
 தின்றுவிட்டுச் செய்யவந்த
போரைவிட்டுப் பூமுடித்துப்
 போ!


புஷ்பா தங்கதுரை
எழுதும்
கடலுக்குள் ஜூலி
புதிய தொடர்கதை
கல்கி 6.1.80
இதழில் ஆரம்பம்

முபாரக் சைக்கிள் ஷாப்பின் சின்னஞ்சிறிய கடிகாரம் மணி ஒன்பதரை ஆகிவிட்டதை அய்யாக்கண்ணுவுக்கு உணர்த்தி விட்டுத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. 'இனிமேல் பள்ளிக்குச் சென்றால்?' — அய்யாக்கண்ணு ஒருமுறை நடப்பை நினைத்துப் பார்த்தான். அன்று அரை மணி தாமதமாகப் பள்ளியை அடைந்தபோது நடந்த நடப்புகள் அவனுள் அணிவகுத்தன. வகுப்பாசிரியர் வைத்தியநாதன் தாமதமாக வந்து நிற்கும் அய்யாக்கண்ணுவை, 'வருக வருக அய்யாக் கண்ணு அவர்களே!' என்று கோபத்துள் இடக்கு நெளிய வரவேற்றார். அய்யாக் கண்ணு விழிக்கிறான். வகுப்பறை அதிர்ந்து குலுங்கிச் சிரிக்கிறது. 'அய்யாக்கண்ணு அவர்கள் இத்தனை தாமதமாக வருவதன் காரணத்தை அடியேன் அறியலாமா?'—பொங்கும் கோபத்துள் பணிவைக் குழைத்து அவன் வயிற்றில் புளியைக் கரைத்தார் வைத்தியநாதன். அய்யாக்கண்ணு திருதிருவென்று விழித்தான். 'அந்தக் காரணத்தை எப்படி எடுத்துச் சொல்வது?' — அவனுக்குப் புரியவில்லை. நடுக்கமாக இருந்தது. ஒன்றுமில்லாததற்கே இப்படிச் சிரிக்கும் இந்த மாணவர்கள் அந்தக் காரணத்தைக் கேட்ட பின்னால் எப்படியெல்லாம் சிரிப்பார்கள்?— நினைத்துப் பார்த்தான் அய்யாக்கண்ணு. அவனிடையே மௌனம் புழுங்கியது.

இதற்குள் வைத்தியநாதனின் சமிக்ஞைப்படி வகுப்புக்கு வெளியே உள்ள அசோக மரத்தின் ஒல்லிய இளைக்குச்சி ஒன்றை மாணவன் ஒருவன் ஒடித்து வந்து நீட்டினான்.

அந்த ஒல்லிய இளைக் குச்சி நார் நாராய்க் கிழிந்துபோய் வகுப்பறைக்கு வெளியே போய் விழுந்தது. கண்ணீர் பெருக்கெடுக்க உள்ளங்கையைப் பார்த்தான் அய்யாக் கண்ணு. அக்னியாய் அது தகித்துக் கொண்டிருந்தது. அந்தத் தகிப்புடன் வகுப்பறையினுள் பெஞ்சு மேல் கால் ஒடிய நின்றதை நினைத்தபோது அய்யாக்கண்ணுவுக்கு விதிர் விதிர்த்தது. அந்த விதிர்ப்பினூடே பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் எனனும் 'அவா' அமுங்கிப் போனது!

காலைப் பொழுதின் ஏழு மணி அளவில் பெருமாயியின் குரல் கொல்லைப்புறத்திலிருந்து வைத்தியநாதனின் வீட்டுக்குள் நுழைந்தது.

''அம்மா, வாத்தியாரு ஊட்டம்மா...'' குரலைக் கேட்டுவிட்டுக் கொல்லைப்புறம் விரைந்தாள் விசாலம். முகம் முழுவதும் வெளிறிக் கிடக்க, கண்களில் பீளை வழிய எட்டு மாத வயிற்று முட்டத்துடன் பரிதாபமாகப் பெருமாயி நிற்பது தெரிந்தது.

''அம்மா எம்மவனுக்கு ஒரு பழஞ் சொக்காயைக் கேட்டிருந்தேனுங்களே...''— பணிவுடன் பேசினாள் பெருமாயி. விசாலத்துக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தருகிறேன் என்னும் பாவத்துடன் ''இந்த நிலையில ஏன் பெருமாயி வேலைக்கு வர்றே?''என்று அனுதாபத்துடன் ஒரு 'கேள்வியைக்' கேட்டு வைத்தாள்.





அடிக்காதீங்க சார்!

இந்திரா சௌந்தரராஜன்

''முனிசிபாலிடியில இன்னும் ஒரு மாசத்துக்குப் பொறவுதான் லீவு பத்திப் பேசணும்னுட்டாங்கம்மா! நான் என்ன செய்வேன்?'' என்றாள் பெருமாயி.

''இன்னும் ஒரு மாசம் உன்னால தாக்குப் பிடிக்க முடியுமா?''

''தாக்குப் பிடிச்சுத்தானே ஆகணும்? குப்பையைக் கூட்டிக் குமிக்கிற வேலையை மட்டும்தான் இப்ப நான் செய்யறேன். குப்பை வண்டியை மகன்தான் இழுத்துக்கிட்டுப் போய், ஊருக்கு ஒதுக்கமா இருக்கிற முனிசிபாலிடி நிலத்துல சாச்சிட்டு வர்றான்!''

பெருமாயி பேசிக்கொண்டிருக்கும்போது அதைக் கேட்டபடியே வைத்தியநாதன் கொல்லைப்புறத்துக்கு வந்தார். கைவசம் கொண்டு வந்திருந்த ஈரத் துணிகளையெல்லாம் கொடியில் காயப்போட ஆரம்பித்தார். இதற்குள் விசாலம் வீட்டுக்குள் சென்று பழைய சட்டை ஒன்றை எடுத்து வந்து பெருமாயியிடம் நீட்டினாள். பெருமாயி நன்றியுடன் அதை வாங்கிக்கொண்டு அகன்றாள். அந்தப் பழஞ்சட்டையைப் பார்த்ததைத் தொடர்ந்து வைத்தியநாதனுக்குத் தம்முடைய மகனின் நினைப்புத் தோன்றி ஒருமுறை மனத்தை நெருட ஆரம்பித்தது. ஒழுங்காய்ப் படிக்காமல், பள்ளிக்கூடம் போகாமல் ஊரைச் சுற்றியவனை அதட்டிக் கண்டிக்கப் போய் மிரண்டு வீட்டை விட்டே ஓடிப்போயிருந்தான் அவன். அப்படி ஓடிப்போனவனின் நினைப்பாலும் அவன் உண்டாக்கியிருந்த களங்கத்தாலும் வைத்தியநாதனின் விழிக் கடையோரம் நீர் திரண்டிருந்தது. விசாலத்தின் விழிகளிலோ அது பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இருவரும் ஒருவரை யொருவர் அந்தக் கண்ணீருடன் பார்த்துக் கொண்டனர்.

மூபாரக் சைக்கிள் ஷாப்பின் சின்னஞ்சிறிய கடிகாரத்தின் சிறிய முள் ஒன்பதிலும், பெரிய முள் நான்கிலும் நின்று கொண்டிருந்தது. கால் கடுக்க அல்லிக்குட்டை வரை சென்று மீண்ட களைப்பு நெட்டித் தள்ளக் கடிகாரத்தைப் பார்த்தான் அய்யாக்கண்ணு. இதயத்தின் துடிப்பு சற்று அதிகரித்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் இதேபோல்...

இனியும் அந்த நிலை நீடிப்பதை விரும்பாத அவன் அடியையும் கேலியையும் பொருட்படுத்தாது வகுப்பறையில் நின்றுகொண்டாவது பாடம் கேட்கத் துணிந்த நிலையில் பள்ளியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

வைத்தியநாதன் அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தரை விரித்து வைத்துக் கொண்டு மாணவர்களின் வருகையைப் பதிவு செய்துகொண்டிருந்தார். மனம் மிகுந்த சலிப்பிலும் சோர்விலும் தொய்ந்திருந்தது. அந்த நேரம் பார்த்து வகுப்பறையின் வாசலுக்கு வர்து நின்றான் அய்யாக்கண்ணு. விழிகளில் பயம் வழிய அவன் நிற்பதைக் கண்ட வைத்தியநாதனுக்கு ஒரு விநாடி திகைப்பாக இருந்தது. தொள தொளவென்று மார்பை மூடிக் கொண்டிருக்கும் தன் மகனின் பழஞ்சட்டையுடன் அவனைப் பார்த்தபோது நினைப்பைப் பின்னுக்கி முந்தைய தினத்தின் காலைப் பொழுதுக்குச் செலுத்த அவர் தவறவில்லை.

'கொல்லைக்காரி பெருமாயியின் மகனா இவன்?!' — புருவ இடுக்கில் கேள்வியோடு வைத்தியநாதன் அய்யாக்கண்ணுவைப் பார்த்தார். அவன் வைத்தியநாதன் தாமதத்துக்கு உண்டான காரணத்தைக் கேட்கும் முன்னர் தானாக முந்திக் கொண்டு எந்தவிதமான வருட, நெருடலுக்கும் இடம் கொடுக்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஆறு மனமே ஆறு ②



பெண் பயணிகள், இடிபாடுகளிலிருந்து தப்பிக்க முள் பதித்த கவசத்தை பஸ்ஸில் ஏறும் போது, வழங்கி இறங்கும்போது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கவசத்தை வழங்குவதற்காக ஒவ்வொரு ஸ்டாம்பிலும் ரிடையர் ஆனவர்களை நியமிக்கலாம். (இளைஞர்கள் மன்னிக்க)

ஒரு யூதப் பெண்ணை யூதர்கள் கல்லால் அடித்துத் துன்புறுத்தினர். விபசாரம் செய்த பெண்ணுக்கு அவர்கள் கொடுக்கும் தண்டனை இது. அருட்கடல் ஏசுபிரான் இந்தக் காட்சியைக் கண்டு, 'உங்களில் யார் நல்லவர் உளரோ, அவரே இவளுக்குத் தண்டனை தரத் தகுதி உள்ளவர்!' என்று கூறும்போது யூதர்கள் ஒவ்வொருவரும் பின்வாங்கும் கட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

ஏசுபிரான் வாழ்க்கைச் சித்திரத்தை அவர் பிறந்த புனித நாளையொட்டி காணும் வாய்ப்புக் கிடைத்தால் அதைவிடப் பெரும் பேறு என்ன உண்டு? கருணையே வடிவாக, களங்கமற்ற உள்ளத்தோடு படத்தில் பவனி வரும் விஜயசந்தர் தத்ரூபமாக நடித்திருக்கிறார்!

யூத குருமார் ஏசுபிரானை 'மதத் துரோகி' என்று குற்றம் சாட்டிச் சிலுவையில் அறைந்து குருதியோட இழுத்துச் செல்லும் காட்சி எந்தக் கல் மனத்தையும் கரையச் செய்யும். 'அவர்கள் அறியாமல் செய்கிறார்கள். அவர்களை மன்னித்துவிடு!' என்று மொழியும் கருணாமூர்த்தியின் கருணையை என்னென்பது!

ஏசுபிரானின் அவதாரத்திலிருந்து சிலுவையில் அறையப்படும் காட்சி வரை வண்ணப் படம் கே. எஸ். பிரசாத்தின் கைவண்ணத்தில் சிறப்புற்றுப் பிரகாசிக்கிறது.

'கருணா மயூடு' என்ற தெலுங்குப் படத்தின் தமிழாக்கமான ''கருணாமூர்த்தி'' படத்தில் ஜக்கையா, கோபால் ராவ், ராஜசுலோசனா, சந்திரமோகன், வெண்ணிற ஆடை நிர்மலா என்று பல நட்சத்திரங்கள் பங்கேற்றுள்ளனர்.

அரசவைக் கவிஞர் கண்ணதாசனின் நெஞ்சை உருக்கும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஏசுபிரான் நடத்திய அற்புதங்களைக் கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளுக்குச் சிறிதும் பிறழாமல், வெள்ளித் திரையில் திறம்படச் சித்திரித்திருக்கிறார்கள்.

மறைந்த டைரக்டர் பீம்சிங் தொடங்கி வைத்த கருணாமூர்த்தியை ஆர். திருமலை டைரக்ட் செய்து பூர்த்தி செய்திருக்கிறார்.

குடும்பத்தோடு சென்று பார்க்கக் கூடிய படம். 'Dignified film' என்று ஒரு மனத்தோடு பாராட்டையும் அது பெறக் கூடியது.

— பி. எஸ். எம்.



காமல், அவமானத்துக்கும் அஞ்சாமல் அல்லிக்குட்டை வரை குப்பை வண்டியைத் தள்ளிச் சென்று குப்பையைச் சாய்த்துவிட்டுத் திரும்பவும் வண்டியுடன் வீடு திரும்பி, அதற்கும் பின்னர் பள்ளிக்கு ஓடிவந்த சேதியைச் சொல்லி நிறுத்தினான். வகுப்பறை அதைக் கேட்டுவிட்டுப் பெரிதாக அதிர்ந்து குலுங்கச் சிரித்தது. வைத்தியநாதன் திகைப்புடன் அய்யாக்கண்ணுவையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''சார்! இனிமேல் எப்படியாவது சீக்கிரமா வர முயற்சி பண்றேன் சார். எங்கம்மாவுக்கு இன்னும் கொஞ்ச நாள்லே குழந்தை பிறந்துடும். அதுக்கப்புறம் எங்கம்மாவே அந்த வேலையைப் பார்த்துக்குவாங்க....அதுவரைக்கும் கொஞ்சம் லேட்டானாலும் என்னைக் குச்சியால மட்டும் அடிக்காதீங்க சார். நான் பூரா பெஞ்சு மேலே வேணாலும் நிக்கறேன். குச்சியால மட்டும் அடிக்காதீங்க சார். கை வலியை என்னால தாங்கிக்கிட்டு மறுநாள் வண்டி இழுக்கவே முடிய மாட்டேங்குது. ஆகையினால என்னை அடிக்காதீங்க சார்...''

—இயந்திரமாய்ப் பேசினான் அய்யாக்கண்ணு. அதைக் கேட்டு வகுப்பறை மறுபடியும் குலுங்கிச் சிரித்தது. வைத்தியநாதன் திகைப்பைக் கைவிட்ட நிலையில் வகுப்பறைப் பக்கம் சிந்தனையுடன் திரும்பினார். மாணவன் ஒருவன் அவரைப்புரிந்து கொண்டதாய் நினைத்து வகுப்பறையைவிட்டு வெளியேறி அசோக மரத்தின் கிளைக் குச்சி ஒன்றை ஒடித்து எடுத்து வந்தான்.

இரண்டும் இரண்டுமாக நான்கு மைல் தொலைவுக்கு இரும்புக் குழலைப் பற்றிக் குப்பை வண்டியை இழுத்துக் கொண்டு போய்விட்டு வந்ததன் விளைவாக அய்யாக்கண்ணுவின் கைகளிரண்டும் கன்றிச் சிவந்தது. அது மேலும் சிவந்து உதிரத்தைப் பீச்சப் போவதை எண்ணியபோது அவனால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''சார் என்னை அடிக்காதீங்க சார். இனிமேல் லேட்டா வரமாட்டேன் சார்... சார் என்னை அடிக்காதீங்க சார்'' — குமுறலுடன் வார்த்தைகளைச் சிந்தினான் அய்யாக்கண்ணு. தொடர்ந்து அவன் அழ ஆரம்பித்த அதே வேளையில் போற்றி மகிழ வேண்டிய ஒருவனைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரித்து அவமதித்த குற்றத்துக்காக வகுப்பறையின் மாணவர்களைக் கண்டித்து அறிவுரை வழங்கினார் வைத்தியநாதன்.

ஸ்தம்பித்து வாத்தியாரையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்ட அய்யாக்கண்ணுவைப் பெருமிதத்துடனும் உற்சாகத்துடனும் நோக்கினார்.

கல்வியினிடம் அவனுக்கு இருக்கும் நாட்டத்தையும் ஆர்வத்தையும் எண்ணியபோது நெடு நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல மாணவனைப் பார்த்த மகிழ்ச்சி அவருக்குள் அரும்பியது. 'உன்னை மட்டுமல்ல இனி எந்த மாணவனையுமே அடிக்க மாட்டேன்' என்ற எண்ணத்துடன் அவர் எறிந்த குச்சி வகுப்பறைக்கு வெளியே போய் விழுந்தது!



It's a widening scene at Shriram Fibres


One good thing leads to another for Shriram Fibres, leading manufacturers of Industrial Nylons.

The first product was nylon tyre cord for automotive tyres.

Then came nylon fishnet twine—proven 20% stronger than any other comparable brand.

And now, a breakthrough - Nylon Chips.
Shriram Fibres are the first to make Nylon Chips/ Moulding Powder in India—with quality that matches the world's best.

Shriram Fibres always look ahead...keep ahead.



Shriram Fibres Ltd.

Thiru Building,
160, Greames Road. Madras-600 006

OBM 3768 R



✖ கோடைக்கால பூங்காவில் ஐஸ்கிரீம் சாப்பிடும் பாகுவாசிகள்

வலதுபுறத்து மணற் குன்றின் சரிவில் பசுமை உமிழும் காடு அடர்ந்திருந்தது. செயற்கைக் காடுகள், செயற்கைப் பூங்காக்கள், செயற்கை நீரூற்றுக்கள் — அவ்வளவும் இயற்கையின் எழிலைத் தோற்கடித்துவிடக் கூடிய ஏற்பாடுகள்! 'இங்கு ஓர் அங்குல நீளமுள்ள புல் கூட இயற்கையாக முளைப்பதில்லை' என்ற அன்பர் அசீஃபின் சொற்களை நினைத்துக் கொண்டேன் — திட்டமிடப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த மனிதனுடைய உழைப்பாற்றலுக்குத்தான் எத்தனை வலிமை!

பாலைவனத்து மணலிலும், வெய்யில் கொடுமை வேர்வையிலும், வீசியடிக்கும் மணற் காற்றிலும் வேதனைப்பட வேண்டுமென்ற அச்சத்தோடு நான் இங்கு வந்தேன். பாலைவனத்திலே ஒரு சோலை வனத்தையல்ல, ஒரு சொர்க்கத்தையே படைத்து விட்டார்கள், சொர்க்க லோகத்தில் நம்பிக்கை இல்லாத பொருளியல் வாதிகள்! 'சொர்க்கம் இங்கேயும் படைக்கப் படலாம்' என்று நிரூபித்துக் காட்டி விட்டார்கள் போலும்!

அஜர்பைஜான் குடியரசு பற்றிய பல விவரங்களைத் தெரிந்து வைத்திருந்தார் அசீஃப். அவர் ஒரு புகைப்பட நிபுணர் மட்டுமல்ல, அந்த நாட்டின் பழங்கால வரலாறு முதல் இன்றைய அரசியல், சமூக, கலாச்சார விவரங்கள் அனைத்தையும் தெரிந்து வைத்திருந்தார். அவருடைய உதவி கிடைத்திருக்காவிட்டால், அங்கு நாங்கள் தங்கிய மூன்று நாட்களில் அவ்வளவு இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்க முடியாது, அவ்வளவு விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்க முடியாது.

அஜர்பைஜான் முழுவதும் முன்பு பாரசீகத்துடன் (இப்போதைய ஈரான்) இணைந்திருந்தது. 1826ல் ரஷ்யாவுக்கும் பார





ரஷ்யச் சிரிப்பு

நான் கண்ட ரஷ்யா

அகிலன்

''தொடக்க காலத்தில் நாங்கள் நெருப்பை வழிபடும் ஜொராஷ்டிர சமயத்தைச் சார்ந்தவர்களாக, பாரசீகத்தின் பிற பகுதி மக்களைப் போலவே வாழ்ந்தோம். நெருப்பெரியும் பூமி யல்லவா இது? பார்ஸிகள் அதனால் தான் நெருப்பை வழிபடுகிறார்கள். ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு இங்கே இஸ்லாமிய சமயம் பரவியது. புரட்சிக்குப் பிறகு நாங்கள் புது வாழ்வு படைத்துக் கொண்டோம்'' என்றார் அசீப்.

''இங்கே சமய வழிபாட்டுச் சுதந்திரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டேன்.

''தாராளமாக இருக்கிறது. மசூதி, பள்ளிவாசல்களுக்குப் போக விரும்புகிறவர்கள், போய்த் தொழுகை நடத்தலாம். அவரவர் தனிப்பட்ட நம்பிக்கைக்கு யாரும் இங்கே குறுக்கே நிற்பதில்லை. ஆனால் நாட்டுக்குள்ள பொதுவான அரசியல் சட்ட திட்டங்களில் சமயம் குறுக்கிடக் கூடாது. கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், யூதர்கள், பௌத்தர்கள், சமய நம்பிக்கை யற்றவர்கள் அனைவருக்குமே இங்கு பொதுவான சட்டம்தான். அதை நாங்கள் மதித்துப் போற்றுவதால்தான் பொருளாதார — கலாசார — ஆன்மீகத்துறைகளில் நாளுக்கு நாள் பெருமளவுக்கு நாங்கள் வளர்ந்து கொண்டு வருகிறோம்.''

சமயம் விட்டுச் சமயத்துக்கு அங்கே கலப்புத் திருமணங்கள் இயல்பாக நடைபெறுகின்றன. பெற்றோரின் சமயத்தில் ஏதேனும் ஒன்றைப் பிள்ளைகள் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அல்லது 'சமயச் சார்பு அற்றவர்கள்' எனவும் அறிவித்து விடுகிறார்கள். பொதுவாகவே சில வயது முதிர்ந்தவர்களிடையே காணப்படும் அளவுக்குப் பல இளைஞர்களிடையே சமய உணர்வு காணப்படவில்லை என்று கூறலாம். மனிதர்களின் பெயர்களைக் கொண்டு மட்டிலும் ஓரளவு நம்மால் அவர்கள் சமயத்தைத்

சிகத்துக்கும் நடந்த போரில், அதன் ஒரு பகுதி ரஷ்யாவுடன் இணைந்தது. இப்போதைய ரஷ்ய அஜர்பைஜான் மக்கள் தொகை 60 லட்சம்தான். இதைப் போல் இரு மடங்கு மக்கள் இப்போது ஈரானில் வாழ்கிறார்கள்.

''அஜர்பைஜான் மக்கள் முஸ்லிம்களா?'' என்று கேட்டேன். இப்படிக் கேட்டதற்குக் காரணம் இருந்தது. மத்திய ஆசியப் பகுதிகளான உஸ்பெக், கஸாக் போன்ற குடியரசுகளில் வாழ்ந்தவர்களில், நடு வயதைக் கடந்தவர்களின் உடையைக் கொண்டு அவர்களை நாம் முஸ்லிம்கள் என்று சொல்லிவிடலாம். தலையில் குல்லாய் (Skull Cap) தரித்திருப்பார்கள், பெண்கள் வண்ணத் துணிகளில் 'கௌன்' அணிந்திருப்பார்கள். ஆனால் அஜர்பைஜான் குடியரசு மக்களோ நடை, உடை, பாவனைகள் முற்றிலுமே மற்ற ஐரோப்பிய இனத்தவரை ஒத்திருந்தனர்.

தெரிந்து கொள்ள முடிகிறது. உலகத்துச் சிறிய சிந்தனையாளர்களிடையே இலட்சியமாக மட்டும் உள்ள ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற பரந்த கொள்கையில் நம்பிக்கை கொண்ட புதிய இளைஞர் சமுதாயம் ஒன்று சோவியத் நாட்டின் பல குடியரசுகளிலும் தோன்றி வளர்ந்து வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. சமயம், இனம், மொழி இவற்றின் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசிய உணர்வும் சர்வ தேசிய உணர்வும் அங்கே அரும்பி மலர்ந்து வருகின்றன.

அஜர்பைஜான் குடியரசின் பொருளாதார வளத்தின் அடிப்படையான பெட்ரோல் — எரிவாயு பற்றியும், இந்தியாவுக்கும் அதற்குமிருந்த கலாச்சார தொடர்பு குறித்தும் இன்றைய கலாச்சார வளம் பற்றியும் இந்த மூன்று நாட்களில் கண்டும் கேட்டும் நாங்கள் அறிந்து கொள்ள விரும்பினோம். அதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன.

பகல் உணவை முடித்துக் கொண்டு அஜர்பைஜான் இயல் இசை நாடகமன்றத்துக்குப் புறப்பட்டோம். அதன் தலைவரும் உலகப் புகழ் பெற்ற இசை அமைப்பாளர்களில் ஒருவருமான திரு. நியாஸி எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார். தாகூர் நூற்றாண்டு விழாவின் போது, தாகூரின் 'சித்ரா'வை நாடகமாக்கி ரஷ்யா முழுவதிலும் அரங்கேற்றியவர் அவர். பல மேலை நாடுகளின் கலை அரங்குகளைக் கண்டவர். இந்திய அரசின் நேரு விருதைப் பெற்றவர். அவர் உயிருடன் உள்ளபோதே அவருக்கு ஒரு சிலை எழுப்பி அவரை அந்த நாடு பாராட்டியிருக்கிறது.

அவரிடமிருந்து தெரிந்து கொண்ட சில விவரங்கள்:

60 லட்சம் மக்கள் தொகை கொண்ட அஜர்பைஜானின் கலைஞர் யூனியனில், 500 இசை — நடனக் கலைஞர்கள், இசை அமைப்பாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் முழு நேரக் கலைஞர்கள். அந்தக் குடியரசில் 107 இசைப் பள்ளிகளும் 25 இசைக் கல்லூரிகளும் இயங்குகின்றன. அஜர்பைஜான் புராதன இசை — நடனத்துக்கும் வட இந்திய இசை-நடனத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தி, பார்ஸி, உருது முதலிய மொழிகளில் உள்ள சுமார் 500 சொற்கள் அஜர்பைஜான் மொழியில் இடம் பெற்றிருக்கின்றன. அந்தக் குடியரசின் புராதன இசையோடு, ரஷ்ய-பிரஞ்சு- ஜெர்மன் ஆங்கில இசைகளிலும் அவர்கள் வல்லுனர்களாக விளங்குகிறார்கள்.

''இங்கே 'பாப் மியூஸிக்' உண்டா?'' என்று கேட்டேன்.

'' 'பாப் இசைக்கு' இங்கு இடமில்லை. மரபுவழி இசையிலும் நவீன இசையிலும் நாங்கள் ஆர்வம் காட்டுகிறோம்'' என்றார் நியாஸி. பாப் இசையை ரஷ்யர்கள் தரக்குறைவான இசை என்று கருதுகிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

அந்தக் கலைக் கூடத்தில் சிறிதும் பெரிதுமான சில கலையரங்குகளும் சுமார் இரண்டாயிரம் பேர் அமர்ந்து காணக் கூடிய திறந்த வெளி அரங்கொன்றும் இருந்தன. நாங்கள் நியாஸியிடம் விடைபெற்றுக் கொண்டு வந்து, எங்கள் ஓட்டலை அடுத்திருந்த பெரிய தொரு பூங்காவில் உலவினோம். சிறுவர்களுக்கான குடை ராட்டினங்கள், 'காரம் போர்டு, டேபிள் டென்னிஸ்' விளையாட்டுக் கூடங்கள், கால் பந்து மைதானம் இவ்வளவும் அங்கிருந்தன. குடும்பம் குடும்பமாக நூற்றுக்கணக்கான பேர் அங்கு வந்து பொழுது போக்கினார்கள்.


''நாம் இந்திய நகரத்துக்குப் போய் அங்குள்ள இந்திய விடுதியில் சாப்பிடுவோமா?'' என்றார் அசிஃப்.

''இங்கேயா இந்திய நகரம்? இந்திய விடுதி?''

''ஆமாம், பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த வழியாகத்தான் உங்கள் நாட்டு வணிகர்கள் ஐரோப்பாவுக்கு வியாபாரம் செய்யப் போயிருக்கிறார்கள். அந்தப் பழங்காலக் கட்டிடங்களை — அவர்கள் ஓய்வுக்கும் உணவுக்கும் பயன்படுத்திய கட்டிடங்களை — பழுதுபார்த்துப் புதுப்பித்திருக்கிறோம்.

நாங்கள் புதிய பாகூ நகரத்திலிருந்து பழைய பாகூ நகரத்துக்குப் புறப்பட்டோம். புரட்சிக்கு முன்புவரை அது இஸ்லாமிய அரசர்களின் தலைநகரமாக இருந்தது. பழைய டில்லியைப் போல் சந்து பொந்துகள் நிறைந்த பகுதியாக அது இருந்தாலும் கூடிய வரை சுத்தமாகவே காட்சியளித்தது. அங்கே நான்கு புறங்களிலும் உயர்ந்த மதில்களால் சூழப் பெற்ற ஒரு பெரிய கல் கட்டிடம் இருந்தது. வாசல் கதவுகளை இழுத்து மூடியிருந்தார்கள். பழங் காலத்தில் பாலைவனத்தில் வீசும் சூறாவளியின் மணல் வீச்சிலிருந்து தப்புவதற்காக இப்படிப்பட்ட தடுப்புச் சுவர்களை அவர்கள் எழுப்பியிருக்க வேண்டும்.

எங்களோடு வந்த அசிஃப் அந்தக் கதவுகளின் இடுக்கு வழியாக உள்ளே நின்றவரிடம்



இப்படி ஒரு விளம்பரம்!



அன்புள்ள எலிவால்,
நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். நீ இல்லாமல் நாங்கள் எல்லோரும் வருந்துகிறோம்.... சீக்கிரம் திரும்பிவா...
உன் அன்புள்ள
மொண்ணை மூக்கு மற்றும் குடும்பத்தார்.

-இப்படி ''காணாமல் போனவர்'' பற்றிய விளம்பரம் ஒன்று ''ஹிந்து'' பத்திரிகையில் வந்துள்ளது.

—வெல்பால்



ஏதோ கூறினார். அவர் வெளியில் வந்து எங்களைப் பார்த்து விட்டுப் பிறகு அந்தக் கதவுகளில் ஒன்றை எங்களுக்குத் திறந்து விட்டார்.

உள்ளே பெரியதோர் அதிசயம் எங்களுக்குக் காத்திருந்தது. பழங்காலத்து உடைகளணிந்த இசை விற்பன்னர்கள் ஒருபுறம் அமர்ந்து அந்தக் காலத்து இசைக் கருவிகளைக் கொட்டி முழக்கிக் கொண்டிருந்தார்கள். மத்தியிலே நீண்ட இரு தண்ணீர்த் தொட்டிகள், பழங்காலத்துக் கல் தொட்டிகள், சில மரங்கள், சதுரமான சிறிய மைதானம். அங்கேதான் வியாபாரிகள் தங்கள் ஒட்டகங்களைக் கட்டி வைப்பார்கள் போலும். மதில் சுவர்களை ஒட்டி நான்கு புறங்களிலும் வரிசையாக அறைகள் தென்பட்டன. வாத்தியம் வாசித்தவர்களுக்கு ஓர் அறை, நிர்வாகிக்கு ஓர் அறை போக இன்னும் பதினெட்டு அறைகள் அங்கே இருந்தன. ஒரே ஒரு அறையைத் தவிர, மற்ற எல்லா அறைகளுக்குள்ளும் வெளிக் குடியரசுகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்த பயணிகள் குழுமியிருந்தார்கள். நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். சொல்லி வைத்தாற்போல் எங்களுக்கு ஓர் அறை அங்கே காலியாக இருந்தது.

பதினாறாம் நூற்றாண்டு விடுதி அது. ஆகவே அங்கே மின்சார விளக்கு இல்லை. அறைக்குள்ளே மங்கலாக மெழுகுவத்திகள் எரிந்து கொண்டிருந்தன. சுவருக்குச் சுவர் கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் ரத்தினக் கம்பளங்கள் தொங்கின. மேசை நாற்காலிகளுக்குப் பதிலாக உள்ளே இருந்த திண்ணைகளில் திண்டு மெத்தைகள் போட்டிருந்தார்கள். எதிரே முழங்கால் உயரத்துக்கு நீண்ட பெஞ்சுகள். அந்தச் சின்னஞ்சிறு அறையின் மூலையில் குளிர்காலத்துக்கு விறகெரிக்கும் கணப்பு இருந்தது. மேலே காற்றுப் போக வாயில் முகப்பில் சிறு துவாரங்கள் தென்பட்டன.

எங்களுக்கு முன் காணப்பட்ட பழங்காலத் தோற்றத்துக் கிண்ணங்கள், கோப்பைகள், மதுச்சாடிகள், எங்களுக்குப் பின்னேயிருந்த திண்டு மெத்தைகள் யாவும் எங்களை நானூறு ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டு போய் விட்டன. நாங்கள் எங்களைப் பழங்காலத்து இந்திய வணிக மன்னர்களாகவும் அஜர்பைஜானின் சுல்தான்களாகவும் நவாபுகளாகவும் நினைத்துக் கொள்ளத் தொடங்கினோம்! படாத பாடுபட்டுப் பாலைவனத்து வெயிலிலும் குளிரிலும் புயலிலும் பல நாள் துன்பப்பட்டு, எங்கள் ஒட்டகங்களுடன் ஒரு வழியாக இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம். இங்கே சில நாட்கள் தங்கி இந்த விருந்தோம்பலின் சுகங்களை அனுபவித்து விட்டு மீண்டும் எங்கள் ஒட்டகங்களோடு ஐரோப்பிய யாத்திரையைத் தொடர வேண்டும்!

பழங்காலத்து உடையிலேயே உணவு பரிமாறுகிறவர் காட்சியளித்து எங்களுக்கு வேண்டியவற்றைக் குறித்துக் கொண்டார். எனக்கு அரிசிச் சோறு, கோதுமைத் தோசை, வேக வைத்த கத்தரிக்காய், பச்சை மிளகாய், ஆலிவ் ஊறுகாய், பச்சையாகப் புதினா, மல்லி சோம்பு இலை, வெங்காயக் குருத்து, சிவப்பு முள்ளங்கி, இவ்வளவும் கிடைத்தன. என்னைப் போலவே பழங்காலத்து வணிகரிலும் ஒரு மரக்கறிப் பேர்வழி இருந்திருப்பாரல்லவா?

'காரவன் சராய்' என்று அந்த விடுதிக்குப் பெயர் சொன்னார்கள். அதை அடுத்து 'மூல்தானி சராய்' இருக்கிறது. இந்தியாவிலிருந்து இப்போது பாகிஸ்தானைச் சேர்ந்து விட்ட மூல்தான் நகருக்குப் பக்கத்திலிருந்து வந்த வணிகர்கள் வழக்கமாகத் தங்கிய விடுதி அது.

இரண்டு மணிப் பொழுதுக்கு மேல் அமைதியாக அங்கு தங்கி உண்டு களித்து விட்டு நாங்கள் வெளியே வந்தோம். அந்த அஜர்பைஜான் இசைக்கேற்ப எங்களைப் போல் அங்கு வந்திருந்த பயணிகள் — ஆணும் பெண்ணுமாக — ஆனந்தமாக நடனமாடிக் களித்துக் கொண்டிருந்தார்கள். உணவு, குடி, இசை, ஆடல், பாடல் இவ்வாறு அங்கே ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது. மனிதர்கள் இப்படித் தங்கள் அன்றாடக் கவலைகளையும் பொறுப்புக்களையும் அறவே மறந்து, சிறிது நேரத்துக்காவது இப்படி ஆடியும் பாடியும் ஆனந்தமாகப் பொழுது போக்கியதை நான் மிகவும் ரசித்தேன். அங்கே ஆடியவர்களில் இளைஞர்களும் பெண்களும் இருந்தார்கள், கிழவர்களும் கிழவிகளும் இருந்தார்கள், குழந்தைகளும் இருந்தார்கள். அவர்களோடு சேர்ந்து என் உள்ளமும் சிறிது நேரம் ஆனந்த நடனம் புரிந்தது.

''நகரின் இந்தப் பகுதிக்குத்தான் 'இந்திய நகரம்' என்று பழங்காலத்தில் பெயர்'' என்றார் அசீஃப். ''பாகுவுக்கு 25 கிலோ மீட்டர் தூரத்திலேயே இந்திய வணிகர்கள் கட்டிய ஒரு ஹிந்துக் கோயில் இருக்கிறது. 'ஜ்வாலாமுகி' என்ற சிவன் கோயில் அது'' என்றார்.

எனக்கு அவர் பேச்சில் அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லை. இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சியிலிருந்த நாடல்லவா இது? மக்களும் இஸ்லாமியர். எப்படி ஒரு சிவன் கோயில் இருக்க முடியும்?

''நாம் அதைப் பார்க்கத்தான் போகிறோம்'' என்றார் அசீஃப். (தொடரும்)

நிர்ப்பந்தங்கள்


கார்த்திகா ராஜ்குமார்

அதிகமாய் யோசித்துப் பார்த்ததில், நான் எடுத்திருக்கிற முடிவு எந்த வகையிலுமே தவறாகவே எனக்குப் படவில்லை. இன்றைக்கு அவர் வந்தவுடன் 'சரி' யென்று சொல்லி விடப் போகிறேன். இனியும் நான் தாமதிப்பதில் எந்தவித அர்த்தமுமில்லை. பாவம் அவர்! எனக்காகவே எவ்வளவு கண்ணியமாய், கனிவாய்க் காத்துக் கொண்டு...! அவரைப் பற்றி நினைக்கும் பொழுது, மனத்துக்கு இதமாய், இனம் புரியாத நிருப்திகள் மனத்தை நிறைக்கின்றன. அவரை முதன் முதலாகச் சந்தித்த நினைவுகள் மீண்டும் குமிழியிடத் தொடங்குகின்றன.

அன்றைக்கும் இதே போல்தான். இந்த சாயிபாபா காலனி பஸ் ஸ்டாப்பிங்கில் நின்று கொண்டு '20' நம்பருக்காகக் காத்திருந்தேன். பஸ் வரவில்லை. நேரம் பறந்து கொண்டிருந்தது. என் பதற்றத்தை அதிகப்படுத்தும் வகையில்... பஸ் ஸ்டாப்பிங்கில் என்னைத் தவிர 'இவர்' மட்டும் சற்றுத் தள்ளி நின்று கொண்டு எதையோ படித்துக் கொண்டிருந்தார். அவரும் வழக்கமாக '20ம்' நம்பரில் வருபவர்தான்.

வேறு வழியில்லாமல் ஆட்டோவிலாவது போகலாமென்று நினைத்தால், சொல்லி வைத்தது போல் ஓர் ஆட்டோ கூடக் கிடைக்கவில்லை. நேரமாக... நேரமாக... ஒரே பதற்றமாக இருந்தது. ஒரே ஓர் ஆட்டோ மட்டும், எங்களைப் பார்த்தவுடன் வர, நான் கூப்பிட்ட அதே நேரத்தில் அவருமே கூப்பிட்டார். ஆட்டோ வந்து நின்றது. அவர் வேகமாய், ஆட்டோவில் ஏறிக் கொண்டவுடன் ஒரு கணம் திகைத்துப் போனேன். வெளியில் எட்டிப் பார்த்த அவர், ''ஹலோ....மிஸ்... எந்தப் பக்கம் போறீங்க? நீங்களும் வரலாமே....'' என்றார். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. என் தயக்கத்தைப் பார்த்துச் சட்டென்று இறங்கிக் கொண்டு... ''மிஸ், நீங்க போயிடுங்க. அப்புறமா நான் போய்க்கிறேன்...'' என்று சொல்லிவிட்டு, பழையபடி தம் புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தார்.

எனக்கு ரொம்பவும் தர்ம சங்கடமாக இருந்தது. அவரை.. '''பரவாயில்லே வாங்க'' என்று கூப்பிடவும் தைரியமில்லாமல், ''தாங்ஸ்'' என்று ஒற்றை வார்த்தையை மட்டும் உதிர்த்து விட்டு ஆட்டோவில் ஏறினேன்.



அந்த நிகழ்ச்சிக்குப் பிறகும் அதே பஸ்



ஸ்டாப்பிங்கில் அவரை அடிக்கடி பார்ப்பேன்? ஒரு மெல்லியதான புன்னகை. அவ்வளவுதான் அவரிடம் தெரிந்த மாற்றம். நாளாக நாளாக எனக்கு அவர் மேல் இருந்த மதிப்பு உயர்ந்து கொண்டே போக ஆரம்பித்தது.

ஒருநாள், இவர் நான் பஸ் ஸ்டாப்பிங்குக்கு வந்து நின்றதும், தம் வழக்கமான புன்னகையை மலர விட்டு விட்டு, "எக்ஸ்கியூஸ் மீ மிஸ். உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னு உங்களோட சில விஷயங்கள் பேச ஆசைப்படறேன். உங்களுக்கு விருப்பம் என்றால் தயவுசெய்து சாயங்காலம் ஆறு மணிக்குக் காந்திபுரம் சூப்பர் மார்க்கெட் கிட்ட நில்லுங்க. நீங்க அங்கே இருக்கிறது, இல்லாம இருக்கிறதிலேயிருந்து உங்க விருப்பத்தை நான் தெரிஞ்சுக்குவேன்..." என்று மிக நிதானமாக, மெதுவாக வார்த்தைகளை உதிர்த்து விட்டு, பழையபடி போய் நின்று கொண்டார். நான் உண்மையாக அதிர்ந்து போனேன். இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் ஏனோ அவர் மீது கோபமும் வரவில்லை.

அன்று சாயங்காலம் ஆக ஆக அர்த்தமில்லாத பரபரப்புக்களும், இனிய கற்பனைகளும், அசட்டுத்தனமான எண்ணங்களும் என்னுள் எழ ஆரம்பித்தன. அவரைப் பற்றி எதுவுமே தெரியாமல் இருந்தும் கூட, ஆறு மணிக்குக் கண்டிப்பாகப் போக வேண்டும் போல என் மனம் ஆசைப்பட்டதை நினைக்க எனக்கே வியப்பாக இருந்தது. போவதா வேண்டாமா என்று மீண்டும் யோசித்துப் பார்க்க ஆரம்பித்து, இறுதியில் ஐந்து மணி எப்பொழுதாகும் என்று காத்திருந்தேன்.

மணி ஐந்து ஐம்பது, நான் காந்திபுரம் சூப்பர் மார்க்கெட் நெருங்கும் பொழுது... அவர் அங்கு எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்தவுடன் "ஹலோ" என்றார் உற்சாகமாக. புன்னகைத்தேன்.

"எங்கே நீங்க வராமப் போய் விடுவீங்களோன்னு நினைச்சேன், மிஸ்..." மறுபடியும் புன்னகைத்தார்.

"அப்படியே நடக்கலாங்களா. பார்க் வரைக்கும்? அங்கே போய்ப் பேசலாமே?"

நான் மறுக்கவில்லை. மௌனமாய்த் தலையாட்டினேன். இருவருமாக நடக்க ஆரம்பித்தோம். எனக்கு இது முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது. என் அப்பாவைத் தவிர இப்படி ஓர் ஆண் பிள்ளையுடன் கூட இந்தக் கோவை டவுனில் நடப்பது இதுவே முதல் தடவை. கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது.

சிதம்பரம் பூங்காவுக்குள் போனோம். ஒரு சிமெண்ட் பெஞ்சில் நான் உட்கார, எனக்குச் சற்றுத் தள்ளி என் எதிரே அவர் உட்கார்ந்தார். யோசிப்பவர் போல் அவர் சில நிமிடங்கள் மௌனமாய் இருக்க, அவரே தொடங்கட்டுமென்று நான் காத்திருந்தேன்.

"மிஸ் மஞ்சு..."

சட்டென்று வியந்து போய்ப் பார்த்தேன். 'என் பெயர் எப்படி...? இவருக்கு....?'

"மிஸ் மஞ்சு,... உங்க கூடப் பேசாமலே இருந்த போதும், உங்க 'நேம்' எப்படித் தெரிஞ்சதுன்னு பார்க்கறீங்களா! உங்க நேம் மட்டுமில்லே நீங்க ஏர் போர்ட்டிலே ஒர்க் பண்றது... இன்னும் உங்களைப் பற்றிய பல விவரங்கள் எனக்குத் தெரியும். விசாரிச்சு... நானுகவேதான் தெரிஞ்சுக்கிட்டேன்....

"மிஸ் மஞ்சு... எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. நான் இப்ப சொல்லப் போறது, தப்போன்னு எனக்குத் தோணிளுலும் எனக்கு இதைத் தவிர வேறு வழி தெரியலே....

"ஐ...லைக்...யு...மிஸ் மஞ்சு அண்ட்...ஐ...வாண்ட் டு ... மாரி ... யு ..."

எனக்குச் சிலிர்த்தது. குப்பென்று உடல் சூடேறிக் கொண்டு காது மடல்கள், கன்னமெல்லாம் 'ஜில்'லென்று சூடேறிற்று. அவர் இப்படி நேரிடையாய்ச் சொன்னதைக் கேட்டவுடன் முகம் சிவக்க வாயடைத்துப் போய் அப்படியே இருந்தேன்.

"மிஸ் மஞ்சு... தயவுசெய்து நான் இப்படிப் பேசறதாலே தப்பா எடுத்துக்காதீங்க.. பாருங்களேன்.. நான் என்னைப் பத்திச் சொல்லாமக் கூட.... அதுக்குள்ளே.... அவசரப்பட்டுட்டு.... ஸாரிங்க.....

"என் பேரு வரதராஜன். இருபத்தி ஒன்பது வயசு. இங்கேதான் ஹையர் செகண்டரி ஸ்கூல்லே ஒர்க் பண்றேன். எனக்கு அப்பா அம்மா யாரும் இடையாது. ஒரே ஒரு அக்காதான். மதுரையிலே இருக்கா. அக்கா இட்டத்தான் வளர்ந்தேன். அவங்களை அழைச்சுக்கிட்டு வந்து பெண் கேட்கலாமோன்னு நினைச்சேன்.... ஆனு உங்களைப் பத்தி விசாரிச்ச பிறகுதான் தெரிஞ்சது நீங்க வேறே ஜாதி நான் வேறே ஜாதின்னு... அதனாலேதான் அக்காவைக் கூப்பிட எனக்கு விருப்பமில்லே....

"உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிட்டதாலே எனக்கு என் எண்ணத்தை ஆசையை மாத்திக்கவும் முடியலே... உங்க அடக்கமான, மென்மையான சுபாவம்... ப்ளீஸ்... என்னை நம்புங்க! கதை விடறேன்னு நெனைக்காதீங்க... உங்க அடக்கம், அதிராம பேசறது.... குடும்பக் களை ததும்பும் முகம்... எல்லாம்.... எல்லாமே எனக்குப் பிடிச்



கிடுச்சு.... என் மனசிலே என் லட்சிய மனைவிக்கு என்ன உருவம் என் கற்பனைகளிலே கொடுத்திருந்தேனோ, அப்படியே நீங்க இருக்கிறீங்க.... இதை யெல்லாம் உங்க கிட்டச் சொல்றதுக்கு முன்னாலே எவ்வளவு நான் யோசிச்சேன் தெரியுமா?

''மிஸ் மஞ்சு.... இத்தனையும் நான் சொல்லிட்டதாலே நீங்க எனக்குச் சம்மதிச்சே யாகணும்னு இல்லே... உங்களுக்கும் தனிப்பட்ட ஆசைகள், விருப்பங்கள் இருக்கலாமில்லையா? நீங்க நல்லா யோசிச்சுப் பாருங்க என்னைப் பற்றி விசாரிச்சுப் பாருங்க. அப்புறம் முடிவுக்கு வாங்க....

''ஆறு எந்த முடிவானாலும் பரவாயில்லே. ரொம்ப நாள் என்னைக் காத்திருக்க வைச்சுடாதீங்க! ப்ளீஸ்.....''

வெகு நிதானமாய், அழகாய்ச் சொல்லிவிட்டு எழுந்தார் அவர். எனக்கு எல்லாம் கனவில் நடப்பது போலிருந்தது. இந்தக் காலத்தில் 'காதலை'ச் கொச்சைப்படுத்துகிறவர்களே அதிகமிருக்கிற இந்தக் காலத்தில் இப்படிக்கூட ஒருவர் இருக்க முடியுமா என்ன? நான் காதலிக்கிறவரே இப்படி மென்மையாய், பூவைக் கையாள்கிற மாதிரி நளினமா நடத்தி.... எனக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. அப்படியே இருந்தேன்.

''மிஸ் மஞ்சு...! அடுத்த மாதம் இதே நாள் அதாவது அக்டோபர் 18ந் தேதி எனக்கு நீங்க பதில் சொல்லுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலாமா?''

நான் மௌனமாய்த் தலையசைத்தேன். எழுந்தோம். என்னை பஸ்ஸில் ஏற்றி விடும் வரை என்னுடன் வந்தார், வெகு சில விஷயங்களை மட்டும் சொல்லிக் கொண்டு.

அன்று இரவு என்னால் தூங்க முடியவில்லை. அவரின் ஒவ்வொரு செய்கையும், அந்த இதமான, நிதானமான பேச்சும் என் மனத்தில் பதிந்து போயிருந்தன. அவர்



ரோமத்து ஆள் : வெயில் தாங்கவில்லே என்று இந்த ஆள் குடையைப் பிடித்துக் கொண்டு வானத்தில் குதிக்கிறார். பரவாயில்லையே! —லலிதா செல்லப்பா

அப்பா அம்மா இல்லாதவர் என்பதை நினைத்தவுடன் மனம் நெகிழ்ந்து இனம் புரியாத பரிதாப உணர்வுகள் என்னுள் கசிந்தன.

ஆனால் அப்பா.... என்னை வளர்த்து ஆளாக்கிய என் அப்பா... என்னுடைய இந்தச் சுய சம்பாத்தியத்துக்குக் கௌரவமான நிலைக்குக் காரணமான என் அப்பா...அவரின் மனத்தைப் பற்றி நினைக்கும்போது மட்டும் மனம் பெரிதாய்க் கனத்துப் போகிறது. அவருக்கு என்ன சொல்லப் போகிறேன்... அப்பா இதற்குச் சம்மதிக்கப் போவதில்லை. என் மேல் இருக்கும் அன்புக்காக அப்பா சம்மதிக்க நினைத்தாலுமே இந்தச் சமுதாயம் அவரை அப்படிச் செய்ய விடாதே!...

எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்துப் போனேன். குழம்பினேன். கடைசியாக இந்த ஜாதிப் பிரச்னையைத் தூக்கி எறிந்துவிட்டு, அப்பாவைப் பிறகு மனம் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டு அவரிடம் என் சம்மதத்தைத் தெரிவிப்பதென்று முடிவு செய்தேன்.

இன்றைக்குத்தான் அக்டோபர் 18. அவருக்கு முடிவு சொல்ல வேண்டிய நாள்.

மாலை மணி ஐந்தரை. எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார் அவர். ஆவலும், பரபரப்பும் அவர் முகத்திலேயே தெரிந்தது. சந்தோஷமான திருப்தி எனக்கு. அன்றைய தினம் போலவே இன்றும் பார்க்கை நோக்கி நடக்கிறோம். என்ன... எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தயங்கிக் கொண்டிருந்த போது ஒரு பூக்காரி, ''யம்மா.... பூ வாங்கிக்கம்மா, மகாலட்சுமியாட்டமா இருக்கே... வியானக் இளமையும் அதுவுமா பூவோட இரும்மா..'' என்றாள். எனக்கு அவள் அப்படிக் குறுக்கிட்டது ஒரு நல்ல சுப சகுனமாக, நல்ல அடையாளமாகத் தெரிந்தது.

''மூணு முழம் எடும்மா'' என்று சொல்லிவிட்டு, அவரிடம், ''என்னங்க காசு கொடுத்திருங்க'' என்றேன். இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத அவர் ஒரு கணம் திகைத்துப் போய்விட்டு, ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தார். அவள் போனவுடன், ''என்னங்க... மிஸ் மஞ்சு.... நான் சொன்னது....'' என்று தயங்கினார்.

''இனிமே நான் மிஸ் மஞ்சு இல்லே... உங்க மஞ்சு — இப்ப மட்டுமில்லே; இனி எப்பவுமே நீங்கதான் எனக்கு இப்படிப் பூ வாங்கித் தரப் போறீங்க....''

அவர் புரிந்து கொண்டு சந்தோஷப் பரவசத்தில் பூரித்துப் போனார்.

அவரின் நண்பர்கள் சிலரும் என் தோழிகள் சிலர் மட்டுமே மருதமலையில் நடந்த எங்கள் கல்யாணத்துக்கு வந்து வாழ்த்திவிட்டுப் போனார்கள். இதயம் நிறைந்து போய், மகிழ்ச்சியில் அமிழ்ந்து போயிருந்த அந்த வேளையிலும் என் இதயத்தின் ஒரு பக்கமாய் அழுதேன். அப்பா இல்லாமல், என் தங்கைகள் இல்லாமல்!.... அப்பா! இதற்காக எந்த அளவுக்குத் துடித்துப் போவாரோ என்று நினைத்துப் பார்க்கவே வயிற்றைக் கலக்கியது. இருந்

தாலும் அப்பாவிடம் போய் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று முடிவு செய்தேன்.

இன்று சாயங்காலம் நானும் அவரும், எங்கள் தெருவில் நுழைந்தவுடனேயே பக்கத்து, எதிர் வீட்டுக்காரர்களின் பார்வைகள் நிலைக்குத்திக் கொண்டன. முகச் சுளிப்புக்களும், அதிர்ந்துபோன பார்வைகளும் எங்களை வரவேற்றன. இதயம் பெரிதாய்ப் படபடக்க எங்கள் வீட்டை அடைந்தபோது, அப்பொழுதுதான் எதற்காகவோ அப்பா வெளியில் வந்தவர் எங்களைப் பார்த்தவுடன் அதிர்ந்து போனார்.

''அப்பா.... எங்களை மன்னிச்சுடுங்க... நாங்க உள்ளே வந்து விஷயத்தைச் சொல்றேன் பா....''

மெல்லச் சொல்லிவிட்டு நிமிர்ந்தபொழுது, அப்பாவின் பார்வை எங்கோ உறைந்து போயிருந்தது. 'இவர்' எனக்குப் பின்னால் தர்மசங்கடத்துடன் நின்று கொண்டிருந்தார். பக்கத்து, எதிர் வீட்டுக்காரர்கள், நடைபெறப் போவதைப் பார்க்க ஆவலுடன் இருந்தார்கள். திடீரென்று அப்பா எரிமலையாய் வெடித்தார்..... ''ஏய் மஞ்சு, நீ என் மகளே இல்லேடி..... நீ போயிடு.... இந்த இடத்தை விட்டுட்டு.... எனக்கு ஒரு மகள் இருந்தாங்கிறதையே நான் மறந்திடறேன்... தலை முழுகிடறேன்....''

வேகமாய் உள்ளே போனவர், பளீரென்று முகத்தில் அறைவது போலக் கதவைச் சாத்திவிட்டுப் போனார். என் இதயத்தை ஆயிரம் ஊசிகளால் துளைத்தது போலிருந்தது.

''மஞ்சு....! ஏம்மா அழறே நீ? இப்படியெல்லாம் நடக்கும்னு நாம எதிர்பார்த்தது தானே? வாம்மா... அழறதாலே எதுவுமே சரியாயிடப் போறதில்லே.''

அவருடன் நடந்தேன். இப்படி நடக்குமென்று முன்னமே எதிர்பார்த்திருந்தாலுமே இப்பொழுது நிதர்சனமாகக் கண்டுவிட்டதில் மனம் துவண்டு விட்டது. இதய மெல்லாம் வலித்தது. அவர் ஏற்கனவே சாஸ்திரி நகரில் எடுத்திருந்த வீட்டுக்குப் போனோம்.

அடுத்த நாள் இரவு. நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது யாரோ கதவைத்தட்டினார்கள். கதவைத் திறந்த எனக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அப்பா! என் அப்பாவேதான்!

கையில் ஒரு பையில் வாழைப் பழம் இன்னும் பல பொருட்களுடன் நின்றிருந்தார்.

''அ...ப்...பா...! வா...ங்...க...ப்...பா'' என் தொண்டை அடைத்துக் கொண்டது.

''நல்லா இருக்கியாம்மா... மஞ்சு? ஏம்மா... மாப்பிள்ளை எப்படி இருக்கார்?'' என்று கேட்டார். அதற்குள் பின்கட்டிலிருந்து வந்த இவர், ''வணக்கம் மாமா!'' என்றபடி, என் கைகளைப் பிடித்துக்கொள்ள, இருவரும் காலில் விழுந்தோம்.

அப்பா தன் கண்களில் கண்ணீர் வழிய, ''தீர்க்க சுமங்கலியா இரும்மா.... நல்லா

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பனிப் பிரதேசத்தில் குளிரில் வாழும் எஸ்கிமோக்கள் ரெப்ரிஜிரேட்டர்களை உபயோகிக்கிறார்கள். தங்கள் உணவு வகைகள் உறைந்து விடாமல் இருக்க! —கோ. தீபா



இருங்க....'' என்றார். தொடர்ந்து, ''அம்மா மஞ்சு.... நீங்க இரண்டு பேரும் துணிஞ்சு போய் இந்தச் சமுதாயத்தின் போலித்தனங்களை உடைச்சிருக்கீங்க, உடைச்சு உங்க வாழ்க்கையை அமைச்சுக்கப் போறீங்க. உங்க மாதிரி வர என்னாலே முடியாதேம்மா! அந்தச் சமயத்திலே உங்களைத் திட்டித் துரத்தினதாலேதான் இந்தப் போலியான சமுதாயத்திலே என்னோட போலி மரியாதைகள் காப்பாற்றப் பட்டிருக்கு. அப்போ நான் அப்படிச் செய்யலேன்னா நாளைக்கு உன் தங்கைகளின் கதி...?'' என்றார்.

என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. விம்மினேன். அப்பா தொடர்ந்தார். ''மாப்பிள்ளே... நீங்க இரண்டுபேரும் முதன் முதலா வந்தப்போ அப்படிப் பண்ணும்படி சூழ்நிலைகள் ஆயிடுச்சேன்னு அன்னைக்கு எப்படி அழுதேன் தெரியுமா? மாப்பிள்ளே! மஞ்சுவுக்கு அம்மா இல்லே. அவ தெரியாம பண்ற தப்பை எல்லாம் பொறுத்துக்குங்க. கண் கலங்காமக் காப்பாத்துவீங்கன்னு நினைக்கிறேன். வரட்டுமா மாப்பிள்ளே..... வரேன். மஞ்சு... உன் தங்கைகள் தனியா இருப்பாங்க....''

அப்பா எழுந்திருக்க என்னையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் உடைந்து போய், ஓடிச் சென்று அப்பாவைக் கட்டிக் கொண்டு குலுங்கி அழுதேன். அப்பா ஆதரவாய் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''அசடு.... ஏன் அழறே மஞ்சு... அழற மாதிரி எந்த தப்போ இல்லே, மனக் கசப்போ இல்லேயேம்மா.... எனக்கு நீ நல்ல வாழ்க்கை வாழறதை விடச் சந்தோஷம் இருக்காம்மா? அழக் கூடாது. எப்பவாவது நீ என்னைப் பார்க்கணும்னு சொல்லும்மா. இப்ப மாதிரியே வந்துட்டுப் போறேன். தவறி... நீ வந்துடாதேம்மா.... என்னைப் புரிஞ்சுக்க!'' என்று கூறிக் கண்களைத் துடைத்தபடி நடந்தார் அப்பா.

பூக்குழி

லக்ஷ்மி

18

திருச்சி ஜங்ஷனில் இறங்கி வெளியே வந்த காமேஷ் உடனடியாக ஒரு டாக்ஸியை எடுத்துக் கொண்டு ஊருக்கு விரையவில்லை. பஸ்ஸில்தான் பயணப்பட விரும்பினான். அருகிலிருந்த ஓர் ஓட்டலுக்குள் சென்று முதலில் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொண்டான்.

பூரி மசாலாவுடன் சூடான காப்பி இறங்கியதும் மூளை விறுவிறுக்கத் தொடங்கியது.

இரண்டு மணி பயணத்தின்போது அவன் எல்லாவற்றையும் தீவிரமாகச் சிந்தித்துத் தயாராக இருக்க வேண்டும். இனி அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் சர்வ ஜாக்கிரதையானதாக இருக்க வேண்டும். சந்தேகம் தட்டாமல் செயல்பட வேண்டும்—தவறுகள் ஏற்படவே கூடாது.

பெட்டிகளைப் பஸ் நிலையம் வரை சுமந்து வந்த பையனுக்குக் கூலி கொடுக்கச் சட்டைப் பையிலிருந்த பர்ஸைத் துழாவும்போது, ''என்ன சார்! சௌக்கியமா? இப்பத்தான் வரீங்களா?.... நம்ப ஊரை மறந்துட்டீங்களோன்னு நினைச்சேன்.'' பற்களைக் காட்டிய காக்கிச் சட்டைக்காரனைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

அந்த இளைஞன் அவன் ஏறவிருந்த பஸ்ஸின் கண்டக்டர். அவ்வளவுதான் தெரிந்தது. இத்தனை நெருக்கமாக உறவு கொண்டாடித் தொலைக்கிறானே யார் இவன்?... ராஜகுமாரின் சொந்தக்காரப் பையனா? கரும் பூனையாக இவன் எங்கே வந்து முளைச்சான்? காமேஷுக்கு உள்ளூறச் சீற்றம்.

''ஊரோடயே இப்போ வந்துட்டேன். நீயும் சௌக்கியம்தானே?....'' சமாளிக்க முயன்றான் காமேஷ்.

''நீங்க வரப்போவது தெரிஞ்சிருந்தா எனக்கும் ஒரு காமிரா வாங்கிட்டு வரச் சொல்லியிருப்பேன். நீங்க மறக்காம வாங்கிட்டு வந்திருப்பீங்க....'' காமேஷின் கழுத்திலே தொங்கிய காமிராவை ஆவலுடன் பார்த்தபடி சொன்னான் அவன்.

''செஞ்சிருக்கலாமே.... ஏன் கடிதாசி போடலே?''

''இன்னும் ஒரு தடவை அந்தப் பக்கத்து ஊர்களுக்கு வேலைக்குப் போவீங்க இல்லையா? அப்போ மறக்காம எழுதுவேன் — வாங்கிட்டு வரணும்....'' சிரித்துக் கொண்டே அந்த வாலிபன் பெட்டிகளைத் தூக்கி உள்ளே ஏற்ற உதவினான்.

நல்ல வேளை! அதற்குப் பின் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. பயணிகளுக்குச் சீட்டைக் கிழித்துக் கொடுத்துச் சில்லறைகளைச் சேகரித்துக் கொண்டு எதிரே இருந்த வெற்றிலை பாக்குக் கடையில் ஒரு கலர் வாங்கிக் குடித்துவிட்டு வேகமாக வந்தான். பஸ் புறப்படுகிற நேரம். 'ரைட்... ரைட்' என்று கத்திக் கொண்டே வழி காட்டியபடி பின்னால் தொத்தி ஏறிக்கொள்ளத்தான் நேரம் இருந்தது.

மீதிப் பயணிகளுக்கும் சீட்டு வழங்கிக் கொண்டு அருகில் வந்து மறுபடியும் தொண தொணக்கப் போகிறானே என்று காமேஷ் கண்களை மூடிக்கொண்டு ஆசனத்தில் சாய்ந்துகொண்டு விட்டான். இடை இடையே மெல்லக் கண்களைத் திறந்து ஜன்னல் வழியே போகும் இடத்தை ஆராய்ந்தான். வலது பக்கத்திலே பசும் பாய் விரித்தாற்போல் நெற்பயிர்: கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல்கள்.... அதற்குப் பின்னால் நீலமாக ஏதோ ஒரு மலைத் தொடர்—பின்னர் வானம்... இடது பக்கத்திலே இரு கரையும் தொட்டுக் கொண்டு கம்பீரமாக நகர்ந்த அகண்ட காவேரி நதியின் நீர்ப்பரப்பு. தண்ணீரைக் கண்டதுமே அவனுக்குள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. அலை மடிப்புகளுக்கிடையே மறைந்துபோன ராஜகுமாரின் நினைப்பு நெஞ்சை உறுத்தவே சட்டென்று பார்வையை வயல்களின் பக்கம் திருப்பினான். சில்லென்று ஜன்னல் வழியே குளிர் காற்று வேகமாக வீசிவிட்டது போன்று அவன் உடல் சிலகணங்கள் வெட வெடவென்று நடுங்கியது. தன் அச்சத்தை உதறுகிறவன் போல் பல முறை தொண்டையைச் செருமிக் கொண்டான்.



பஸ் வேகமாக ஓடியது. நடு நடுவே பயணிகள் சிலரை இறக்கி விடவும் சிலரை ஏற்றிக்கொள்ளவும் நின்றது. 'திருநல்லூர்...' என்று கத்திய கண்டக்டர் அருகில் வந்தபோது பஸ் குலுக்கலுடன் நின்றது.

சாமான்களை இறக்க உதவிவிட்டு கண்டக்டர் அவனைப் பார்த்து முறுவலித்தான். ''பதினைஞ்சு நிமிஷம்தான் இங்கே பஸ் நிற்கும். அதுக்குள்ளே ஒரு டீ ஒரு பன் ஏதாச்சும் சாப்பிடணும். பயணிகளைக் கவனிக்கணும்... நேரம் கிடைச்சாப் பின்னால் ஒரு சமயம் வந்து பார்க்கிறேன்....'' விடை பெற்றுக்கொண்டு காதிலே பென்சிலும் கையில் டிக்கெட் புத்தகமுமாக டீக்கடைப் பக்கம் நடையைக் கட்டினான்.

'அப்பாடா' என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டபடி தன்னைச் சுற்றிலும் பார்த்துக்கொண்டான் காமேஷ்.

'பெரியதனக்காரர் கனகசபை வீடு எங்கே இருக்கிறது என்று கேட்டால் வம்பாகி விடுமே? ராஜகுமாருக்கு அவன் வீடு இருக்கும் இடம் கூடத் தெரியாதா? அதிசயமா இருக்கே....' என்று ஆரம்பிக்கும் பேச்சு சந்தேகத்தில் போய் முடிந்துவிடும். அதற்கெல்லாம் இடம் கொடுக்கவே கூடாது... குழப்பத்துடன் மறுபடியும் சுற்றும் முற்றும் பார்த்தான்.

முண்டாசை அவிழ்த்து இடுப்பில் கட்டிக்கொண்டு இன்னொரு காக்கிச் சட்டைக்காரன் — வயதானவன் — டீக்கடை வாசலிலிருந்து விரைந்து வருவதைக் கண்டான்.

''சிங்காரம்.... சீக்கிரம் போ.... ஐயா எத்தனை நேரம் காத்துக்கிட்டு இருப்பார்...'' யாரோ கத்தியது கேட்டது.

'இவன்தான் அந்த நாளிலிருந்து வீட்டில் வேலை செய்யும் சிங்காரமா?'....

''வந்திட்டீங்களா யஜமான் — முதல் நாள் தந்தி கிடைச்சப்போ நான் இங்கே வந்து காலைப் பொழுது முழுவதும் உட்கார்ந்துகிட்டு இருந்தேன். வீட்டிலே எல்லோருக்கும் கவலையாயிடுச்சு — இன்னிக்கு மட்டும் நீங்க வராட்டி நானே ஒரு பயணம் பட்டணம் வந்து பார்க்கிறதுன்னு முடிவு கட்டியிருந்தேன்.''

''அப்படியா?''.... மெல்லச் சிரித்தான் காமேஷ். கிழவனுக்குக் கண் பார்வை



சிரி சிரி சிரி!

மனைவி : பிரசுரத்திற்கு ஏற்றது அல்ல என்று திருப்பி அனுப்பிய கதையை ஏன் அதே பத்திரிகைக்கு மறுபடியும் அனுப்பறீங்க?

எழுத்தாளர்: உனக்கென்ன தெரியும்? பழைய ஆசிரியர் போய் அங்கே புது ஆசிரியர் வந்திருக்கார்!

✕

அவர்: "காப்பிக்கு பில்லை நீங்க கொடுக்கறீங்களா நான் கொடுக்கட்டுமா?"

இவர்: "ஏதேது நீங்க கேட்கறதைப் பார்த்தா நீங்களே கொடுத்திடுவீங்க போலிருக்கு!"

✕

கணவன்: "நம்ம பையன் சிகரெட் பிடிக்கிறான் என்று நினைக்கிறேன்!"

மனைவி: "எப்படி சொல்றீங்க?"

கணவன்: "தினமும் என் பாக்கெட்டிலே சிகரெட் குறையறது!"

✕

கோபு: "எங்கப்பா ஒரு விளம்பரப் பிரியர்."

பாபு: "அப்படியா!"

கோபு: "ஆமாம் சின்ன வயசிலே இவரோட போட்டோ பத்திரிகையில் வரணும் என்பதற்காகவே வீட்டை விட்டு ஓடிப் போயிருக்கார்ன்னு பார்த்துக்கோயேன்!"

— ஆர். கோபாலகிருஷ்ணன்



சரியாகத்தானே இருக்கிறது.... ராஜ்குமார் என்றுதானே அவனை எண்ணிக் கொண்டிருக்கிறான்?

அவனது சந்தேகத்தை நிவர்த்திப்பது போல் சிங்காரம் கேட்டான். "முன்னை விடக் கொஞ்சம் இளைச்சுப் போயிட்டீங்க. அந்த ஊர்ச் சாப்பாடு ஒத்துக்கலையா? உடம்புகள் கூடக் கறுத்துப் போச்சே? அந்த ஊர்லே ரொம்ப உஷ்ணமாமே? நல்லவேளை பத்திரமா வந்து சேர்ந்துட்டீங்க... முத்து மாரியம்மா விழா வருது.... அந்தச் சமயத்திலே நீங்க வீட்டிலே இருக்கிறது நல்லதா போச்சு." பெட்டிகள் இரண்டையும் ஒன்றன் மேல் ஒன்றாகத் தலை மீது அடுக்கிக்கொண்டான். "வேறே சாமான் ஒண்ணுமில்லீங்களே — அந்தப் பையை இப்படிக் கொடுங்க. நான் தோளில் மாட்டிகிட்டுத் தூக்கியாறேன்...." பையை வாங்கித் தோளில் மாட்டிக்கொண்டான். "இப்ப போகலாங்களா?" கேட்டுவிட்டுச் சிங்காரம் முன்னே நடந்தான்.

'வீடு அருகில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிங்காரம் வண்டியைக் கட்டிக் கொண்டு வந்து அழைத்துப் போயிருப்பான்.' என்று எண்ணியபடி அவனைத் தொடர்ந்தான் காமேஷ்.

'சேலத்துக்கு ஒரு நாள் போயிட்டு வருவதற்குள் 'சிங்காரம்! அம்மா எப்படி இருக்காங்க? சின்னம்மா என்ன பண்ணிக்கிட்டிருக்காங்க?' என்று பஸ்ஸிலிருந்து இறங்கும் போதே கேட்டுவிடும் மனுஷன் மூணு வருஷம் கழிச்சு வந்திருக்கிறார். வீட்டைப் பத்தியோ, பெத்தவளைப் பத்தியோ ஒரு வார்த்தை கேட்கலையே? வெளியூர் போனாலே இப்படியா மாறிடுவாங்க?'.... பெருமூச்சுடன் சிங்காரம் நடந்தான்.

"அத்தை அவர் வந்துட்டார்...." கூவிக் கொண்டு உள்ளே சென்ற அகல்யா பூஜை யறைக்குள் சென்று குலதெய்வத்தின் படத்தின் முன் விழுந்து கும்பிட்டாள். உணர்ச்சி வசத்திலே அவள் உடம்பு நடுங்கியது. கண்களில் நீர் புரண்டது. சமாளித்துக் கொண்டு சமையலறைக்குள் விரைந்தாள். அவசரமாகப் பாலை அடுப்பில் ஏற்றிச் சூடாக்கத் தொடங்கினாள். ஹாலில் நாற்காலியில் அமர்ந்திருந்த கிழவியை உள்ளே நுழையு முன்பே கவனித்து விட்டான் காமேஷ். காலணிகளை நடையில் கழற்றி வைத்து விட்டு மெல்ல நடந்து உள்ளே வந்தான். இந்த இடத்தில் ராஜ்குமார் என்ன செய்திருப்பான்? 'அம்மா!' என்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆர்ப்பரித்திருப்பானா? அவனுக்கு ஒரு சிறு குழப்பம்.

காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பினாள் பஞ்சரத்தினம். பார்வையை இழந்த அவளது கண்கள் பரக்க விழித்தன.

"ராஜா! வந்துட்டியாடா என் கண்ணு!— இப்படி வா. உன் முகம்கூடத் தெரியலையே. கிட்ட வாப்பா...." கிழவி பதறிக்கொண்டு கைகளை நீட்டிக் கூவி அழுதாள்.

குற்ற உணர்விலே தள்ளாடிப் போன காமேஷ் அவள் அருகே சென்று மெல்ல அவள் கையைத் தொட்டான். பஞ்சரத்தினம், அவனை இழுத்துத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு 'ஓ'வென்று அழுதபடியே கையால் அவன் முடி — மூக்கு — கண்கள் — முகவாய் என்று மெல்லத் தொட்டுப் பார்த்தாள்.

"நிஜம்தான். என் ராஜா வந்துட்டான். இனி எனக்குப் பார்வை வந்தாலும் சரி, வராட்டாலும் சரி. யமன் வந்து கூப்பிட்டாலுமே பயப்பட மாட்டேன்.... என் கண்ணு கையாலே கொள்ளி வாங்கிட்டு நிம்மதியா...."

"அத்தை! இதெல்லாம் என்ன பேச்சு?"— இனிமையாக ஒலித்த குரலைக் கேட்டுத் திரும்பிய காமேஷ் அயர்ந்து போய்விட்டான். காஞ்சிபுரப் பட்டுச் சேலை சரசரக்க, தலையில் கட்டாகச் சூட்டிக் கொண்டிருந்த மல்லிகை மணக்க நடந்துவந்த அகல்யா அருகிலிருந்த மேஜை மேல் கையில் கொண்டு வந்திருந்த வெள்ளி டம்ளரை வைத்தாள்.

"அத்தை காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடலை. கோதுமைக் கஞ்சி வைச்சிருக்கேன்— உங்க கையாலே குடுங்க — இப்போ சாப்பிடுவாங்க.... வெந்நீர் தயாரா இருக்கு. முதல்லே தலை முழுகிட்டுக் கோயிலுக்குப் போயிட்டு வரணும்" என்றாள்.

விழுங்கிவிடுவான் போல் சிவந்துபோன அவள் முகத்தை வியப்புடன் உற்றுப் பார்த்தான் காமேஷ். அவன் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது.

'இத்தனை பெரிய வீடு... இத்தனை அழகான மனைவி .... அனுபவிக்கக் கொடுத்துவைக்காத பயல் போய்விட்டான். கொடுத்து வைச்சிருக்கேன் — எல்லாத்தையும் அனுபவிக்க வந்திருக்கேன்.' பல்வேறு உணர்வுகளிலே பொங்கிப் புரண்ட அவன் நெஞ்சு விம்மித் தணிந்தது. மற்றும் ஒரு முறை அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கஞ்சி டம்ளரைக் கையில் எடுத்துப் பஞ்சரத்தினத்திடம் கொடுத்து, ''சாப்பிடுங்கம்மா...'' என்றான்.

சற்றுத் தூர நின்று கவனித்த அகல்யாவின் நெஞ்சு அனுக்குற்றது. வலது கை ஆள் காட்டி விரல் நுனியிலும் நடு விரல் நுனியிலும் பழுப்பு நிறக் கறை .... சிகரெட் பிடிக்கத் தொடங்கி யிருக்கிறாரே?.... புதுப் பழக்கம்! முத்து மாரிக்குத் தீமிதிக்க விரதமிருந்து காப்புக் கட்டிக் கொள்ளணுமே... இந்தப் பழக்கம் ஒத்து வராதே.....'

திடீரென்று அவள் மனத்தில் விவரம் புரியாத வேதனை கவிந்து கொண்டது. பஞ்சரத்தினம் கஞ்சியைக் குடித்துவிட்டு அவனது கரங்களைப் பிடித்துத் தன் கன்னத்தோடு அழுத்திக் கொண்டாள். ''என் வயிறு நிறைஞ்சு போச்சு. மனசும் குளிர்ந்து போச்சு....'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

சிங்காரம் உள்ளே வந்து நின்றுகொண்டு தலையைச் சொறிந்தான். ''உங்க பெட்டிகளைக் கொண்டு மாடியிலே வைச்சுட்டேன். குளிக்க எல்லாம் தயாராக இருக்கு. அதுக்கு முன்னாடி கூழைப் பசுவை வந்து கொஞ்சம் பார்த்துடுங்க....''

கூழைப் பசு?.... இது என்ன புதுக் கதை?

''உன்னுடைய செல்லக் குட்டி கன்னு போட்டிருக்கு. இன்னியிலிருந்து அதனுடைய பாலைத்தான் வீட்டிலே உபயோகப்படுத்தப் போறோம்.... போய் எட்டிப் பார்த்துட்டு வா.... வாயில்லா ஜீவன்.... பிறகு தலை குளிச்சிட்டுக் கோயிலுக்குப் போயிட்டு வந்து சாப்பிடு. நிறைய ஓய்வு எடுத்துக்கோ....'' தாயார் கட்டளை இட்டாள்.

''வாங்க. கொட்டிலிலேதான் கட்டியிருக்கு....'' சிங்காரம் முன்னே செல்ல அவன் பின்னே தயக்கமாகக் காமேஷ் நடந்தான்.

''கொஞ்சம் முதுகைத் தட்டித் தடவிக் கொடுங்க. நீங்க வரத் தாமதமாயிட்டப்போ இதுக்குக்கூடப் புரிஞ்சுடுச்சு. அம்மா... அம்மான்னு கத்திக்கிட்டே இருந்தது. பயந்துட்டேன் நான்....'' சிங்காரம் பேசிக் கொண்டே கொட்டிலில் நின்ற பசுவின் அருகில் போய் முதுகைத் தட்டினான்.

பக்கத்திலே அவன் இருக்கிறான் என்ற துணிவிலே வேண்டா வெறுப்பாகப் பசுவின் முதுகிலே காமேஷ் கையை வைத்தான்.

அவ்வளவுதான். ஆக்ரோஷமாகக் கொம்புகளை ஆட்டிக் கொண்டு சீறி அவனை முட்டித் தள்ள மூர்க்கமாகத் திரும்பியது செல்லக் குட்டி. நடுநடுங்கிப் போய்விட்டான் காமேஷ். ஒரே பாய்ச்சலில் ஓடிச் சென்று வெகு தொலைவில் நின்று கொண்டான்.



நிருபர் : உங்களுக்கு விபரீத ஆசை ஏதாவது உண்டா?

பாகவதர் : உண்டு அடுத்த ஜென்மத்திலே நான் கப்புடு ஆகவும், கப்புடு ஒரு சங்கீத வித்வானாகவும் பிறக்கணும் என்று!

—ஆர். கோபாலகிருஷ்ணன்

''கொஞ்ச நாளாச்சு இல்லையா... மறந்திருக்கும். பேர் சொல்லிக் கூப்பிட்டுத் தொட்டுப் பாருங்க. அடங்கிடும்.'' சிங்காரம் வற்புறுத்தியபோது காமேஷுக்குக் கடுங் கோபம்..... பொத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டது. ''ஷட் அப்! உன் வேலையைப் பார்த்துட்டுப் போ. அதைச் செய் இதைச் செய்யுன்னு நீ எனக்குச் சொல்லத் தேவையில்லை'' — எரிச்சலாக இரைந்து விட்டு உள்ளே திரும்பி விட்டான்.

''கூழைப் பசுவைப் பார்த்தியா?... உன் செல்லமாச்சே அது....''

தாயார் கேட்டு முடிக்கு முன் பின்னால் வந்த சிங்காரம் பதிலளித்து விட்டான்.

''அதென்னவோ ஐயா தொட்டதும் சீறிக்கிட்டு முட்ட வந்துடுச்சு. அதுக்கு ஏன்தான் அப்படி ஒரு வெறியோ தெரியலை.''

சமையலறையில் சோற்றைக் கிளறிக் கொண்டிருந்த அகல்யா கைவேலையைப் போட்டுவிட்டுத் திடுக்கிட்டு நின்றுவிட்டாள்.

பழக்கமாக நாய்க் குட்டி போல விளையாடும் பசு முட்ட வந்ததா? ஏன்? சொல்லத் தெரியாத ஒரு கலவரம் அவளுக்கு.

அடுத்தபடியாகத் தலையை முழுகிவிட்டுக் காமேஷ் துவாலையினால் தலையைத் துவட்டிக் கொண்டே இடுப்பில் ஈரத் துணியுடன் மாடிப் படிகளில் விரைவதை உள்ளிருந்தபடியே கவனித்துத் திகைத்துப் போனாள்.

குளியலறையிலிருந்து சுத்தமாக உடுத்திக் கொண்டுதானே வெளியே வருவார்....இப்படி ஈரத் துண்டோட தண்ணீர் சொட்டச் சொட்ட நடக்கிறாரே! இன்னும் என்னென்ன புதுப் பழக்கம் ஏற்பட்டிருக்கின்றனவோ? கடவுளே!

பின்னர் சிங்காரத்துடன் கோயிலுக்குப் போய்விட்டுக் காமேஷ் திரும்பிவிட்டிருந்தான். ''அகல்யா!'' அதிகாரமாக மாடியிலிருந்து கத்தி அவளை அழைத்தான். காய்ச்சிய பாலைத் தம்ளரில் நிறைத்துக்கொண்டு அகல்யா வெளியே வந்தாள்.

''எத்தனை தடவை கூப்பிடறது? இங்கே வா...'' மறுபடியும் அதட்டலாக மாடியிலிருந்து அவன் குரல் கேட்டது.

மூன்று வருஷங்களுக்குப் பின்னர் ஆசையுடன் அணுக வேண்டியவள் அச்சத்துடன்... ஏன் இப்படி.... என்ற திகிலுடன் மெல்ல மாடிப் படிகளில் ஏறினாள். (தொடரும்)

பாரதிராஜாவுக்கு அன்பளிப்பு!

"சிவப்பு ரோஜாக்கள்" ஹிந்திப் படப் பிடிப்பு முதல் நாளன்று வந்த ராஜேஷ் கன்னாவைப் பார்த்து பாரதி ராஜா, "உங்க குர்தா ரொம்ப நல்லாயிருக்கு" என்று கூறினார். படப் பிடிப்பு முடிந்து ராஜேஷ் கன்னா பம்பாய் சென்றுவிட்டார். பத்து நாட்களுக்குப் பிறகு பாரதி ராஜாவுக்குப் பெரிய பார்சல் ஒன்று வந்தது. பிரித்துப் பார்த்தார் பாரதி ராஜா. பல்வேறு வகையான குர்த்தாக்கள், பல வண்ணங்களில்! திகைத்து விட்டார் பாரதி ராஜா. "அன்புடன் ராஜேஷ் கன்னா" என்று சிறிய துண்டுக் காகிதம் காணப்பட்டது.

• • •

சிறந்த நடிகை, பரத நாட்டியத்தில் புகழ் பெற்றவர் வைஜயந்தி மாலா என்பது எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்லாமல் அவர் கோல்ஃப் விளையாட்டில் கெட்டிக்காரர்! கர்னாடக இசையும் முறையாகப் பயின்று வீட்டில் தினமும் சாதகம் செய்கிறார். "உங்களுக்குப் பிடித்தமான இயக்குனர்கள்?" என்று கேட்டேன். "நான் சந்த்ரமுகியாக நடித்த படம் "தேவதாஸ்". அதன் இயக்குனர் பிமல்ராய். அடுத்து "கத்புத்லி" படத்தில் என்னை இயக்கியவர் சக்ரவர்த்தி. அவரிடமிருந்து நான் பலவற்றைக் கற்றுக் கொண்டேன். அவரே நடித்துக் காண்பிப்பார், நாம் அசந்து விடுமளவுக்கு. நல்ல படம் என்று எனக்குப் பிடித்தது "கங்கா ஜமுனா." அது போஜ்புரி மொழியிலுள்ளது. "பஹார்" படத்திலிருந்தே நான் ஹிந்தி பேச ஆரம்பித்து விட்டேன். ஆனால் வட இந்தியர்கள் யாரும் நான் ஹிந்தி பேசுகிறேன் என்று நம்புவதில்லை! டப்பிங் என்றே நினைக்கிறார்கள்!" என்று கூறுகிறார் வைஜயந்தி மாலா. தமக்குப் பிடித்த இயக்குனர்கள் வரிசையில், ராஜ்கபூரைக் குறிப்பிடவேயில்லையே ஏன்?

• • •

"ஊமை கனவு கண்டால்" படத்தின் மூலம் ஒரு பத்திரிகையாளர் நடிகராக மாறுகிறார். அவர் முதல் நாள் நடித்தது ஒய்.ஜி. மகேந்திரனுடன். இவரைப் பார்த்தவுடன் ஒய். ஜி. மகேந்திரனுக்கு மிகுந்த சந்தோஷம். "நாம ரெண்டு பேரும் ஒரே காலேஜிலே படித்தோம். டிகிரி வாங்கினோம். இப்பொழுது ஒன்றாகவே நடிக்கிறோம். அபூர்வ ஒற்றுமை இல்லையா?" என்றார். "ஆமாம்" என்று தலையசைத்தார் நடிகராக மாறியிருக்கும் நவாக்கி ராகவன். இருவரும் படித்தது

✕ ராஜேஷ்கன்னா

✕ பாரதிராஜா



சினி மசாலா 'சலன்'

ஐ.ஐ.டி. யில். இரண்டு பேருமே நடிப்பது நகைச்சுவைப் பாத்திரத்தில்.

• • •

ஏப்ரல் 28ம் தேதி காமேஷின் கால் மருத்துவ மனையில் அகற்றப்பட்டது. அக்டோபர் மாதம் 3ம் தேதி இந்துபத்திரிகையில் ஒரு செய்தி. இந்த மாதிரி நோய் உள்ளவர்களுக்கு Prostacyclin என்ற மருந்தைச் செலுத்தினால் எழுபத்தி இரண்டே மணி நேரத்தில் உடல் குணமாகி எழுந்து நடக்கத் தொடங்கி விடுவார்கள். இந்த வகை மருந்தைப் போலந்து நாட்டில் டாக்டர் குழு ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறது. இச் செய்தி காமேஷை விட கமலா காமேஷைத் தான் அதிகம் பாதித்திருக்கிறது. ''ஆறு மாதத்துக்கு முன்பாகவே இந்த மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கக் கூடாதா?'' என்று ஏங்குகிறார்.

• • •

''திசை மாறிய பறவைகள்'' படத்தின் மூலம் அறிமுகமான கமலதா, கபில்தேவ் கமல ஹாசன் ஆகியோரின் ரசிகையாம்! சமையலே செய்யத் தெரியாது. ஆனால் ரசகுல்லாப் பிரியர். கத்திச் சண்டை, குதிரை ஏற்றம், கார் ஓட்டுதல் ஆகிய வைகளைத் தற்சமயம் கற்று வருகிறார்.

Saturday Night Fever படத்தைப் பார்த்ததின் விளைவு வீட்டில் அந்த ரிக்கார்டுகளை வாங்கிப் போட்டு டான்ஸ் வேறு ஆடிப் பழகுகிறார். இவர் முதன் முதலில் ஓர் அழகுப் போட்டியில் தான் புடவை கட்ட ஆரம்பித்தார். அது நாள்வரை புடவை கட்டத் தெரியாதாம்!









✖ 'ஊமை கனவு கண்டால்' படத்தில் ஒய். ஜி. மகேந்திரன் எம். என். ராகவன்
✖ கமலதா
✖ குடும்பத்துடன் இசையமைப் பாளர் [illegible]

சிலுவைகள் எத்தனை எத்தனை?



செயிண்ட் ஆண்டனி · கல்வரி · செயிண்ட் ஆண்ட்ரூஸ் · பாபல் · மால்டீஸ் · பேட்ரியார்ச்சல் · பொடோனி




ஜெரூசலம்

சிலுவைகளில் இன்னும் எத்தனையோ வகைகள் உள்ளன. இவை சில. பெருவாரியாகப் பழக்கத்தில் உள்ள சிலுவைக்குப் பெயர் லத்தீன் கிராஸ்.

—'கமல்மதன்'

லத்தீன்



'சாலரி!'

உப்பு மிகச் சாதாரணமான பொருளாக இன்று கருதப்படுகிறது. இல்லையா? தங்கத்தை விட விலை உயர்ந்த பொருளாக அது கருதப்பட்ட காலமும் ஒன்றிருந்தது! அந்தக் காலத்தில் ஜூலியஸ் சீசர் தம் படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கும் போது, ஊதியத்தில் ஒரு பகுதியாக உப்பையும் கொடுப்பாராம். அதற்கு 'சலேரியம்' என்று பெயர். அந்தச் சலேரியத்திலிருந்து தான் சம்பளத்தைக் குறிக்கும் 'சாலரி' (Salary) வந்தது!

-குன்றக்குடி பெரிய பெருமாள்.

நூறு கிலோ மீட்டர் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ரயில் வண்டியில் அமர்ந்து கொண்டு ஒருவர் செய்தித் தாள் படிக்கிறார். அந்த வண்டிக்கு வெளியேயுள்ளவர் அந்தச் செய்திப் பத்திரிகையின் தலைப்பு வரிகளைப் படிக்க முடியுமா?

-பெல்பால்



[illegible]

: ராஜு



விலை விஷம் போல் ஏறுகிறது என்று சொல்லக் கேட்கிறோம். ஆனால் நம்மில் பலருக்கும் பாம்பின் விஷம் என்ன விலைக்கு விற்கிறது என்பது தெரியாது. இதோ விலைப் பட்டியல்:

1 கிராம் நாகப்பாம்பின் விஷம் 8 ரூபாய்.
1 கிராம் கட்டுவிரியன் விஷம் 100 ரூபாய்
1 கிராம் விரியனின் விஷம் 330 ரூபாய்

தகவல்: 'சன்னைவன்'
ஆதாரம்: புரோப் இந்தியா

''உங்க புதிய காலனிக்கு நேற்று நான் வந்திருந்தும் எனக்கு நஷ்டம்.''

''எப்படி?''

''என்னுடைய புதிய காலணி தொலைந்து விட்டது!''



BK77Y S3Y Y3K4 – இது என்ன?

இப்போதைய ஆங்கில எழுத்துக்களுக்கு முப்பாட்டனுக்கு முப்பாட்டனாக இருந்த வடிவங்கள் வட செமிடிக் குறியீடுகள் என்கிறார்கள். அந்த வடிவத்தில் HAPPY NEW YEAR என்பது தான் இது.

— கயல்பாஸ்

எம். ஜி. ஆர். BLOW UP புகைப்படம்: 'சுவன்'

அடுத்த இதழ் BLOW UP ப்பகுதியைப் பார்க்கவும்


கல்கி



[பகவான் ரமணர் பிறந்தது 1879 ஆம் ஆண்டு. இது அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டு.]

ஒருமுறை இருள் கவியும் மாலைப் போதில் பகவான் ரமணர் தம் பக்தர் ஒருவருடன் ஆசிரமத்தில் உள்ளே அமர்ந்திருந்தார். அப்போது வெளியேயிருந்து யாரோ அழைப்பது கேட்டது. பக்தர், அழைப்பது யார் என்று பார்ப்பதற்காக எழுந்து வெளியே வந்தார்.

வாசலில் ஒரு மனிதன் தன் மனைவி குழந்தைகளுடன் நின்று கொண்டிருந்தான். தானும், மனைவி குழந்தைகளுடன் உள்ளே வந்து பகவானை வணங்கி ஆசி பெற முடியுமா என்று அவன் கேட்டான்.

பக்தருக்கு, அவனுடைய கேள்வி பெரு வியப்பைத் தந்தது. ஏனெனில் பகவான் ரமணர் எல்லோருமே அணுகக் கூடியவராக இருந்தார். ''ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்று பக்தர் அவனிடம் கேட்டார்.

''நாங்கள் தீண்டத்தகாதவர்கள்'' என்று அவன் சொன்னான்.

பகவான் ரமணருக்கு ஜாதி என்பது பொருளற்றது. மகரிஷியிடம் போய், இவன் உள்ளே வரலாமா என்று அனுமதி கேட்பது கூட அவருக்கு அபசாரம் விளைவிக்கும் செயல் என்பதை நன்கறிந்த அந்தப் பக்தர், அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான்.

அந்த எளிய பாமரன் தன் மனைவி மக்களுடன் மகரிஷியின் முன் நெடுஞ் சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினான். பத்து நிமிடங்கள் அவர்களுக்குப் பகவான் தரிசனம் தந்து அருள் பாலித்தார். பூரணமான அருள் அவர்களுக்கு அன்று கிட்டியது.

அவர்கள் சென்ற பின்னர் அந்தப் பக்தர் சொன்னார்: ''நானும் எத்தனையோ பேர் வந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். பெரும் செல்வந்தர்களும் பிரமுகர்களும் பகவான் ரமணரின் பாதங்களின் முன் வீழ்ந்து வணங்குவார்கள். ஆனாலும் அவர்களுக்கெல்லாம் கிடைத்ததைவிட இந்த ஏழைப் பாமரனுக்குப் பகவான் அருள் பாலித்து வாழ்த்தியது மிகவும் அற்புதமானது.''

மகரிஷி ரமணர் பேசியதே இல்லை என்று சொல்லலாம். பெரும் பகுதி அவர் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டே இருந்தார். பகவானின் திருமுன்னர் சென்று நிற்பது ஒன்றின் மூலமாக மட்டுமே தங்கள் துயரங்களை உதறிவிட்டு மனம் அமைதியடையப் பக்தர்களால் முடிந்திருந்தது.

மற்றொரு சமயம், அண்ணல் காந்திஜி அவர்களிடமிருந்து ஒருவர் மகரிஷியைக் காண வந்திருந்தார். சந்தித்து விட்டு அவர் விடைபெறும் போது, ''காந்திஜிக்குத் தாங்கள் என்ன செய்தி தருகிறீர்கள்?'' என்று கேட்டார்.

பகவான் ரமணர் சொன்னார் ''இதயமும் இதயமும் பேசிக் கொள்ளும்போது வேறு என்ன விதமான செய்தி தர வேண்டும் என்று கேட்கிறீர்கள்?''

—டபிள்யூ. சாமர்ஸெட் மாம்
எழுதிய ''தி ஸெயிண்ட்''
என்னும் கட்டுரையிலிருந்து.

—சுப்ரபாலன்



மினிஸ்டர் வறார்!



போட்டிக்கதை-14

ஜயேந்திரன்

இட்டிலிக்காரப் பொன்னம்மாக் கிழவியைச் சுற்றியிருந்தவர்கள் எழுப்பிய ஒலி, அந்த அதிகாலை நேரத்தில், அயர்ந்த தூக்கத்திலிருந்த முனுசாமியை எழுப்பியது.

குடிசைக்குள்ளே மெல்ல வெளிச்சம் பரவ ஆரம்பித்திருந்தது. ஓணான் மாதிரி தலையைத் தூக்கிப் பார்த்தான் முனுசாமி. குப்பம்மாவும், பார்வதியும் குப்புறப்படுத்திருந்தார்கள்.

முனுசாமிக்குச் 'சுர்'ரென்று மூளையில் அது உதித்தது. "ஐயையோ... ஆபீஸர் சொல்லிக்கிறாரே. இன்னிக்குக் கரெக்டா ஏழு மணிக்கு வந்துடணும்னு. ஏதோ மினிஸ்டரு வறாராமில்லே" — தனக்குள் பேசிக்கொண்ட முனுசாமி திரும்பவும் குடிசைக்குள் நுழைந்தான்.

பார்வதி மெல்லிய குரலில் முனகுவது அவனுக்குக் கேட்டது. 'த்சோ... த்சோ...' என்றவாறே அருகே போய், "என்ன புள்ளே?" என்று ஆதுரத்துடன் பார்வதியைத் தடவிக் கொடுத்தான்.

சூம்பிய வயிறு, இளைக் கொன்றாக வளைந்திருக்கும் கால்கள், மெல்லிய கைகள், முகம் மட்டும் பதினொரு வயதுக்கான களையோடிருந்தது.

பார்வதியைப் பார்த்ததுமே அவனையுமறியாமல் அவள் மேல் அவனுக்குப் பாசம் பொங்கி வழிந்தது.

"புள்ளே .... பார்வதி .... என்னம்மா வேணும்?" மீண்டும் தலையைக் கோதிவிட்டான் முனுசாமி.

"வயித்தே வலிக்குதுப்பா."

ஒருவேளை பசியா யிருக்குமோ என்று எண்ணியவன், இட்டிலி வாங்கக் காசிருக்குமா என்று பாண்டில் கையை விட்டுப்பார்த்தான். ஊஹூம்... சல்லிக்காசு இல்லை.

இப்போது குப்பம்மாவின் "அம்மா... அம்மா" என்ற முனகல் குரல் தெளிவாய்க் கேட்டது அவனுக்கு.

"குப்பம்மா.... இந்தா... இந்த மருந்தை ஊத்திக்க...." மருந்துப் பாட்டிலைத் திறந்தான் முனுசாமி.

தானாகவே வாயைத் திறந்து கொண்டாள் குப்பம்மா. அந்தக் கணவன் — மனைவியிடையே இன்னமும் ஊசலாடிக் கொண்டிருக்கும் பந்தம் இது ஒன்றுதான் — தினமும் அதிகாலையில் ஆபீசுக்கு அவன் கிளம்புவதற்கு முன்பு அவள் வாய் திறப்பாள். அவன் மருந்தை அவள் வாயில் விடுவான்.

அடுப்புக்கு அருகில் இருந்த சட்டியைத் திறந்து பார்த்தான். எல்லாம் காய்ந்திருந்தன. பக்கத்திலிருந்த குவளையிலிருந்து 'மடக் மடக்' கென்று தண்ணீரைக் கைகளால் மொண்டு குடித்தான். பார்வதியும், குப்பம்மாவும் இதற்குள் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தனர்.

"நா....வரம்புள்ளே." தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன், அழுக்கில் ஊறிப் போயிருந்த அந்தக் காக்கி பாண்ட், சட்டையை மாட்டிக் கொண்டு, குடிசை ஓரத்தில் சாத்தப்பட்டிருந்த அந்தப் பழைய சைக்கிளைத் தள்ளியவாறு ரோட்டுக்கு வந்து சேர்ந்தான்.

முனுசாமிக்குப் பத்து வயதிருக்கும் போது, அவனுடைய அப்பா 'பெரிய துரை' யின் வீட்டுத் தோட்டக்காரனாயிருந்தான். தோட்டவேலையில் அப்பாவோடு பாத்தி கொத்திக் கொண்டிருந்த அவனுக்குப் பதினாறு வயதானதும், தமது ஆபீஸிலேயே 'பியூன்' வேலை போட்டுக் கொடுத்தார் துரை.

'காய'மான கவர்ன்மெண்ட் வேலையில் இருக்கும் முனுசாமிக்கு 'நான்', 'நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுக்க முன்வந்தனர் உறவினர்கள். பெரிய சுயம்வரம் மாதிரி ஒன்று நடத்தி, குப்பம்மாவைத் தேர்ந்தெடுத்தனர் அவன் பெற்றோர்.

முனுசாமியோடு வாழ்க்கை நடத்தத் துவங்கிய குப்பம்மா தொடர்ந்து நாலு வருடங்கள் குறைப் பிரசவ வேதனைப்பட்டாள். கடைசியில் சூம்பிய வயிறுடனும், கோணல் மாணலான கால்களுடனும் பார்வதி பிறந்தாள். குப்பம்மாவும் படுக்கையில் நிரந்தரமாக விழுந்து விட்டாள். அவள் அருகிலேயே இனம் தெரியாத நோயில் விழுந்துவிட்டாள் பார்வதி. முகம் மட்டும் வயதுக்கேற்றபடி வளர்ந்ததே தவிர, உடல் வளரவேயில்லை.

ஆயிரம் கோட்டைகள் கட்டியிருந்த இதய மாளிகை இடிந்து விழுந்ததைக் கண்டதும், மனம் தளராமல் விவேகியானான் முனுசாமி. மாதச் சம்பளம், பிராவிடெண்ட் ஃபண்ட் தொகை என்று எல்லாவற்றையும் அவர்கள் இருவரின் நோய்ப் பசிக்காகவே இரையாக்கினான். என்றாவது அவர்கள் இருவரும் எழுந்து ஆரோக்கியமாக நடமாட மாட்டார்களா என்ற சபலம் அவனுக்கும்.

ஆபீசில் நுழையும்போது மணி சரியாக ஏழு அடித்து ஓய்ந்திருந்தது. அவசரம் அவசரமாக சைக்கிளை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு, நாலாவது மாடிக்கு ஓடினான் முனுசாமி.

சரியான நேரத்துக்கு வந்திருந்தும் கூட, ஏனோ, ஆபீஸர் அவனிடம் 'சிடுசிடு' வென்று தான் இருந்தார்.

ஆபீஸர் ரூமில், டேபிளைச் சுத்தப்படுத்தி விட்டு, பின்பு பிளாஸ்க், கண்ணாடி, ஜக்கு, டம்ளர்களைக் கழுவிவிட்டு, டெலிஃபோனை முனுசாமி துடைக்கும்போதுதான் பேசினார் ஆபீஸர்.

''க்விக்.... மினிஸ்டர் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வந்துடுவார். என்ன சுறுசுறுப்பே இல்லையே?'' விரட்டினார் ஆபீஸர்.

பெரிய பெரிய மாலைகளைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து வைத்தான் முனுசாமி. வளைவுத் தோரணங்கள், தமிழ் தெரியாத அந்த வடநாட்டு மினிஸ்டருக்கு 'வருக... வருக' வரவேற்புத் தோரணங்கள் கட்டினான்.

ஆபீசர், முனுசாமியை 'இங்கே வா, அங்கே போ', 'இதைச் செய், அதைச் செய்' என்று விரட்டி அடித்துக் கொண்டிருந்தார்.

மணி ஒன்றாகி விட்டது.

வாசலில் கூடியிருந்தவர்களோ மினிஸ்டர் வருவாரோ இல்லையோ என்ற சந்தேகத்தில் ஏதேதோ பேசிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆபீஸர் முனுசாமியை வாசலிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, ''மினிஸ்டர் வந்தால் ஓடிவந்து தகவல் கொடு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இத்தனை நேரம் ஓடியாடிக் களைத்த முனுசாமிக்கு அப்போதுதான், வயிற்றில் ஓர் இறுக்கம் தெரிந்தது. 'ஓஹோ... காலையிலிருந்து ஒரு மடக்குக் குடிக்கலையே' என்பது அவனுக்குப் புரிந்தது.

ஆபீஸரைத் தேடி அவர் அறைக்குப் போனான் முனுசாமி. மற்ற மூன்று ஆபீஸர்களோடு சேர்ந்து, டேபிளில் வாழை இலை பரப்பி, காரியரிலிருந்து எடுத்துப் போட்டுக் கொண்டவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தார் ஆபீசர்.

மௌனமாய் அவர் முன்னால் போய் நின்றான் முனுசாமி.

''என்னய்யா? மினிஸ்டர் வந்துட்டாரா?'' அலறி அடித்துக் கொண்டு எழுந்து நின்றார் ஆபீஸர்.

''அது இல்லை சார். காலையிலிருந்து ஒரு வாய் மடக்குக் குடிக்கலை சார். வயித்தை எரியுது சார். போய் டீ குடிச்சுட்டு வரேன் சார்.''

''என் தலையெழுத்துய்யா. உன்னை யெல்லாம் வேலை வச்சிக்கிட்டிருக்கேன் பார்! ஒரு நாள் பொறுமையா இருந்தா என்ன? அந்தப் பெரிய மனுஷர் வந்ததும், டீ குடிக்க, சாப்பிட எல்லாம் போய்க்கலாம். போய் வாசலில் நில்லுய்யா. மினிஸ்டர் வந்தாச் சொல்லு. போ போய்ச் சொன்னதைக் கவனி!'' தலையில் அடித்துக் கொண்டார் ஆபீஸர். மற்ற மூவரும் சிரித்தார்கள்.

வாசலிலேயே பழியாய்க் கிடந்தான் முனுசாமி.

ஆபீசர் சாப்பிட்டுவிட்டுக் கையை அலம்பிக்கொண்டு வந்தபோது மணி இரண்டுக்கு மேலேயே ஆகிவிட்டது.

முனுசாமியின் வயிறு மெள்ள மெள்ளக் கூவலாயிற்று.



ஆபீஸர் வாசல் கூட்டத்தில் கலந்து விட்டதைப் பார்த்த முனுசாமி, அவர்தான் வந்துவிட்டாரே என்ற தைரியத்தில் பக்கத்திலிருந்த டீக்கடைக்குப் புறப்பட்டான்.

டீக்கடைக்காரர், ''என்ன முனுசாமி, இன்னைக்கு ஜாலிதான் போல இருக்கு. மினிஸ்டர் வராரில்லே....'' என்றான்.

''ஹா...ம்..... ஜாலி''' பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டான் முனுசாமி.

இரண்டு சொட்டு டீத்தண்ணி வயிற்றுக்குள் இறங்கியதும் அவனுக்கு, குப்பம்மா, பார்வதி இரண்டு பேரைப் பற்றிய நினைவு வந்தது. அவர்களுக்குச் சாப்பிடத் தான் எதுவுமே கொடுக்காமல், அந்த அதிகாலையில் ஆபீசுக்கு வந்துவிட்டது குறையாய்ப் பட்டது அவனுக்கு. அந்தக் கோபம் வரப்போகும் மினிஸ்டர் மீது வெறுப்பாய் மாறியது. வாயில் ஏதேதோ வார்த்தைகள் அவனை அறியாமல் வெளிவந்தன.

'சீ...' என்று சப்தம் போட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிள் ஒன்று விழுந்தடித்துக் கொண்டு ஓடியது. பின்னாலே, பெரிய ஆடம்பரமான கார் ஒன்று. அதன் பின்னாலே படையாய்ச் சிறிய பெரிய கார்கள்.

மினிஸ்டர் வந்துவிட்டார்.

பாதி டீ கிளாஸை வைத்துவிட்டுத் தலை தெறிக்க ஆபீஸை நோக்கி ஓடலானான் முனுசாமி.

கார்கள், மனிதர்கள், மாலைகள், ப்ளாஷ்கள் என்று மினிஸ்டரைச் சுற்றி எல்லாமே மொய்த்திருந்தன. ஆபீஸ் வாசலுக்குள் நுழைய முடியாமல் அவை மத்தியில் மாட்டிக் கொண்டு விட்டான்.

மினிஸ்டர் கதர் ஜிப்பா, கதர் பேண்ட், கதர்த் தொப்பியுடன் முகம் மலர மாலை அணிந்து நின்று கொண்டிருந்தார். பல திசைகளிலிருந்தும் பலர் அவரை ஏதேதோ கேட்டுக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் வெறும் தலையை மட்டும் ஆட்டிப் பதிலாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்கள் கொடுத்த காகிதங்களை யெல்லாம் கையில் வாங்கி, தம்முடைய பி. ஏ. விடம்திருப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் எல்லோரையும் பார்த்துப் பெரிதாக 'நமஸ்தே' போட்ட மினிஸ்டர் ஆபீசுக்குள் நுழைந்தார்.

அவன்: ''லேடி டைப்பிஸ்டுடன் சுத்தறியே... விஷயம் உன் மனைவிக்குத் தெரிஞ்சா என்ன ஆகுங்கிற பயமேயில்லையா?''

இவன்: ''ஹுஹும்! என் பயமெல்லாம் எனக்கு மனைவின்னு ஒருத்தி இருக்கிறது லேடி டைப்பிஸ்டுக்குத் தெரிஞ்சிடக் கூடாதேன்னுதான்!''

உ. ராஜாஜி



முனுசாமி முண்டியடித்துக் கொண்டு முன்னேற, ஆபீசர், ''இவன் எங்கே போயிட்டான்? சரியான நேரத்தில் கழுத்தறுக்கிறானே'' என்று முணுமுணுக்கவும், ''சார்....'' என்று அவர் எதிரே நின்றான்.

''எங்கேய்யா ஒழிஞ்சுட்டே.... சரி சரி... கான்ஃபரன்ஸ் ஹாலுக்குப் போய் இரு. டைரக்டர் ரூமிலேருந்து நேரே அங்கே அவரை அழைச்சுட்டு வந்திடறேன். மைக் செட் எல்லாம் சரியா இருக்கான்னு பார்த்துக்க. என்ன புரிஞ்சுதா?'' — டைரக்டர் அறையை நோக்கி ஓடினார் ஆபீஸர்.

கான்ஃபரன்ஸ் ஹால் நிரம்பி வழிந்தது. கோட்டு சூட்டு சகிதம் ஆபீஸர்கள் அமர்ந்திருந்தனர். கையில் நோட்டுப் புத்தகங்களோடு நிருபர்களும், தோளில் தொங்கிய காமிராக்களுடன் புகைப்படக்காரர்களும் தயாராக இருந்தனர்.

மினிஸ்டர் வந்தார். கடவுள் வாழ்த்து, வரவேற்பு உபசாரம், புகழ் மாலைகள், காமிரா வெளிச்சங்கள் என்ற சடங்குகள் முடிந்த பிறகு, நாட்டின் பொருளாதாரத்தில் இந்த ஆபீஸின் பங்கைப் பற்றி உரையாற்றலானார். ''இந்த நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டுக்குப் பெரும் பண முதலைகள்தான் காரணம்'' என்று சாடிவிட்டு, ஏழைகளுக்குச் சேவை செய்யவே தாம் பிறவி எடுத்துள்ளதாகவும், ஏழைகளின் மேம்பாட்டுக்காகவும், அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காகவும், தம் உயிரையும் பணயம் வைக்கச் சித்தமாயுள்ளதாகவும் கூறி, கூடியிருந்தவர்களின் கைதட்டலைப் பெற்றுக் கொண்டார் மினிஸ்டர்.

'ஜனகணமன'வுடன் கூட்டம் முடிந்தது. மீண்டும் ஒரு கூட்டம் மினிஸ்டரைச் சூழ்ந்தது. அதே புன்னகை, அதே மாதிரி காகிதங்களை வாங்கி பி.ஏ.விடம் கொடுத்தல் அதே மாதிரி நமஸ்தே.

ஆபீசர் ஓடி வந்து முனிசாமியின் காதில் ஓதினார். பிரபல ஃபைவ் ஸ்டார் ஹோட்டலிலிருந்து வரவழைக்கப்பட்டு மினிஸ்டருக்காக விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த ஹாலுக்குள் ஓடினான் முனிசாமி.

அங்கு போடப்பட்டிருந்த முப்பது டேபிள்களையும் அழகான தூய வெள்ளைத் துணிகள் அலங்கரித்திருந்தன. அதன் மேல் அழகழகான கண்ணாடி, பீங்கான் ஜாடிகளும், கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தன. சர்வர்கள் கூட அழகான வெள்ளை பாண்ட், ஷர்ட், சரிகைப் பட்டை அணிந்து, அரண்மனைச் சேவகர்களைப் போலக் காட்சியளித்தனர்.

ஆபீஸர்கள் புடைசூழ மினிஸ்டர் வந்து இருக்கையில் அமர்ந்தார். சர்வர்கள் எல்லாம் பரிமாற ஆரம்பித்தார்கள். ஆபீஸர் மினிஸ்டருக்கு அருகில் அமர்ந்து நிமிஷத்துக்கு ஒரு முறை சிரித்த வண்ணம் இருந்தார். முனுசாமி வாசலிலேயே நின்று கொண்டு யாரும் உள்ளே வராதவாறு பார்த்துக் கொண்டிருந்தான்.

பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, மினிஸ்டரின் பி. ஏ.வுக்கு விக்கல் வந்துவிட்

ஒரு சிலர் ஏகபத்தினி விரதம் இருக்கிறார்கள். ஒரு சிலர் ஏகப்பட்ட பத்தினி விரதம் இருக்கிறார்கள்.



சிகந்திராபாத்தில் கவிஞர் கண்ணதாசன் கூறியது

— எஸ். சந்திரசேகர்

டது போதும். 'க்ளுக்' 'க்ளுக்' என்று சத்தம் செய்து, எல்லோருடைய பார்வையையும் தம் மேல் பதியச் செய்து விட்டார்.

ஆபீஸர் சைகை செய்வதைப் பார்த்த முனுசாமி, ஓடிப்போய்த் தண்ணீர் ஜாடியை எடுத்துக் கொண்டு வந்தான். சர்வர்கள் மற்றவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

டம்ளரில் தண்ணீர் ஊற்றிய முனுசாமியின் கை பலவீனத்தால் தளர்ந்தது. ஜாடித் தண்ணீரும் டேபிளில் கொட்டி, பி.ஏ.வின் பாண்டிலும் வழிந்து விட்டது. அதிர்ந்து போய் நின்றுவிட்டான் முனுசாமி.

''நான்சென்ஸ்'' தண்ணீர் ஜாடியைத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டார் பி.ஏ.

கனமான அந்த ஜாடியைக் கீழே விழாதவாறு, கால்களில் தாங்கிக் கொண்டான் முனுசாமி. வலி உயிரே போய்விட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு, சமாளித்தவாறு அத்தனை பேர் பார்வை அம்புகளும் துளைக்க அறையை விட்டு வெளியேறினான்.

கனல் பறக்கும் கண்களால் அவனை எரிப்பது போல் பார்த்துவிட்டு, பி.ஏ.வைச் சமாதானப்படுத்தலானார் ஆபீஸர்.

அந்தக் களேபரம் எல்லாம் அடங்கி, பி.ஏ. ஸ்பெஷலாய்க் கவனிக்கப்பட்டு விருந்து ஆடம்பரமாய் நடந்து முடிந்தது. பிரமுகர்களும் ஆபீசர்களும் பீடா சகிதம் வெளியேறும்போது மணி இரவு ஏழு ஆகிவிட்டது.

சிடவிக் குறுகி, ஆபீஸர் என்ன சொல்வாரோ, வேலையை விட்டே ஓட்டிவிடுவாரோ, மினிஸ்டர் ஏதேனும் ஆக்ஷன் எடுக்கச் சொல்லி விரும்பாரோ என்ற பயத்தில் அமர்ந்திருந்தான் முனுசாமி.

மினிஸ்டர் எல்லோருடனும் கை குலுக்கி, 'டாடா' காண்பித்துவிட்டு கார்கள் புடைசூழக் கிளம்பி விட்டார். 'கூ' என்ற சப்தத்துடன் மோட்டார் சைக்கிள் கட்டியம் கூறிக் கிளம்பிவிட்டது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மினிஸ்டரின் கார் மறைந்துவிட்ட பின்பு திரும்பி வந்த ஆபீசர் இடிந்து போய் உட்கார்ந்திருந்த முனுசாமியை அதட்டிக் கோபிக்கலானார். மௌனமாய் எல்லாவற்றையும் வாங்கிக் கட்டிக் கொண்டான் முனுசாமி.

கான்ஃபரன்ஸ் ஹால், விருந்து அறை எல்லாவற்றையும் சுத்தம் செய்தான். மேஜை நாற்காலிகள், ரெட் கார்பெட் எல்லாம் அதனதன் இடங்களில் வைத்து ஒழுங்கு படுத்தினான். எல்லா வேலைகளையும் ஆபீஸர் மேற்பார்வை பார்த்தார். அவர் கண்கள் ஒளியுடனிருந்தன. மினிஸ்டர்தான் வாக்குறுதி தந்து விட்டாரே. அவருக்குப் பிரமோஷன் நிச்சயம்.

லைட்டெல்லாம் அணைத்துவிட்டு அறைகளை யெல்லாம் பூட்டிவிட்டுத் தன்னுடைய சைக்கிளை எடுத்துக்கொள்ள முனுசாமி ரெடியானபோது இரவு எட்டு மணியாகிவிட்டது.

ஆபீஸ் கட்டிடம் ஒளியிழந்து 'ஓ'வென்று இருட்டிலே நிற்கும் விசுவரூபமெடுத்த ராட்சதன் போல் நின்றிருந்தது.

சைக்கிளைக் கேட்டுக்கு வெளியே தள்ளிக் கொண்டு வந்து, அதிலே ஏறப் போகும் சமயத்தில்தான் குப்பம்மா, பார்வதியைப் பற்றி அவனுக்கு மீண்டும் நினைவு வந்தது. 'பாவம்... ரெண்டும் எப்படிக் கிடக்குதுங்களோ?' அவன் வயிறும் மெள்ள மெள்ளக் கண்டி இழுக்கலாயிற்று. அந்தக் கனமான ஜாடி பட்ட கால் வேறு 'விண் விண்' என்று தெறிக்கலாயிற்று.

'ஷெட்'டிலிருந்து வேகமாகக் கிளம்பி வந்த ஆபீசரின் கார் அவன் அருகில் வந்து சரேலென்று நின்றது.

''முனுசாமி, இன்னிக்கு மினிஸ்டர் வந்ததுனாலே காலையிலே சீக்கிரம் வந்து, ராத்திரி லேட்டாப் போறதுனாலே நாளைக்கு லீவு கீவு போட்டுட்டு ஜாலியா இருந்திடலாம்னு நினைக்காதே. கரெக்டா ஒன்பது மணிக்கு ஆபீஸ் வந்துடு. நிறைய வேலை இருக்கு. என்ன, புரிஞ்சுதா?''

கார் வேகமாகக் கிளம்பியது.

ஆபீசர் சொன்னது என்னவோ அவன் காதில் விழவே யில்லை. அவன் மனம் குப்பம்மாவையும் பார்வதியையுமே சுற்றிச் சுற்றி வந்தது.

வெகு தூரத்துக்குப் பரவியிருந்த இருட்டில் ஆபீசரின் கார் மின்மினியாய் மறைந்து கொண்டிருந்தது. முனுசாமியின் ஒரே பிடிப்பான குப்பம்மா, பார்வதி இருவரையும் நோக்கி, கும்மிருட்டில் அவனோடு அவன் சைக்கிளும் குடிசையை நோக்கி ஊர்ந்தவாறிருந்தது. சைக்கிளின் 'கிறீச்' சப்தத்தையும் மீறி, மினிஸ்டரின் 'ஏழைகளுக்காகத் தம் உயிரையும் பணயம் வைக்கும் செய்தி'யை எங்கோ தூரத்தில் கதறிக் கொண்டிருக்கும் ரேடியோ துல்லியமாய் ஒலி பரப்பிக் கொண்டிருந்தது கேட்டது.

அத்தியாயம் 8

வேன்டி ஓடிக் கொண்டிருந்தது.

வினோத் வாடிக் கிடந்தான்.

இருபுறமும் ஆட்கள்.

''வாத்தியாரே... போலீஸ் வேஷம் போட்டா ஆள் சிக்குவான்னு என்னமாக் கணக்குப் போட்டே?....''

''அதாண்டா இல்வாடித்தனம். ஆடற மாட்டை ஆடிக் கற, பாடற மாட்டைப் பாடிக் கறன்னு சொல்லுவாங்களே!....பய போலீஸ்... போலீஸ் வேஷம் போடச் சொன்னேன்.... மாட்டிக்கினான்...'' ஜோஸ் மார் தட்டினான்.

''பயலைத் தீர்த்திடணுமா?''

''டேய்.... டேய்.... எதனுச்சியும் சோமாறித்தனமாச் செஞ்சுடாதே. 'பாஸ்' உன்னைத் தீர்த்துக் கட்டிடுவார்... சரியா சோறு தண்ணி காட்டாம பயலை நாலு நாள் மடக்கிப் போடணும். பங்களா ரூம்ல கட்டிப் போட்டுட்டு நா கொஞ்சம் வெளியே போய் விட்டு வரேன்.... நீல் கமலை உதவிக்கு வெச்சுக்கோன்னு பாஸ் சொன்னார்... அவளைக் கூட்டியாந்துடறேன்....'' என்றான் ஜோஸ்.

'நீல் கமல்' பெயரைச் சொல்லும்போதே அவன் நாக்கில் ஜலம் ஊறியது.

போலீஸ் வந்து கூப்பிட்டதும் வினோத் நம்பித்தான் கிளம்பினான். வாசலில் நின்று கொண்டிருந்த காரைக்கண்டதும் அவனுக்குச் சந்தேகம் பிறந்தது. அரைக் கண்ணால் டிரைவரைப் பார்த்ததுமே புரிந்துவிட்டது. ஜோஸை அடையாளம் கண்டு கொண்டான்.

'வந்தது வரட்டும். இவர்களோடு போய் ஏதாவது தகவல் சிக்குகிறதா என்று பார்க்கலாம்.... இப்போது திமிறினால் கட்டுவிட்டு ஓடினாலும் ஓடிவிடுவார்கள்.' என்று முடிவெடுத்தவனாய், காரில் ஏறி உட்கார்ந்தவனுக்குத் திடீரென்று குளோரபார்ம் நெடி மூக்கில் ஏறவும் சட்டென சுவாசிப்பதை நிறுத்தி மயங்கியது போல் சாய்ந்தான்.

'பயல் மயங்கிவிட்டான்' என்று முரடன் கர்ச்சிப்பை எடுத்து விட்டான்.

கார் ஓடியது.

அரைக் கண் விழித்தபடி வினோத் முரடர்களின் சம்பாஷணையைக் கேட்கலானான்.

''ட்ரிங்....ட்ரிங்.....''

காலிங் பெல் சத்தம் கேட்டு மாடியிலிருந்து எட்டிப் பார்த்தாள் நீல் கமல்.

ஜோஸ் நின்று கொண்டிருந்தான்.

கதவைத் திறப்பதா வேண்டாமா என்று ஒரு கணம் தயங்கினாள்.

வினோதின் அறிவுரை நினைவுக்கு வந்தது.

'இவனிடம் சற்று சாகஸமாக நடந்து கொண்டு விஷயங்களைக் கறந்துவிட நல்ல தருணம்' என்று முடிவெடுத்தவளாகக் கீழே இறங்கி வந்தாள்.

''வா ஜோஸ்... வா....'' முகம் மலர்ந்து வரவேற்றாள்.

அவளுடைய வரவேற்பில் திக்குமுக்காடிப் போனான் ஜோஸ்.

'இன்று நரி முகத்தில்தான் விழித்திருக்கிறோம். எல்லாமே நினைத்ததற்கு மேலாகவே நடக்கிறதே' என்று மகிழ்ந்து போனான்.

ஜோஸ் உள்ளே வந்ததும் வாயில் கதவை மூடும்போது தெருவின் எதிர்ப் புறத்தில் அருண் நின்று கொண்டிருப்பது நீல் கமல் கண்ணில் பட்டது.

ஜோஸை மாடிக்கு அழைத்துப் போனாள். அவளுடைய கட்டிலில் ஜோஸ் சுவாதீனமாக உட்கார்ந்து கொண்டான். அருகில் ஒரு நாற்காலியில் நீல் கமல் அமர்ந்துகொண்டாள்.

''என்ன...; திடீர்னு வந்திருக்கே....''

''எல்லாம் நம்ப விஷயம்தான்.''

நீல் பேசாமல் இருந்தாள்.

''காலேலே 'பாஸ்' கூப்பிட்டு அனுப்பினார். நீல்.... போனேன்.... நம்ப கூட்டத்தைக் கலைச்சுட்டு பாஸ் சிங்கப்பூர் போகப் போறாராம்....''

நீல் சுறுசுறுப்பானாள்.

'விரைவில் விடுதலை' என்கிற செய்தி அவளை ஒரு புது உலகில் மிதக்கச் செய்தாலும், ஒருவேளை சிங்கப்பூர் போய் அதே தொழிலைத் தொடங்கத் தன்னையும் இழுத்துக்கொண்டு போகப் பாஸ் திட்டமிட்டிருந்தால்....?'

கவலை பிறந்தது.

பளிரென்று முடிவுக்கு வந்தாள்.

ஜோஸைப் பிடித்துக் கொள்ள வேண்டும். 'நீல்கமல் கிடைப்பாள்' என்கிற நம்பிக்கையை இவனுள் வளர்த்து விடவேண்டும். இவனுடைய சபலம்தான் தன்னுடைய பாதுகாப்பு.

இவனிடம் விஷயங்களைக் கறந்து விட்டுக் கடைசியில் வினோத் மூலம் உள்ளே தள்ளிவிடலாம்.

எல்லாம் ஆன பிறகு வினோத்தின் காலடியில் விழுந்து, 'என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்:

முற்றுப்பெறாத வாக்கியங்கள்...

இல்லாவிடில் உங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்' என்று மன்றுடி. விஜேதத்தை எப்படியாவது அடைந்துவிட வேண்டும்.

பிறகு—

சேர்த்து விட்டே.... 'பாஸ்' இதைச் செய்யச் சொல்றார், அதைச் செய்யச் சொல்றார்னு வந்து சொல்லுவீங்க... எது ஒன்னையும் என்னு கேக்காம நான் செஞ்சிக்கிறே

மதனு மிருத்தியுஞ்சயன்

ஒளி மயமான எதிர்காலம். எல்லாப் பெண்களையும் போன்று கண்ணியமாக இல் வாழ்க்கை.

''என்ன நீல.... பேசாம இருக்கே...நான் வந்தது பிடிக்கலையா?'' ஜோஸ் கேட்டதும் தான் கனவினின்று மீண்டாள்.

''அதெல்லாம் இல்லே ஜோஸ்... எம் மேலே இவ்வளோ அக்கறையோட வந்திருக்கியே அந்தச் சந்தோஷம்.... அதான் பேசாம இருக்கேன்.... ஆனு....''

''சொல்லு நீல... உனக்கு எது வாணு செய்யறேன்.'' இச்சையில் பிறந்த உளறலுடன் ஜோஸ் கேட்டான்.

''ஒனக்கும் எனக்கும் எத்தனையோ வருஷப் பழக்கம்..... இந்தக் கும்பல்லே நீதான் என்னைச்

தான் இருந்தேன்.... ஆனு நம்ப கும்பலே கலையப்போற சமயம் வந்திருச்சின்னு சொல்லுறே. இப்பவாவது எம் மேலே நம்பிக்கை வெச்சு 'பாஸ்' யார்? சிங்கப்பூர் போகப் போறாளையே என்னென்ன இட்டங்கள் வெச்சிருக்கார். மத்த விஷயங்கள் என்



னென்னென்னு சொல்லுவியா ளஹும்... அதான் கெடையாது. வேணும்னு என் ஒ'ம்புக்குன்னு வர்ரீங்களே தவிர எனக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்குன்னு நெனைக்கிறீங்களா?.... மத்தவங்களை வுடு. நீ ஒருவளுவது நெனைக்கிறயா....'' அனுபவபூர்வமான நடிப்புடன் அழுதாள்.

ஜோஸ் விழுந்தான்.

''அழாதே நீல்.... நீ அழுதா எனக்கு என்னவோ மாதிரி இருக்கு.... நம்ப ரெண்டு பேர் நடுவிலேயும் இனிமே ரகசியமே கெடையாது. இப்போ உன்னைத் தேடி முக்கியமா நான் வந்ததே நம்ப எதிர்காலத்தைப் பத்தி முடிவு பண்ணிக்கலாம்னுதான்.''

உஷாரானாள்.

''ஜோஸ், கொஞ்சம் கீழே போய்க் கதவைச் சரியாத் தாழ்ப்பாள் போட்டு வந்திருக்கேனுன்னு பார்த்துட்டு வரியா.... வர்ரச்சே இந்த ட்யூப் லைட்டை அணைச்சுடு. நா டேபிள் லாம்பைப் போட்டுடறேன்... நிதானமாப் பேசலாம்....''

நீல் கூறினதும், போதை மேலும் அதிகரிக்க ஜோஸ் கீழே போனான்.

'தன்னை அவனுக்கு அளிப்பதற்குத்தான் இந்த முஸ்தீபுகள் செய்கிறாள்' என்று அவனுள் நம்பிக்கை.

உடனடியாக நீல் செயல்பட்டாள். பெட்டியிலிருந்து டேப் ரிகார்டரை எடுத்து ஆன் செய்து கண்ணுக்குப் புலப்படாதபடி கட்டிலின் கீழே மறைத்து வைத்துக் காலால் ஆஃப் செய்யவோ, ஆன் செய்யவோ முடிகிற மாதிரி கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

ஜோஸ் படியேறி வருவது காதில் விழுந்தது.

''சரியாகத்தான் போட்டிருக்கே.......'' என்று கூறியபடி ட்யூப் விளக்கை அணைத்து விட்டுக் கட்டிலில் அவளுக்கு அருகில் உட்கார்ந்து அவளுடைய தோள்பட்டையில் கை வைத்துத் தடவினான்.

டேபிள் விளக்கின் குறைந்த வெளிச்சத்தில் அவளுடைய உருவம் அவனைத் தட்டாமாலை ஆடச் செய்தது.

''இப்போ வேண்டாம் ஜோஸ்... முதல்லே விஷயங்களைச் சொல்லு.... அப்புறமா நம்ப எதிர்காலத்தைப் பத்தி முடிவு பண்ணிக்குவோம். நான்தான் உனக்குன்னு ஆயிடுச்சு... எங்கே போயிடப் போறேன்...'' தாராளமாக வார்த்தைகளை விட்டாள்.

ஒருவர்: பெண் புத்தி ரொம்பக் கூர்மையானது.

நண்பர்: அதான் பெண் புத்தி PIN புத்தின்னு சொல்றாங்க போல இருக்கு.

-எஸ். சந்திரசேகர்.



ஜோஸ் மிதந்தான்.

கோஷ்டி சம்பந்தப்பட்ட விவரங்களை ஒன்று ஒன்றாகச் சொல்ல ஆரம்பித்தான்... 'கோஷ்டியின் முக்கிய நபர்கள், பாஸ் காரியங்களை நடத்திக்கொள்ளும் உத்திகள்.... அவர்கள் நடத்தியுள்ள கொள்ளைகள், கொலைகள்... ரங்கூன் ராமையாவையும், டிரைவரையும் கொலை செய்து வைரங்களைக் கடத்தியது... பாஸின் சரியான அடையாளம் தனக்கே தெரியாதது... பாஸின் மறைவிடங்கள்.... சென்னை, பெங்களூரில் அவர் தங்குவதாகச் சொல்லப்படும் இடங்கள்....' என்று எல்லா விவரங்களையும் கூறிக்கொண்டே போனான்.

அவ்வப்போது அவள் மீது உரசியபடி எல்லாவற்றையும் கொட்டினான்.

''நீல் முக்கியமான விஷயத்தை மறந்துட்டேனே. அந்த சி. ஐ. டி. பயலோட சினேகிதப் பொண்ணும்... மெட்ராஸ்லேந்து ஆளுங்க மடக்கிக் கொணுந்து இருக்காங்களாம்.''

''சினேகிதப் பொண்ணுன்னு....?''

''அதான் லவர்னு சொல்றாங்க....''

உலகமே நீல் கமல் முன் சுற்றியது.

''நீல் அந்தப் பய பலே கில்லாடி. நம்ப கூட்டத்தை மடக்கணும்னு வந்திருக்கான். பயலைக் கோழி அமுக்கிற மாதிரி அமுக்கிட்டோம். பாஸ் சிங்கப்பூர் போனதும் பயலை அடிச்சுத் தொரத்திடலாம்... இல்லேன்னு ஒரு மாதிரியாக்கவனிச்சுக்கவேண்டியதுதான். எல்லாம் நல்லபடியா முடிஞ்சா பாஸ் கொடுக்கிற பணத்தோட நாம்ப ரெண்டு பேரும் கண்காணும எங்காவது போய்ச் சொகமா வாழலாம்....'' ஜோஸ் சொல்லிக் கொண்டே போனான்.

'வினோத்துக்குக் காதலி இருக்கிறாள்' என்கிற செய்தியை நம்பவே நீல் கமலுக்குச் சற்று நேரம் பிடித்தது.

எது எப்படி இருப்பினும் மற்ற விஷயங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் அவனிடம் விஷயங்களைக் கறக்கவேண்டும். வினோத் தப்ப வழி வகுக்க வேண்டும் என்று தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.

வினோத்தைப் பற்றிப் பேச்சு வந்ததும் அவனை அடைத்து வைத்திருப்பதும், பாஸின் கட்டளையும் நினைவுக்கு வர, பயம் கொண்டவனாய், ''நீல்! உடனே கௌம்பு. நேரமாச்சு. பயலைப் போய்க் கவனிச்சுக்கணும்....'' என்றான் ஜோஸ்.

கீழே காலிங் பெல் அடிப்பது கேட்டது.

நீல் எட்டிப் பார்த்தாள்.

டேவிட் நின்றிருந்தான்.

''ஜோஸ், டேவிட் வந்திருக்கான்.''

''போகச் சொல்லு.... கதவைத் திறக்காதே....''

காலிங் பெல் அடித்தது.

ஜோஸ் யோசித்தான்.

''வா, ரெண்டு பேருமா கீழே போகலாம். தலையைச் சீவிடுவானு என்ன?''

ஜோஸை அங்கே கண்டதும் டேவிட்டின் ரத்தக் கொதிப்பு அதிகரித்தது.

சித்தி புரத்தே தினந்தோறும் சீர்கொள் அருள்
சத்திவிழா நீடித் தழைத்துஓங்க –
எத்திசையில்
உள்ளவரும் வந்தே உவகை உறுகமதத்
துள்ளல் ஒழிக தொலைந்து

— திருஅருட்பா

திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

திருமலை திருப்பதி தேவஸ்தானங்களுக்கு நன்கொடைகள்

திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள் அவற்றின் தர்ம கைங்கரியங்களுக்கு அளிக்கப்படும் எல்லா நன்கொடைகளுக்கும் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. அதாவது 1961 வருமான வரி சட்டத்தின் 80 ஜி செக்ஷன்படி அதன் வரையறைக்குட்பட்ட விதிகள்படி இந்த நன்கொடைகளுக்கு வரிவிலக்கு உண்டு.

திருமலை திருப்பதி தேவஸ்தானங்களின் சில தர்ம கைங்கரியங்கள் :

மிகப் பல கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகத்துக்குப் பெருமளவு உதவித் தொகை.

பொது மக்களுக்கும் பக்தர்களுக்கும் இலவச வைத்திய உதவி கிட்டுவதற்காக மருத்துவ மனைகளும் சிகிச்சை நிலையங்களும் நிர்வகிக்க உதவி.

தொழுநோய் வியாதிஸ்தர்களுக்கும் செவிடு, ஊமை, குருடு ஆகிய அங்கஹீனமுற்றோருக்கு நடத்தப்படும் பல பாதுகாப்பு விடுதிகளை நிறுவுவதற்கும், நிர்வாகத்துக்கும் பேருதவி.

அநாதைகளுக்கும் முதிய ஆதரவற்ற தள்ளாடும் பருவத்தினருக்கும் விடுதிகள் நிறுவி நடத்தும் கைங்கரியம்.

பஞ்சம், வெள்ளம், தீ, புயல், தொத்து வியாதிகள் முதலியவைகளிலிருந்து கஷ்ட நிவாரணப் பணிகளுக்கு உடனடி உதவியும், தாராள நன்கொடைகளும்.

திருமலைக்கு வந்து சேரும் பக்தர்களுக்கு இலவச இடவசதி அளித்தல்; ஹரிஜன், கிரிஜன் போன்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் வாழும் பகுதிகளில் ராம மந்திரங்கள் கட்டி உதவுதல்.

பிரார்த்தனை மண்டபங்களும், திருமணக் கூடங்களும் நிறுவி அவற்றை நிர்வகித்தல்.

தாராளமான நன்கொடைகளை வரவேற்கிறோம்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

''என்ன ஜோஸ் பாஸ் அழைச்சாரா?''

''சேச்சே... அதெல்லாம் இல்லே... சி. ஐ. டி. பயலே அடைக்க வச்சிருக்கேன்... பாஸ் சொன்னபடி. நீலைக் கூட்டிப் போக லாம்னு வந்தேன். என்ன விஷயம்?''

''ஜோஸ்! ரொம்ப முக்கியமான விஷயம். பாஸ் விடியறதுக்கு மெட்ராஸ் கௌம்பிறா னும் கௌம்பிடுவார்னு தோணுது. எனக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத் துட்டார்....''

''எங்க விஷயம் எதனுச்சியும் சொன் னாரா?''

''சொல்லல்லே... மத்தவங்களுக்குச் சிங் கப்பூர் போறதுக்கு முன்னாடி மெட்ராஸிலே கொடுப்பார்னு பேச்சு.... நீ உடனே அவ ரைப் போய்ப் பாரு...''

''டேவிட்...நீ போய் அந்தப் பயலைக் கொஞ்சம் கவனிச்சிக்கிறயா... நானும் நீலும் போய் வாங்கியாந்துடறோம்.''

''அவ எதுக்கு... நீயே யதேச்சையாப் போற மாதிரி போ. ரெண்டு பேருக் கும் உங்கிட்டயே கொடுத்துடுவாரு....''

''நீல்.... நீ என்ன சொல்றே....'' ஜோஸ் கேட்டான்.

நீல் யோசித்தான்.

ஜோஸை அனுப்பிவிட்டு டேவிட்டுடன் போவது போல் போய்ச் சாகஸம் காட்டி நேரத்தை நீடிப்பது. அதற்குள் அருணுக்குச் செய்தி கொடுத்து வினோதைத் தப்புவிக்கச் செய்ய வேண்டும்....

''ஜோஸ் நீ போய் வா.... நான் டேவிட் டோடப் போய் அந்த ஆளைக் கவனிச்சுக் கறேன்.... சீக்கிரமா வந்துடு....''

''அப்பக் கௌம்பலாமா?''

''கொஞ்சம் இரு. மேலே போயிட்டு வந் துடறேன்.''

போனான்.

அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, தனது டயரியிலிருந்து அவசரம் அவசரமாக இரு தாள்களைக் கிழித்தான்.

அருண்,

இவர்கள் வினோத்தைக் கடத்தி வைத் திருக்கிறார்கள். வினோத் இருக்குமிடம், கொள் ளைக் கோஷ்டியின் ரகசிய இடங்கள், நட வடிக்கைகள் பற்றி டேப்ரிகார்டரில் பதிவாகி உள்ளது. டேப் ரிகார்டர் என் அறையில் கட்டிலுக்குக் கீழே உள்ளது. நான் வெளியே போய் அரை மணி ஆனதும் பின் பக்கமாக ஏறி வந்து ரிகார்டரை எடுத்துக் கொள்ளவும். வினோத்தை விடுவித்ததும் அவரைச் சற்று ஒதுங்கி நின்று செயல்படச் சொல்லவும். அவரது காதலியையும் கடத்தி வைத்திருக் கின்றனர். பாவிகள் அவளைக் கொன்றாலும் கொன்றுவிடுவார்கள். தாமதிக்காது செயல் படவும்.... வினோதிடம்....''

டேவிட், ஜோஸின் பேச்சுக் குரல் மாடிப் படியில் கேட்கவும் கடிதத்தைச் சுருட்டி ஜன் னல் வழியாக அருண் இருந்த திசையில் எறிந்தான். அவன் கவனித்ததைக் கண்டு அவனுக்குத் திருப்தி.

''என்ன நீல்... டிலே பண்ணறே... சீக் கிரமா வா'' ஜோஸ் வெளியிலிருந்து குரல் கொடுத்தான்.

ஆறு மனமே ஆறு (3)



நாக்கில் விரலைத் தடவி புக்கைப் புரட்டும் பழக்கத்தைக் கண்டக்டர்களுக்கு மறக்கடிக்க, டூட்டியில் இருக்கும்போது, விசிலடிக்கும் வேளை தவிர மற்ற நேரங்களில் feeding rubber ஐ வாயில் வைத்திருக்க வேண்டும் என்ற விதியை ஏற்படுத்தினால் என்ன? —மு. கணேசன்

ஐந்தாவது நிமிஷம் டேவிட்டும் நீல் சும னும் ஒரு புறமும் ஜோஸ் இன்னொரு புறமும் பிரிந்தனர்.

பாழடைந்த பங்களா.

சுற்றிலும் நடமாட்டமே இல்லை.

வினோதை அறையில் கிடத்திவிட்டு வெளிப் புறம் பூட்டிச் சாவியைக் கொடுத்துவிட்டு இரு வரைக் காவல் வைத்து ஜோஸ் போய்விட் டிருந்தான்.

இங்கு அடைபட்டுக் கிடப்பதால் துப்பு ஒன்றும் பெரிதாகச் சிக்காது என்று வினோத் துக்குத் தோன்றவும் தப்பிவிட வழி யோசிக்க லானான்.

வெளியில் காவல் காக்கும் முரடர்களின் சம்பாஷணை.

''அண்ணே, நீ கொஞ்சம் கவனிச்சுக்கோ. ஜோஸ் வர நேரமாவும். அவ கிட்டே போனு சும்மா வந்துடச் சொல்லுமா... நா போய்க் கொஞ்சம் தண்ணி போட்டுக்குனு வந்துடறேன்....'' ஒருவன் சொன்னான்.

''சீக்கிரமா வா...விமிட்டா போட்டுக்கோ வரச்சே காளி கிட்டே எனக்கும் ஒரு பாட் டல் கஷாயம் வாங்கியா...'' மற்றவன்.

பேச்சுக் குரல் நின்றுவிட்டதிலிருந்து ஒரு வன் போய்விட்டது புரிந்தது.

வினோதின் நரம்புகள் பரபரத்தன. உட னடியாகத் தப்பியாக வேண்டும்!

அறையைச்சுற்றிக் கண்ணோட்டமிட்டான்.

மெலிதாக ஒரு தகரத் தகடு கிடந்தது. அது பெரிதாக எதற்கும் பயன்படாதுதான். தந்திரமாக ஏதாவது செய்தாக வேண்டும்.

முரடனது கவனத்தை ஈர்க்காத வகை யில் தரையிலேயே ஊர்ந்து தகட்டை எடுத்துக் கொண்டான்.

மறுபடியும் ஊர்ந்து திறந்திருந்த ஜன்னல் கதவை மூடினான். தாளிட்டான். இனி இவன் உள்ளே என்ன செய்கிறான் என்று வாயில் கதவைத் திறக்காமல் முரடனால் பார்க்க முடியாது.

கதவு அருகே உட்கார்ந்தபடி தகரத் தகடை 'டொய்ங்.... டொய்ங்....' என்று தொடர்ச்சியாய்ச் சத்தமிடும்படி கையால் இழுத்துவிட்டான்.

'இவன் உள்ளே ஏதோ செய்கிறன்' என்று வெளியே முரடனுக்குப் புரிந்து விட்டது. ''டேய்! மரியாதையா ஜன்னல் கதவைத் திறந்துடு... உள்ளே வந்தா கொன்னுடு வேன்!'' முரடன் கத்தினன்.

தொடர்ந்து தகரத் தகட்டை வினேத் சப்தம் செய்தான். விரைவாகச் செய்தான்.

முரடனது ஆத்திரம் அதிகரித்தது.

சப்தமிடுவதை வினேத் நிறுத்தவில்லே.

முரடன் வெளிப் பூட்டைத் திறப்பது வினேதின் காதில் விழவும் உஷாரானன்.

பூட்டைத் திறந்து கதவை இலேசாகத் தள்ளி முரடன் நுழைய வினேத் அவன் மேல் ·வேங்கை போல் பாய்ந்து அவனைத் தலையால் முட்டினன்.

முரடனின் கையிலிருந்த துப்பாக்கி எகிறி மூலேயில் விழுந்தது.



''என்ன சார் மாறு வேடம் போட் டுட்டு போறீங்க? ஏதாவது மாறு வேடப் போட்டியா?''
''ஸோப் சப்ஸ்கிரிப்ஷன் கலெக்ட் பண் ணப் போறேன். இப்படிப் போனத் தான் மெம்பர்களைப் பிடிக்க முடி யுது.'' —ஜோத்துக்கடவு ரவி

'படா'லென்று முரடனது காலே வாரி, அவனது தலே மயிரை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு அவனது தலேயைத் தரையில் மோதி மோதி எடுத்தான்.

முரடன் பிரக்ஞை இழந்ததும் துப்பாக் கியை எடுத்துக் கொண்டு அறைக் கதவைப் பூட்டி, பங்களாவின் பின் பக்க வழியாக வினேத் வெளியேறி ஓடத் தொடங்கினன்.

ஐந்து நிமிட ஓட்டத்தில் மெயின் ரோடு வந்தது.

அவனுடைய அதிர்ஷ்டம் ஆட்டோ உடனே கிடைத்தது.

'மெஜஸ்டிக்' என்று கூறி மெஜஸ்டிக்காக உட்கார்ந்து கொண்டான். மெஜஸ்டிக் போய் அறைக்குச் சென்று அருணிடமிருந்து ஏதா வது செய்தி இருக்கிறதா என்று தெரிந்து கொண்டு சிடி மெய்ன் போலீஸ் ஸ்டேஷ னுக்குப் போய்ப் பார்த்து வரவேண்டும் என்று முடிவு செய்தான்.

தனது அறையை நோக்கி இவன் போவ தற்கும் அருண் வருவதற்கும் சரியாக இருந்தது.

''சார்.... உங்களுக்கு நாலுயுக சார்... ரொம்ப முக்கியமான தகவல் சிக்கி இருக்கு.'' அருண் படபடத்தான்.

''இதென்ன டேப் ரிகார்டர்... ஏது?''

''இதான் சார் நம்ப உயிர்... இதுலே கொள்ளேக் கோஷ்டி பற்றி மொத்த விவரமும் டேப் ஆகியிருக்கு. நீல் கமல்தான் உதவி யிருக்கா. மொதல்லே உங்க ரூம் போய்ப் போட்டுப் பார்க்கலாம்...''

''எதிரிங்களுக்கு என் ரூம் தெரிஞ்சு போச்சு. இங்கேயே ஏதாவது ஒரு ரூம் எடு. டேப்பைப் போட்டுப் பார்த்துட்டு மட மடன்னு நடக்க வேண்டியதைக் கவனிக்க லாம்.... இனிமே நாம்ப தாமதிக்கக் கூடாது.''

இரண்டு முறை டேப்பைப் போட்டுப் பார்த்தனர்.

சுநீதாவைக் கடத்தி வந்திருக்கின்றனர் என்ற செய்தி வினேத்தை அதிர்ச்சிக்குள் ளாக்கியது.

சுதாரித்துக் கொண்டான்.

''நாம்ப உடனடியா பெங்களூர் போலீ ஸின் உதவியோடு கோஷ்டியை மடக்கியாக ணும். இல்லேன்னு காரியம் மிஞ்சிப் போயிடும். நீ போலீஸ் கூடப் போய் அரெஸ்ட் செய்ய உதவு. நான் ரெண்டு மப்டி போலீஸோடே மெட்ராஸ் ரூட்லே போய் 'பாஸ்' சிக்கறனென்னு முயற்சி பண் றேன். எப்படியும் இப்போ டிரெயினே, ப்ளேட்டோ கிடையாது....''

''ஒருவேளே தப்பிப் போயிருந்தான்னு...''

''கார்ல போவான்னு ஒரு நம்பிக்கைதான். எல்லா செக் போஸ்டுக்கும் மெஸேஜ் அனுப் பச் சொல்லிப் போலீஸிடம் சொல்லிடலாம். நீல் கமலேப் போலீஸ் தொந்தரவு பண்ணும கவனிச்சுக்கோ....''

இருவரும் சிடி மெயின் போலீஸ் ஸ்டே ஷன் போனபோது அவர்களுக்காக ஒரு செய்தி காத்திருந்தது.

''மிஸ்டர் வினேத்... உங்களே எங்கே தேடறதுன்னு யோசனே செய்துகொண்டிருந் தேன்.... நீங்களே வந்துட்டீங்க. செவன் ஹெவன் ஹோட்டல்லே ஆறும் நம்பர் அறையிலே ஒரு பெண் கொலே செய்யப்பட்டுக் கிடக்கிறளாம். ப்ருடல் மர்டராம்... அவ ளுடைய ஆடையில் செருகப்பட்டு 'சென்னே யிலிருந்து வந்திருக்கும் சி. ஐ. டி. வினேதிடம் இக்கடிதத்தைச் சேர்ப்பித்துவிடவும்' என்று எழுதப்பட்ட ஒரு கடிதம் இருந்ததாம்... கிரைம் பிரேஞ்சிலிருந்து இப்பத்தான் தக வல் வந்தது'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

இருவரும் செவன் ஹெவனே நோக்கிப் பறந்தனர்.

அங்கே—


(தொடரும்)

குதிரைப்பந்தயம் தொடங்கப்பட்டது 1777ல். ஹைதர் அலியின் படை பேட்டையில் குதிரைப் பந்தயம் நடைபெற்றிருக்கிறது. இருநூறு ஆண்டுகள் பூர்த்தி ஆன குதிரைப் பந்தய மைதானத்தில் புகைப்பட நிபுணர் உத்ரா இந்தக் குதிரைகளின் வேகத்தை அப்படியே படம் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்! இந்த 'Photo finish'ஐ விளக்குகிறார் உத்ரா:

"குதிரைப் பந்தயத்தில் 'இரிலிங்' என்று சொல்லுமிடம் 'Win Post' அருகில் தான். எந்தக் குதிரையின் மூக்கு முதலில் வெற்றிக் கம்பத்தினை முட்டுகிறதோ, அதுவே வெற்றிக் குதிரையாகும். குதிரைப் பந்தயம் ஆரம்பித்தவுடனேயே 'Win Post'க்குச் சிறிது தூரத்தில் ஆஷாஹி பெண்டாக்ஸ் காமிரா 135 டெலி லென்ஸுடன் அமர்ந்திருந்தேன். குதிரைகள் பாய்ந்து வரும் முடிவுக் கட்டத்தில் action ஐ Freeze செய்ய வேண்டுமென்பதற்காக 1/1000 நேரத்தில் எடுத்தேன். ஆறு படங்கள் எடுத்ததில் எனக்கே திருப்திகரமாக அமைந்தது இந்த ஒரு காட்சிதான்!

படம்: உத்ரா · விளக்கம்: குண்டுமணி

SPORTS PICTURE PAGE—





அழியாத கோலங்கள்

உரிய வயதில் நாகப் புரிய வேண்டிய பருவ உணர்வுகளை விடலைப் பருவத்திலேயே புரிந்துகொள்ளத் துடிக்கும் மூன்று சிறுவர்களின் பரபரப்பு அதற்கு வாய்ப்பாக அமையும் சம்பவங்கள் இவற்றை 'அழியாத கோலங்கள்' ஆக்கியிருக்கிறார் பாலு மகேந்திரா.

படத்தில் நடித்த சிறுவர்களே இப்படத்தைப் பார்க்க முடியாதபடி படம் 'ஏ' முத்திரை குத்தப்பட்டுள்ளது.

கதை, திரைக்கதை, வசனம், காமிரா, இயக்குனர் பொறுப்பு ஆகிய ஐந்து பொறுப்புக்களையும் பாலுவே ஏற்றிருக்கிறார். காமிராவும், இயக்குனர் பொறுப்பும்தான் அதிக பாரமாய் இருந்திருக்க முடியும். மற்றவைகளுக்கு 'ரதி நிர்வேதமும்', 'Summer of 42'ம் படி அமைத்துக் கொடுத்து விட்டன.

மனோகர், ஷியாம் சுந்தர், நடராஜ் என்ற மூன்று சிறுவர்களின் அற்புத நடிப்பைக் காணும்போது, தமிழ்த் திரை உலகின் மறுமலர்ச்சியில் ஆழ்ந்த நம்பிக்கை பிறக்கிறது.

மூக்கில் சற்று இறங்கிய கண்ணாடி, வெள்ளைச் சிரிப்பு, தனது வயதுக்கு மீறிய விஷயங்களைக் காணும்போது அந்த முகத்தில் பளிர் பளிரென்று தோன்றி மறையும் அச்சமும், ஆர்வமும், குற்ற உணர்வும் கலந்த உணர்வுக் கோடுகள், பக்கோடா காதரை நினைவுபடுத்தும் உடம்பு வாகு ஆகியவைகளுடன் மனோகர் என்ற அந்தச் சிறுவன் கோலங்களை அழியாதபடி நிலைநிறுத்திவிடுகிறான்.

போஸ்ட்மாஸ்டரும், நடனக்காரியும் உடலுறவு கொள்வதைச் சிறுவர்கள் கண்டுவிடுவதான காட்சியை, சிறுவர்களின் முக பாவத்தை அதிகமாகக் காட்டுவதன் மூலம் மேலும் கலை நயம் கொண்டதாகச் செய்திருக்கலாம்.

இந்துமதி டீச்சரை (ஷோபா) காதலிக்கும் சிறுவன் கௌரி (நடராஜ்), பின்னால் கமலஹாஸனாக வளர்ந்து தனது பால்ய பருவ அனுபவங்களை நினைவுகூர்வதாகப் படம் அமைந்துள்ளது.

அமைதியாகவும் அறிவுபூர்வமான முதிர்ச்சியுடனும் ஷோபா நடித்திருக்கிறார். ஆறு ஆம் பொடிசுகள் ஷோபாவைப் பின்னுக்குத் தள்ளி விடுகின்றனர்.

படத்தின் முடிவு இதயத்தைக் கனக்கச் செய்து விடுகிறது. இதமான இயற்கைச் சூழ்நிலையில் சலீல் சௌத்ரியின் இசையுடன் பரதம் ஆடுகிறது காமிரா.

இலக்கியத்தரமான ஒரு சிறுகதையைத் தமது காமிராவினால் ஓர் இனிமையான புதுக் கவிதையாக வடித்திருக்கிறார் பாலு.

- ரங்கா

சத்தியம் வெல்லும் என்ற முத்திரை பதிக்க என்னவெல்லாமோ செய்து — படத் தலைப்பான அகல்விளக்குக்கு விளக்கம் ஒளிக்கும்போது டைரக்டரே காலியாகி விடுகிறது. கேட்க ஆளில்லை.

மூலக்கதைதான் என்ன? எதைக் கூற நினைக்கிறார்கள்? எந்தக் கருத்தை வலியுறுத்த இந்தப் படம்? எலெக்ஷன் தில்லு முல்லுகளையா, லஞ்ச லாவண்யங்களையா? விசாரணைக் கமிஷன் கலாச்

உதவாக்கரைக் கதையினால் ஒன்றுமே மனத்தில் பதியவில்லை. இருளை விரட்ட முடியாத அகல் விளக்கு அழுது வடிகிறது.

அகல் விளக்கு



இந்திய இலங்கை நட்புத் தயாரிப்பில் இன்னொரு படம். கண்ணுக்கினிய சிங்களத் தீவின் அழகுகளைக் கண்டு மகிழ மற்றொரு வாய்ப்பு. கதை ஒன்றும் பிரமாதமானதல்ல.

நடிகையாக ஆசைப்பட்டு நாசமாகும் சாந்தியாக வரும் இலங்கை நடிகைக்குத் தோற்றமும் சரியில்லை; நடிப்பும் சரியில்லை.

பாடல்கள் படத்தைக் கெடுக்கவில்லை. கேட்கும்படி இருக்கின்றன.

சிறப்பாகக் காமிராவையும் முடுக்கிக் கதையையும் இயக்கியுள்ளார் திமதி வீரரத்ன.

நங்கூரம்



சுவரில்லாத சித்திரங்கள்



பாக்யராஜ்—கதாசிரியர், வசனகர்த்தாவாகப் புகழ்பெற்று, நடிகராகப் பாராட்டப்பட்டு, இந்தப் படத்தின் மூலம் டைரக்டராகவும் சுடர் விடுகிறார்.

ஒரு கிராமத்திலே ஒரு தெருவில் எதிர் எதிர் வீட்டிலே வாழும் இரு இளசுகளின் இதயங்களிலே மலரும் காதல் கதை. அவளின் அந்தச் சிரிப்பு, பார்வை, பேச்சு எல்லாம் தனக்காகத்தான் என்று நினைத்து அவள் மீது காதலை வளர்த்துக் கொண்டு இன்ப லோகத்தில் திரியும் ஓர் அப்பாவி எழுத்தாளராக அற்புதமாக நடித்திருக்கிறார் பாக்யராஜ். அழகப்பா காதலித்த அழகி சரோஜாவோ (பாக்யராஜ் — சுமதி) வேறொரு பணக்கார வாலிபனைச் (சுதாகர்) காதலிக்கிறாள். ஆனால் அது தெரியும்வரை சரோஜாவைத் தன் காதலியாக எண்ணி அழகப்பா மகிழும் கட்டங்கள், புரியும் சேட்டைகள் 'சுபர்ப்'.

இப்படிக் கிளுகிளுப்பூட்டும் காதல் மலரை உதிர்த்த பாக்யராஜ் சட்டென்று பாதை மாறும்போது என்னவோ போலிருக்கிறது.

'பெற்ற குழந்தைகளின் பசியைப் போக்க, கணவன் ஓடிப்போய் விட்ட நிலையில் என் கற்பையே விலை பேசினேன் அது தவறா?' என்று வாதமிட்டுத் தன் செயலுக்கு நியாயம் தேடும் சரோஜாவின் அன்னை (சாருலதா)யின் பாத்திரம்—கதாநாயகி சரோஜா தன் தாயின் செயலால் வெட்கிக் குடும்ப கௌரவத்தையும் கண்ணியத்தையும் காக்க, தாய், சகோதரி, தம்பி, காதலன் எல்லோருக்கும் விஷமிட்டுத் தானும் மடியும் காட்சி — வறுமையின் உச்சத்தை விளக்கும் கோரமான முடிவுதான். கற்போடு கௌரவமாக வாழ முடியாது இந்தச் சமுதாயத்தில் என்று சாடுகிறாரா பாக்யராஜ்?

பாவாடைத் தாவணிப் பருவத்துக் கதாநாயகி சரோஜாவாக வரும் சுமதியின் கள்ள மற்ற சிரிப்பிலே நாம் மகிழ்கிறோம். அவர் சிந்தும் கண்ணீரிலே நாமும் கரைகிறோம்.

தையற்காரராக வரும் கவுண்ட மணி நல்ல கலகலப்பூட்டுகிறார். கதையோடு இணைந்த ஹாஸ்யம்.


குமுறிக் கொதித்திருக்க வேண்டிய கட்டங்களில் சுதாகர் என்னவோபோலிருக்கிறார்.

காமிரா கண்ணியமாகவும் இசை இனிமையாகவும், பாக்யராஜின் வசனங்கள் பசுமையாகவும் இந்தச் சித்திரங்களுக்கு அழகூட்டுகின்றன.

சித்திரங்களுக்குச் சுவர் இல்லாது போனாலும் நல்லவேளை திரை இருக்கிறதே!

-கௌசிகன்

X-RAY > ஜெகஜீவன்ராம்



எதிர்காலப் பிரதமர் (?)

'யோக்கியதாம்சங்கள்' என்ற அளவு கோலில் அளந்தால் தற்போதைய இந்திய அரசியல் மைதானத்தில், பிரதமர் பதவிக்குப் போட்டியிடும் இந்திரா, சரண் சிங்கைவிட ஜெகஜீவனுக்குத்தான் தகுதிகள் அதிகம் என்று எவரும் கூறிவிடுவர். மற்ற இருவரும் பிரதமராக இருந்தால் எப்படி செயல்படுவார்கள் என்பது மக்களுக்குத் தெரிந்த நிலையில், ஜெகஜீவன் அப்பதவியில் எப்படிச் செயல்படுவார் என்கிற எதிர்பார்ப்பு அவருக்கு ஒரு கூடுதல் தகுதியையும் அளிக்கிறது.

சாதுவான முகம். அதிக ஆர்ப்பாட்டமில்லாத அசைவுகள். மனநிலையைச் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்குக் 'கல்லுளி மங்கன்' போன்ற இறுகலான முக பாவம். மெதுவாக அசை போட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் குணவாகு — இவை ஜெகஜீவனின் உடன் பிறப்புக்கள்.

1963ம் ஆண்டு காமராஜ் திட்டப்படி வெளியே இருந்த சிறிய கால அளவைத் தவிர்த்தால், 1946ம் ஆண்டில் தமது முப்பத்தெட்டாவது வயதில் தொடங்கி மத்திய அரசு மந்திரி சபையில் மாறுபட்ட பல துறைகளில் அமைச்சர் பதவியைத் தொடர்ந்து வகித்து வரும் ஒரே அரசியல் தலைவர் என்கிற பெருமை ஜெகஜீவனுக்கு மட்டுமே உண்டு. அதோடு அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி, நிர்வாக அதிகாரிகளாலும், 'சிறப்பான நிர்வாகத் திறமை உள்ளவர்' என்று போற்றப்படுபவர்.

அம்பேத்காருக்குப் பிறகு அரிஜனங்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்று முன்னணியில் இருக்கும் அவர்களின் பிரதிநிதி.

இவ்வளவு சிறப்பு அம்சங்கள் இருந்தும் அவர் ஏன் இதுவரை பிரதமராகவில்லை என்ற கேள்வி எழுந்தால் அதுதான் ஜெகஜீவனின் குறை. மனுஷனுக்குப் பிரதமராக வேண்டும் என்ற ஆசைக்கு ஒரு குறைச்சலும் இல்லை. 'வழ வழா, கொழ கொழா' சுபாவமும், தமது ஆதரவாளர்களிடம் கூடத் தம் மேல் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவிக்கத் தவறும் செயல்படு விதமும் ஜெகஜீவனை இந்நிலையில் வைத்துள்ளன.

எமர்ஜென்ஸியின்போது, இந்திராவை எதிர்க்கத் துணிவின்றி ஒத்துப்போனவர், ஆனாலும் ஜனதா உதயம் ஆனபிறகு துணிந்து இந்திராவிடமிருந்து வெளிவந்து ஜனநாயக காங்கிரஸ் தோற்றுவித்து, ஜனதாவுடன் இணைந்து செயல்பட்டு இந்திராவை வீழ்த்தி, சரித்திரம் படைக்க உதவியவர் என்ற பெருமை உண்டு.

சஞ்சய் காந்தி, காந்தி தேசாய் போன்று சுரேஷ்பாபு என்று ஜெகஜீவனுக்கும் ஒரு 'தலைவலி' உண்டு.

ஜெகஜீவன்ராம் பத்தாண்டு வருமான வரி கட்ட மறந்தவர். அவரைப் பிரதமராக்குவது சரியல்ல என்பது எதிர்க் கட்சிகளின் ஒரு வாதம்.

'ஜெகஜீவன்ராம் அமெரிக்க ஏஜெண்ட்' என்பது சரண் சிங், ராஜ் நாராயணனின் ஆதாரமற்ற புதிய கண்டுபிடிப்பு.

'இதோ கட்சி மாறப் போகிறார், மாறிக் கொண்டிருக்கிறார், தாவ அடி யெடுத்து வைத்துவிட்டார்' என்றெல்லாம் வதந்திகளைக் கிளப்பி விட்டவர்களின் வாயில் இதுவரை மண்ணை அள்ளிப் போட்டு வந்திருக்கிறார் ஜெகஜீவன் ராம். தேர்தல் மிகவும் நெருங்கி விட்டதால் இனி கட்சி தாவும் படலங்கள் தேர்தல் முடிந்த பிறகுதான் மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

— பி. ரங்கநாயகி

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேசியக் காசு